
MADRAS

# திருக்கோயில்


"என்கடன் பணி செய்து கிடப்பதே"



வள்ளி தெய்வயானை சமேத
திருமுருகப்பெருமான்

மாலை 9] பிலவங்க - ஆடி - ஆகஸ்ட்டு, 1967 [மணி 11

சென்னை அரசாங்க அறநிலையப்



குலச்சிறை நாயனர் வழிபட்ட மணமேற்குடி ஜெகதீசுவரர் கோயில் கும்பாபிஷேக விழாவில், கோயில் முகப்புத்தோற்றம் (27—4—67).

## பொருளடக்கம்


1. திருக்குறளும் சைவமும்
2. விடை தெரியுமா ?
3. விடை விளக்கம்
4. சொல்லில் தத்துவம்
5. கல் வெட்டைக் காத்திடுங்கள்
6. ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாஹம்
7. ஞானசித்தர்களும் சித்த மருந்தும்
8. மதிப்புரைகள்
9. திருக் கழுக்குன்றச் சிறப்பு
10. கோயில்கள்
11. நன்றி மறவேல்
12. எதிரில்லாத உறவு


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/-

தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 9] பிலவங்க-ஆடி-ஆகஸ்ட், 1967 [மணி 11


# திருக்குறளும் சைவமும்

முன்னுரை :

அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழிக்கண் உள்ள அரும்பெறல் நூல்கள் அனைத்துள்ளும், தலை சிறந்த பெருமாட்சிமை உடையதாகத் திகழ்வது திருக்குறள்! ''கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம் முகத்தாற் கொண்டார்'' எனச் சேக்கிழார் கூறுவதுபோல, நாமும் திருக்குறளின் அருமை பெருமைகளை எத்தனையோ பல வகைகளில் ஆராய்ந்தறிந்து இன்புறலாம். ''திருக்குறளும் சைவ சமயமும்'' என்ற தலைப்பில் ஆராய்தலும், அவற்றுள் ஒரு வகையாகும்.

திருக்குறள் இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம்ஆண்டுகளுக்கு முற்பட்டது. அந்நாளில் இந்நாளைய சமயங்கள் எல்லாம் இருந்தனவா? என்பது போன்ற ஆராய்ச்சியில், இப்போது நாம் ஈடுபடுதல் வேண்டுவதில்லை.

''எல்லாப் பொருளும் இதன்பால் உள;
இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்''

என்பது திருவள்ளுவமாலைச் செய்யுளாதலின், திருக்குறளின்கண் சைவம் முதலிய பல சமயங்களின் கருத்துக்களும், ஏற்ற பெற்றி அமைந்திருத்தல் கூடும் என நாம் கொள்ளலாம்.

சர் ஜான் மார்ஷல் :

'இற்றைக்கு ஏறத்தாழ 20,000 ஆண்டுகட்கு (Chalcolithic age) முற்பட்டதாய், இன்று வரை உயிர்ப்பாற்றலுடையதாய் நிலவி வரும் பழம்பெரும் சமயம் சைவசமயமே' எனச் சர் ஜான் மார்ஷல் என்னும் பேரறிஞர் நடுவுநிலை பிறழாது ஆராய்ந்து நவின்றிருத்தலால், திருவள்ளுவர் வாழ்ந்து திருக்குறள் இயற்றிய காலத்தில் 'சைவசமயம்' அதன் தொன்மைத் தன்மை நிலையில் இருந்திருத்தல் கூடும் என்பது தெளிவு. மேலும் பிற சமயங்களைப் போல வடக்கே இருந்தோ, மேற்கே இருந்தோ, புதியதாக வந்து புகுதாமல், தமிழகத்திற்கே யுரியதாய், (Autochthonous religion) அதன்கண் தொன்றுதொட்டே நிலவிவருதலாலும், திருவள்ளுவர்க்கும், அவர் இயற்றிய திருக்குறள் நூலுக்கும், சைவசமயம்ஓரளவு மிக நெருங்கிய தொடர்புடையது என்பது பெறப்படும்.

கல்லாடர் :

சைவப் பெருங்கவிஞர் ஆகிய கல்லாடர் என்பவர், கல்லாடம் என்னும் தம் நூலின்கண் குறிப்பிட்டிருப்பது போல், திருவள்ளுவர் ''சமயக் கணக்கர் மதிவழிகூறுது, உலகியல் கூறிப் பொருள் இது என்றவர்''

*மதுரைத் திருவள்ளுவர் கழக வெள்ளி விழாவில், அருட்டிரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது (9—7—67).

என்பது உண்மையே ஆயினும், தெய்வப் புலவர் ஆகிய அவர் அருளிய திருக்குறளில், அவரவர் விரும்பும் சமயக் கருத்துக்களையும் குறிப்புக்களையும் கண்டு மகிழத் தக்க வாய்ப்பு உள்ளது. திருவள்ளுவர் சமய வாதமும் பேதமும் கடந்தவர்; சமரச ஞானச் சான்றோர் என்பது அனைவரும் ஒப்ப முடிந்த உண்மை. ஆதலின், அவர் அருளிச் செய்த பெருநூலில் பல வேறு சமய உண்மைகளும் விளங்கக் காணலாம். அம்முறையில், திருக்குறளுக்கும் சைவ சமயத்துக்கும் உள்ள ஒரு சில இயைபுகளை மட்டும், ஈண்டு இயன்ற அளவு சுருங்கக் காண்போம்.

### திருக்குறளும் சிவபிரானும்

திருக்குறளுக்கும்,சைவசமயத்துக்கும்மிக நெருங்கிய இயைபு உண்டு. திருக்குறளை நினைத்தால் சிவபிரானையும், சிவபிரானை நினைத்தால் திருக்குறளையும் இயைத்தே நினைவு கூரும் வகையில்,பற்பல ஒப்புமைப் பண்புகள் காணப்படுகின்றன. சிவபிரான் தனக்கு உவமையில்லாதவர்; திருக்குறளும் தனக்கு உவமையில்லாத தனிப் பெரும் சிறப்பு உடையது. அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாயும், வேருயும் விளங்குபவர் சிவபெருமான்; அவ்வாறே திருக்குறளும் அறுவகைச் சமயக் கொள்கைகளைக் கூறுவதாயும், அவற்றிற்கு அப்பாற்பட்டதாயும் விளங்குகின்றது. சிவபெருமான் நூல்களின் எல்லையை எல்லாம் கடந்தவர்; அவ்வாறே திருக்குறளும் எல்லா நூல்களிலும் மேம்பாடு மிக்கது. சிவபிரான் உயிர்களின் அறிவினில் அருளால் மன்னிநலம் செய்பவர்; திருக்குறளும் நம்மனோர் அறிவினில் அருளால் மன்னி நலம் செய்வது. உயிர்களுக்கெல்லாம் அம்மையும் அப்பனுமாக விளங்கி அருள்புரிபவர் சிவபெருமான்; அங்ஙனமே திருக்குறளும் ஒரு வகையில் நம்மனோர்க்கு அம்மையாயும் அப்பனுயும் திகழ்கின்றது. எல்லாப் பொருள்களிலும் கலந்து செறிந்து நிற்பவன் சிவபெருமான்; அங்ஙனமே எல்லாப் பொருள்களும் நிறைந்து செறிந்து திகழ்கின்றது திருக்குறள்!

'அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய், வேருய்
குறியது உடைத்தாய், வேதா
கமங்களின் குறி இறந்து, அங்கு
அறிவினில் அருளால் மன்னி,
அம்மையோடு அப்பன் ஆகிச்,
செறிவொழி யாது நின்ற
திருக்குறள் சென்னி சேர்ப்பாம்!

—சிவஞான சித்தியார்,
தழுவற் செய்யுள்.

### சிவப்பிரகாசர் :

திருவள்ளுவரையும் திருக்குறளையும் எத்தனையோ புலவர்கள், எத்தனையோ பல வகைகளில் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். ஆயினும், அவற்றுளெல்லாம், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் புகழ்ந்து பாடியிருக்கும் முறை, பெரிதும் வியந்து மகிழத் தக்கதாகத் திகழ்கின்றது.

திருக்குறளின் சிறப்பை விளக்க, அவர் ஓர் உவமை கூற நினைக்கின்ருர். திருக்குறளோ ஒப்புயர்வு இல்லாததாய்த் தனிப் பெரும் சிறப்புடையதாக விளங்குகின்றது. அதனுல் திருக்குறளின் சிறப்பை விளக்க ஓர் உவமையைக் கூட எடுத்துக்காட்ட அவரால் இயலவில்லை. அவர் நீள நினைந்து ஆராய்ந்து பார்க்கின்ருர். தனக்கு உவமையில்லாத திருக்குறளுக்குத் 'தனக்குவமை இல்லாதான்' ஆகிய இறைவனையேதான் உவமை கூறிவிடலாமே என, அவர் முடிவாக ஒருவகை முடிவுக்கு வருகின்ருர்.

வீர சைவராகிய தாம், சிவபிரானை எத்தகைய நிலையில் மதித்து வணங்கிப் போற்றுவாரோ, அத்தகைய நிலையிலேயே வைத்துத் திருக்குறளையும் அவர் போற்றிப் புகழ முற்படுகின்ருர். திருக்குறளைச் சிவம் எனவே சிந்தித்து வந்திக்கின்ருர் அவர்! திருக்குறளின் இரண்டு அடிகளையும், சிவபிரானின் இரண்டு திருவடிகள் எனவே கருதி அவர் மகிழ்கின்ருர். திருக்குறளின் அடிகளுக்கும், சிவபிரானின் அடிகளுக்கும் இடையே உள்ள ஒப்புமைத்தன்மை, இரண்டு என்ற எண்ணிக்கையில் மட்டுமே அமைந்திருப்பதாக அவர் கருதிற்றிலர். மற்றும் ஓர் அழகிய பொருத்தமும் அமைந் திருப்பதாக, அவருக்குப் படுகின்றது.

### மாதியலும் பாதியர் :

திருக்குறளின் முதல் வரியானது நான்கு சீர்களால் இயன்று சிறிதுநீண்டும், இரண்டாம் வரியானது மூன்று சீர்களால் அமைந்து சிறிது குறுகியும், இருத்தலை

நாம் அறிவோம். இவ்வியல்பு சிவபிரானின் திருவடிகளிலும் இனிது பொருந்தியிருத்தலை, அவர் எண்ணி எண்ணி மகிழ்கின்றார். சிவபெருமான் ஆணும் பெண்ணுமாக, அம்மையும் அப்பனுமாக, அர்த்தநாரீசுவரமூர்த்தம் கொண்டு விளங்குபவன். மாணிக்கவாசகர் ''தொன்மைக் கோலம்'' என, அர்த்த நாரீசுவரர் (மாதியலும் பாதியர்) திருவுருவத்தைப் புகழ்ந்து போற்றுகின்றார். அத்திருவுருவத்தில் ஆண் பாற் பகுதிக்குரிய வலக்கால் சிறிது நீண்டும், பெண்பாற் பகுதிக்குரிய இடக்கால் சிறிது குறுகியும் இருக்கும்.

சிவபெருமானின் இரு திருவடிகளுக்கும் உரிய இவ்வியல்பு, திருக்குறளின் இரு வரிகளுக்கும் கூட, இனிது பொருந்தி அமைந்திருப்பதனை நினைந்து நினைந்து, சிவப்பிரகாசர் மகிழ்ந்து இன்புறுகின்றார். இங்ஙனம் திருக்குறளின் பெருமையினைப் பொருத்தமுற உணர்ந்து வியக்கும் சிவப்பிரகாச சுவாமிகள், திருவள்ளுவரையே தம்முடைய குருவாகவும், தெய்வமாகவும் மதித்துத் துதித்துத் தொழுகின்றார்.

''என் அடிகள்
வெண்குறள் நேர்
அடி யிரண்டும்
என் தலைமேல்
இருத்தும் இறை
வெங்கைநாட்டில்...''

எனவரும் திருவெங்கைக் கலம்பகச் செய்யுட் பகுதியில், திருவள்ளுவரை 'என் அடிகள்' (என்னுடைய தெய்வம், ஞானாசிரியர்) என்றும்; அவர் இயற்றிய திருக்குறளை 'வெண்குறள்' என்றும்; இறைவன் ஆகிய சிவபெருமானின் திருவடிகளை 'வெண்குறள் நேர்' (திருக்குறளின் இரண்டு வரிகளைப் போன்ற) அடி இரண்டு' என்றும், துறைமங்கலம் சிவப்பிரகாசர் சுருக்கமாகவும், நுணுக்கமாகவும் குறிப்பிட்டிருத்தல், அறிந்து இன்புறற்பாலது. திருக்குறளுக்கும் சைவ சமயத்துக்கும் உள்ள தொடர்பினை விளக்குதற்கு இதனிலும் சிறந்த சுவைமிக்கதொரு நற்குறிப்பும் உண்டோ!

சமரச ஞானம் :

திருக்குறள் சமய சமரச ஞான நூல் என்பர். சைவ சமயமும், சமய சமரச ஞானமாய்த் திகழ்வது! சைவசமய உண்மைகளையும் கொள்கைகளையும் வரையறுத்து வகுத்துணர்த்திய சைவசித்தாந்த நூலாசிரியர்களுள் தலைசிறந்தவராகிய அருள்நந்தி சிவாசாரியர்,

''இது ஆகும், அது அல்லது
எனும் பிணக்கது இன்றி,
நீதியினால் இவை எல்லாம்
ஓர் இடத்தே காண
நின்றது யாதொரு சமயம்,
அது சமயம்...''

எனத் தெளிவுற வலியுறுத்திக் கூறியிருத்தலால், சைவசமயம் பிற சமயங்களை இகழாது ஏற்றுத் தழுவிக் கொள்ளும் இயல்பு உடையது, என்னும் உண்மை தெளிவுற விளங்கும்.

அறம் முதல் நான்கு :

இம்மட்டோ! திருக்குறள், அறம்பொருள் இன்பம் என்னும் மூன்றனையும் ஆராய்ந்து உணர்த்தி, அவற்றின் பயனாகிய வீடுபேற்றைக் குறிப்பாற் புலப்பட விளக்குகின்றது. ''முப்பாலில் நாற்பால்'' மொழிந்ததுஎனத் திருக்குறளை அறிஞர்கள் சிறந்தெடுத்துப் போற்றுவர். திருக்குறள் விளக்கும் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கினையும், ஏற்றுப் போற்றி இனிது மகிழ்வது சைவ சமயம்!

''அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு
அறம் பொருள் இன்பம் வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி
மேயது முதுகுன்றே''

எனவரும் தேவாரத் திருப்பாடலும்,

''அருந்தவருக்கு அறம் முதல் நான்கு
அன்று அருளிச் செய்திலனேல்,
திருந்த அவருக்கு உலகியற்கை
தெரியா காண் சாழலோ''

எனவரும் திருவாசகப் பாடலும் பிறவும், ஈண்டு நாம் பெரிதும் சிந்தித்துத் தெளிதற்கு உரியன.

அடிப்படை நூல் :

திருக்குறள் சைவசமயத்தின் அடிப்படைப் பிரமாண நூல்களுள் ஒன்று. சைவசமயம் திருக்குறளுக்குச் சிறிதும் முரண்படாமல் அதனை முழுவதும் தழுவி ஒழுகும் வகையில் அமைந்துள்ளது. சைவசித்தாந்தமானது, திருக்குறள் ஆகிய தமிழ் வேதத்தையும், திருமந்திரம் ஆகிய சிவாகமத்தையும் அடிப்படையாகக் கொண்டு, திருமுறை

களின் ஞானுனுபவப் பிழிவாகத் திகழ்வதே யாகும். இவ்வுண்மையினே,

''வேதம் பசு; அதன்பால் மெய் ஆகமம்; நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளூறும் நெய்; —போதமிகு
நெய்யின் உறுசுவையாம்; நீள் வெண்ணே மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்''
—உமாபதிசிவம்

''தேவர் குறளும், திருநான் மறைமுடிவாம்
மூவர் தமிழும், முனிமொழியும்—கோவை
திருவா சகமும், திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்று உணர்''
—அவ்வையார்

எனவரும் திருப்பாடல்கள் கொண்டும் தெள்ளிதின் உணரலாம்.

சம்பந்தர் :

திருக்குறளின் சொற்பொருட் கருத்துக்களில் மிகவும் ஈடுபட்டு, அவற்றைப் பெரிதும் போற்றிச் சைவசமய ஆசிரியர்கள் மிகவும் மகிழ்ந்துள்ளனர்.

''அகர முதலானே அணிஆப்ப னூரானேப்
பகரும் மனமுடையார் வினேபற் றறுப்பாரே''

''ஆறினுர் ஐயுணர்வு அகத்து மெய்
தேறினுர் வாழ்தென் குடித்திட்டையே''

''நன்றியால் வாழ்வது உள்ளம்''

''அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்று
ஐம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையோர் தம் உள்ளப் புண்டரிகத்துள்
இருக்கும் புராணர் கோயில்''

எனவரும் திருஞான சம்பந்தர் தேவாரப் பாடல்களில், திருக்குறளின் சொற்பொருட் கருத்துக்கள் பலவும், செறிந்திருத்தல் காணலாம்.

சுந்தரர் :

இங்ஙனமே, ''அகரமுதலின் எழுத்தாகி நின்ருய் அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே'' ''பொறிவாயில் இவ் வைந்தினேயும் அவியப் பொருதுன் அடியே புகும் சூழல் சொல்லே'' என்பன போன்ற சுந்தரர் தேவாரப் பாடல்களிலும், திருக்குறட் சொற்ருெடர்களும் கருத்துக்களும் பயின்றிருத்தல் பலரும் அறிந்தது.

மாணிக்கவாசகர் :

இவ்வாறே நமது மாணிக்கவாசகரும், தமது திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரு பெருநூல்களிலும் எத்தனேயோ பற்பல திருக்குறள்களே எடுத்தாண்டிருக்கக் காண்கின்ருேம். அவையனேத்தையும் ஈண்டு எடுத்துக்காட்டுதல் இயலாது ஆதலின், தாலிபுலாக நியாயம் பற்றி, ஒருசான்று காட்டுதலே அமையும். ''பிறவிப் பெருங்கடல் நீந்துவர்'' என்னும் திருக்குறளின் ஏக தேச உருவகத்தினேயே, மாணிக்க வாசகர் ''தனியனேன் பெரும் பிறவிப் பவ்வத்து எவ்வத் தடம் திரையால்'' எனத் தொடங்கும் திருவாசகப் பாடலில் முற்றுருவகமாக விரித்துரைத்துச் சுவை மிக விளக்கியிருத்தல் உணர்ந்து மகிழ்தற்கு உரியது.

திருநாவுக்கரசர் :

ஏனைய சைவசமய ஆசிரியர்களேப் போலவே, திருநாவுக்கரசரும் திருக்குறளில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்; அதனே நன்கினிது பயின்று மகிழ்ந்தவர்; அதன் சொற்பொருட் சுவை நலங்களில் ஆழ்ந்து திளேத்தவர் எனலாம்! திருவாரூர்ப் பழமொழித் திருப்பதிகத்தில், திருநாவுக்கரசர் ''இனிய உளவாக இன்னுத கூறல்'' என்னும் திருக்குறளே எடுத்தாண்டுள்ளார். ''எண்குணத்தான் தாளே வணங்காத் தலே'' என்னும் திருக்குறட் சொற்ருெடரின் விரிவுரையாக அமைந்திருப்பதே, திருநாவுக்கரசர் அருளிய ''திருஅங்கமாலே'' என்னும் திருப்பதிகம்!

திருத்தாண்டகம் :

இனி, இங்கு வேறு ஒரு செய்தியும் இயைபுடைமை பற்றிக் கருதுவதற்கு உரியது. திருக்குறளில் உள்ள 'கடவுள் வாழ்த்து' என்னும் பகுதியைத் திருவள்ளுவர் இயற்றினுரல்லர்; அதனேப் பிற்காலத்தார் வேறு எவரோ இயற்றிச் சேர்த்திருத்தல் வேண்டும் எனச் சிலர் கூறுவர். இக்கூற்றுச் சிறிதும் ஏற்புடையதன்று என்பதும் திருநாவுக்கரசர் தேவாரத்தால் புலனுகின்றது. தமிழ்நாட்டின் ஞானத்தவ முனிவராகிய திருநாவுக்கரசர், திருக்குறளேப் பெரிதும் போற்றினுர்; அதன்கண் மிகவும் ஈடுபட்டார்; திருக்குறட் கருத்துக்கள் பலவற்றைத் தமது தேவாரப் பாடல்களால் தெளிவுற விளக்கியருளினுர்; என்பதற்குரிய சான்றுகள் அவர்தம் பாடல்களில் காணப்படுகின்றன!




தெய்வப்புலவர் திருவள்ளுவ நாயனர்

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்;
மூர்த்தி அவன்இருக்கும் வண்ணம்கேட்டாள்;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்;
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்;
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்;
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்;
தன்னை மறந்தாள்; தன்நாமம் கெட்டாள்;
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!''

என்பது திருநாவுக்கரசரின் புகழ்மிக்க திருத்தாண்டகங்களுள் ஒன்று. இது திருக் குறட் கடவுள் வாழ்த்துப் பகுதியின் கருத் தைச் செவ்விதிற் சுவைபட விளக்குகின் றது எனலாம். திருவள்ளுவர் பத்துக் குறள்களால்—இருபது வரிகளால்—விளக் கிய கருத்துக்களையே, திருநாவுக்கரசர் ஒரே பாடலால்—எட்டுவரிகளில்—சுருக்கி விளக்கியருளிய திறம் வியக்கற்பாலது!

பிரேம நிலை :

மேலும் திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்து ஞான நிலையைச் சார்ந்தது; திரு நாவுக்கரசர் பாடலோ பிரேமநிலை வாய்ந் தது. ஞான நிலையினும், பிரேம நிலை உயர்ந்ததாகும். கல்வியறிவு பெறாத கண் ணப்பரை, ஞானத்தின் திருவுருவாய் நான் மறையின் தனித்துணையாய் விளங்கிய திரு ஞான சம்பந்தர், திருக்காளத்தியில் வீழ்ந் தெழுந்து பலமுறையும் வணங்கி நின்றார் என்றும்;

''ஞானம் ஈசன்பால் அன்பே
என்றனர் ஞானம் உண்டார்''

என்றும் பெரியபுராணம் கூறுதல், இவ் வுண்மையை வலியுறுத்தும். ''ஞானநிலை யில் தன் பேச்சு, பிரேம நிலையில் பெண் பேச்சு'' என்று நம்மாழ்வாரின் பாடல்களைப் பற்றி வைஷ்ணவப் பேரறிஞர்கள் கூறுவர். அம் முறையில், திருநாவுக்கரசரின் இந்தத் திருத்தாண்டகம், பிரேம நிலையில் ஒரு பெண்ணின் பேச்சாக அமைந்திருத்தல், அறிந்து மகிழ்தற்குரியது.

திருத்தாண்டகத்தில் திருக்குறள் :

திருநாவுக்கரசரின் இந்தத் திருத்தாண் டகம், ஆசிரியர் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தாகக் கூறிய பத்துக் குறள்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, அவற்றின் தெளிவார்ந்த தீம்பிழிச் சாரமாய், மிக்க சுருக்கமும் சுவைநலமும் வாய்ந்து திகழ் கின்றது.

(1) திருவள்ளுவர் 'ஆதிபகவன்' எனக்குறித் ததனையே திருநாவுக்கரசர் 'அவனுடைய நாமம்' என்கின்றார். (2) திருவள்ளுவர் 'வாலறிவன்' என்றதனைத் திருநாவுக்கரசர் 'மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம்' என் கின்றார். (3) திருக்குறள் 'மலர் மிசை ஏகி னான்' என்பதே, திருநாவுக்கரசரால் 'அவ னுடைய ஆரூர்' எனப்பட்டது. (4) திருக் குறளில் 'இறைவன் பொருள்சேர் புகழ் புரிதல்' எனப்பெற்ற கருத்து, 'அவனுக்கே பிச்சியானாள்' எனக் குறிப்பிடப் படுவதா யிற்று. (5-6) ''வேண்டுதல் வேண்டாமை இலானை'' என்பதும், ''பொறிவாயில் ஐந்த வித்தல்'' என்பதும் 'அன்னையையும் அத் தனையும் அன்றே நீத்தல்' ஆக உருவகம் செய்யப்பட்டன. (7) தனக்குவமை இல் லாதான் தாள் சேர்ந்து மனக்கவலை மாற் றலே, 'அகலிடத்தார் ஆசாரம் அகலுதல்' எனச் சுட்டப் பெறுவதாயிற்று. (8) பொரு ளும் புகழும் ஆகிய பிறவாழி நீந்துதலே 'தன்னை மறத்தல்' ஆகும். (9) எண்குணத் தான் தாளை வணங்கிப் பசுகரணங்கள் சிவ கரணங்களாக மாறப்பெறுதலும் பிறவுமே, 'தன் நாமம் கெடுதல்' ஆகும். (10) பிறவிப் பெருங் கடல் நீந்தி இறைவன் அடிசேர் தலே 'தலைவன்தாள் தலைப்படுதல்' எனத் திருவள்ளுவரின்அடியொற்றித் திருநாவுக் கரசரால் குறிக்கப் பெற்றுத் திகழ்கின்றது.

கடவுள் வாழ்த்து :

திருக்குறள் போன்ற நூல்களை ஆராய்ந்து உணர்தற்கும், சைவத்திரு முறைகள் பயன்படுதலை இதனால் நன்கு இனிது தெளியலாம். திருவள்ளுவரும் திருநாவுக்கரசரும் தமக்குள் எத்தகைய ஆன்மீக அறிவுத் தொடர்புகள் உடைய வர் என்பதும், 'திறக்குறட் கடவுள் வாழ்த்து ஆசிரியர் திருவள்ளுவர் இயற் றியதன்று'என ஒருசிலர் கூறுவது பொருந் தாது என்பதும், திருக்குறள் சைவ சித் தாந்தச் செந்நெறிக்குச் சிறிதும் முரண் படாமல் இயைந்த முழுமுதற் பெருநூலே ஆகும் என்பதும், இவ்வாற்றால் யாவரா லும் செவ்விதில் தெளியப்படும்.

உரை வளம் :

'திருக்குறளும் சைவமும்'என்னும் தலைப் பில், வேறு சில சுவைமிக்க செய்திகளையும் நாம் கருதி உணர்தல் கூடும். திருக் குறள் உலகப் பெரும் இலக்கியங்களுள் ஒன்றாக, ஒப்புயர்வற்றுத் திகழ்வது! பழ மைக்குப் பழமையாகவும்,புதுமைக்குப் புது

மையாகவும், திருக்குறள் பொலிந்து விளங்குகின்றது! மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு, அதன்கண் பல அதிநுட்ப மான கருத்துக்கள், தொட்டனைத் தூறும் மணற்கேணி போலச் சுரந்து கொண்டே இருக்கும். ஆராயப் புகுவோரின் அறிவு நிலைக்கும் மன நிலைக்கும் ஏற்பப் பற்பல புதிய புதிய கருத்துக்கள், அதன் கண் சுடர்விட்டு மிளிரும்.

அதனாலேயே தருமர்மணக்குடவர்தாமத் தர் நச்சர் பரிதி பரிமேலழகர் முதலிய, எத் தனையோ எண்ணிறந்த பேறிஞர்கள் பலர் திருக்குறளுக்கு உரைவளம் காணத்தலைப் பட்டனர். பிரம்ம சூத்திரம், பகவத்கீதை போன்ற பெருநூல்களுக்குப் பற்பலர் தத் தம் கருத்துக்களுக்கு இயைய உரைகண்டு, ஏற்றபெற்றி விளக்கியிருத்தலைப் போல, நமது திருக்குறளுக்கும் நாம் பலவகைச் சிறந்த உரைவிளக்கங்கள் காணலாம். திருக்குறள் எல்லாச் சமயத்திற்கும் உரிய பொது நூலே ஆயினும், சைவசமய நோக் குக் கொண்டும் அதற்கு ஏற்ற பெற்றி இனிய உரைத்திறம் வகுக்க இடனுண்டு. சைவசமய உணர்வுக்கண் கொண்டு நோக் கினால், திருக்குறட் கடவுள் வாழ்த்துப் பகு திக்குப் பின்வருமாறும் பொருள் விளக்கம் செய்தல் கூடும்.

திருக்குறளிற் சிவபிரான் :

சைவசமயம் என்ற அளவில், சிவபிரான் அம்பிகை விநாயகர் முருகர் நடராசர் தட் சிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திர சேகரர் என்னும்பல்வேறு சைவத்தெய்வத் திருவுருவங்களும், அவற்றைப் பற்றிய பல தத்துவக் கருத்துக்களும், நம்மனோர் மனத் தில் எழுதல் இயல்பு. திருக்குறட்கடவுள் வாழ்த்துப்பாடல்களில்,அத்தெய்வங்களைப் பற்றிய குறிப்புக்களும் அமைந்திருப்பன வாக, ஓர்ந்து உணர்தல் கூடும்.

(1) ஆதிபகவன் என்னும் தொடருக்கு 'ஆதிசக்தியோடு கூடிய சிவபிரான்' எனப் பொருள் கொள்ளலாம்; அல்லது, எச்செய லைத் தொடங்கினும் முதற்கண் தொழுவ தற்குரிய 'முதற்கடவுள் ஆகிய விநாயகர்' எனவும், நாம் பொருள் கொள்ளுதல் பொருந்தும்.

(2) 'வாலறிவன்' என்னும் தொடர், ஏற் புழிக் கோடல் என்னும் உத்தியால், தந்தைக்கு ஞானோபதேசம் புரிந்த மைந்த ராகிய முருகன் எனும் நம்தமிழ்க் கடவுளைக் குறிப்பதாகக் கருதலாம். ஞானந்தான் உருவாகிய நாயகன், ஞானபண்டிதசுவாமி எனப் பெரியோர்கள் முருகனைப் புகழ்ந்து போற்றித் துதித்திருத்தல் காணலாம்.

(3) 'மலர்மிசை ஏகினன்' என்பது உல கமே வியந்து போற்றும் கலைப்பெருந் தெய்வமாகிய கூத்தப்பெருமான் என்னும் நடராசரைக் குறிக்கின்றது எனலாம். அன் பர்களின் நெஞ்சைப்பை (Heart) ஆகிய மல ரில் விளங்கி, அதன் துடிப்பாகிய திருநட னத்தினை இயற்றிக் கொண்டிருப்பவன் கூத்தப்பெருமான். மனித உள்ளத்தில் நெஞ் சப்பைஆகியமலரில், வியத்தகும் முறையில் இடைவிடாமல் நிகழும் துடிப்பையும் இயக் கத்தையுமே, அருளாளர்கள் ஆகிய ஞானச் செல்வர்கள், தில்லைச் சிற்றம்பலத்தில் நிக ழும் 'இறைவனின் திருநடனம்' என்று குறிப்பிட்டு வியந்து புகழ்ந்து போற்றி மகிழ்கின்றனர்.

(அ) தாமரை மொட்டுப் போன்ற நெஞ் சப் பையின் அமைப்பு - ஓங்காரம்.

(ஆ) நெஞ்சப் பையில் விளங்கும் மின் னொளி - இறைவன்.

(இ) மின்னொளியின் அசைவு - திரு நடனம்.

(ஈ) நெஞ்சப் பையில் விளங்குகின்ற மூல முதல் ஒலி - திருவடிச் சிலம்பொலி.

(உ) நெஞ்சப் பையின் சுற்று வடிவு - திருவாசிச் சுடரொளி.

இந்நுண் பொருட்கருத்துக்களை எண்ணி உணர்ந்தால், 'மலர்மிசை ஏகினன்' என்னும் இனிய தொடர், நடராசப்பெரு மானை உணர்த்துவதாக நாம் கொள்ளுதல் இயலும்.

(4) இறைவன் தனக்கென ஒரு விருப் பமோ வெறுப்போ இல்லாதவன். மக்கள் உலகியல் நலமுற நடத்தற் பொருட்டே இறைவன் போகியாகவும் யோகியாகவும் முறையே திகழ்கின்றான். இவ்வுண்மையை உணர்த்தும் 'காமதகனர்' என்னும் சிவ பிரான் திருவுருவையே, 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்னும் தொடர் சுட்டுவதாகக் கூறலாம்.

(5) பலரையும் பரிந்து ஏற்றுத் தழுவிப் பாதுகாத்து நலம்புரிபவனே தலைவன் அல்

ல்து இறைவன் எனப்படுவான். இந்நிலைமையைச் சுட்டும் வகையில், உலகியலிற் குடும்ப நல வாழ்வின் உயர்வையும் சிறப்பையும் உணர்த்துவது, சிவபிரானின் 'சோமாஸ்கந்த மூர்த்தம்' என்னும் திருவுருவமாகும். இறைவனாகிய குடும்பத்தலைவன், அம்பிகையாகிய மனைவியுடனும், கந்தனாகிய குழந்தையுடனும் ஒருசேர வீற்றிருந்து குலவி மகிழும் நிலையைக் குறிப்பதே, சோமாஸ்கந்த மூர்த்தம். இதனையே நமது திருவள்ளுவர் 'இறைவன்' என்று, ஐந்தாம் குறளில் குறிப்பித்தனர் எனலாம்.

(6) உலகில் எவன் பொறி புலன்களை அடக்கி வென்று, ஒழுக்க நெறியில் நிற்கின்றானோ, அவனே எல்லா ஆற்றலும் சிறப்பும் வெற்றிகளும் பெறுவான். புலன்களை வென்று, மனத்தை ஒருமுகப் படுத்த வல்லவனே உலகில் மேலானவனாவான். அவன் அடைய இயலாத நன்மைகள் எதுவும் இல்லை. இவ்வுண்மையைத் தெளிவுறுத்துவதே 'தென்முகக்கடவுள்' என்னும் தட்சிணாமூர்த்தியின் திருவுருவமாகும். இதனையே 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்னும் தொடர் சுட்டுகின்றது எனலாம்.

(7) உலகிற் சில மதங்கள் கடவுளை ஆணாகக் கருதுகின்றன. சில மதங்கள் பெண்ணாக வழிபடுகின்றன. சைவசமயமோ, கடவுளை ஆணும் பெண்ணுமாக, அம்மையும் அப்பனுமாக, ஒரு சேரக் கொண்டு போற்றுகின்றது. ஆணின்றிப் பெண்ணில்லை; பெண்ணின்றி ஆணில்லை. உலகியலின் நல்வாழ்வுக்கு ஆணும் பெண்ணும் இயைந்து நிற்றல் இன்றியமையாதது. இதனையே அர்த்த நாரீசுவர மூர்த்தம் இனிது உணர்த்துகின்றது. மாணிக்கவாசகர் இதனைத் 'தொன்மைக் கோலம்' என்கின்றார். அருள்நந்திசிவம் 'முதல் உரு' என அறிவுறுத்துகின்றார். குமர குருபர அடிகள் 'ஒருவர்-எந்தாய்' என்னும் செந்தமிழ்ச் சொற்களின் சிறப்பை இத்திருவுருவத்தினால் உணர்ந்து புலப்படுத்துகின்றார். இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றிலும் ஆணும் பெண்ணுமாகிய கூறுகள் யாண்டும் பிரிவற இயைந்தே நிற்கின்றன. இயற்கையோடு இயைந்த பெருஞ் சிறப்புடையதாய் ஒப்புயர்வற்றுத் திகழும் அர்த்த நாரீசுவரத் திருவுருவையே, 'தனக்குவமை யில்லாதான்' என்னும் திருக்குறட் சொற்றொடர் குறிக்கின்றது எனக் கொள்ளுதலில் இழுக்கில்லை.

(8) இறைவன் அருட்கடலாகவும், அறக் கடலாகவும் விளங்குகின்றான். அழகிய தட்பம் என்னும் இரக்கத்தின் வடிவாய் அவன் இலங்குகின்றான். அறவடிவினன் ஆகிய இறைவன், அறத்தினையே ஊர்தியாகக் கொண்டு எழுந்தருளிப் போந்து அடியவர்களுக்கு அருள்புரிகின்றான். அடியவர்களுக்கு அருள் செய்யும்போதெல்லாம், இறைவன் அறமாகிய வெள்விடையின் மீது இவர்ந்து வந்தே காட்சி நல்குகின்றான். இதனைச் சைவ சமய வரலாறுகள் அனைத்திலுமே காணலாம். எனவே அருள் செய்தற் கடவுள் ஆகிய ''ரிஷபாரூடர்'' (விடைப் பாகர்) என்பவரையே 'அறவாழி அந்தணன்' என்னும் தொடர் குறிக்கும் என்றல் அமையும்.

(9) 'எண்குணத்தான்' என்னும் தொடருக்குப் பலவகையிற் பொருள் கொள்ளலாம். 'எட்டுக் குணங்களை யுடையவன்'- 'எண்ணத் தகுந்த குணங்களைக் கொண்டவன்'-'எளிமை ஆகிய குணம் வாய்ந்தவன்' என இதற்குப் பல பொருள்கள் கூறலாம். சைவ சமயமானது, நிலம், நீர், தீ, வளி, விசும்பு, ஞாயிறு, திங்கள், உயிர் என்னும் எட்டுப் பொருள்களின் வடிவமாகவும் இறைவன் விளங்குகின்றான் என்னும் கொள்கையுடையது! இதனை 'அஷ்டமூர்த்தம்' எனச் சைவ நூல்கள் சாற்றும்.

''நிலம் நீர் நெருப்பு உயிர் காற்று
நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப்
புணர்ந்து நின்றானே...''

எனவரும் திருவாசகப் பாடலும்,

''இரு நிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமானனாய் எறியுங் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயிறு ஆகி
ஆகாசமாய் அட்டமூர்த்தி ஆகி...''

எனவரும் திருத்தாண்டகமும் இதனையுணர்த்தும். எனவே, எண்குணத்தான் என்னும் தொடர், இறைவன் அஷ்டமூர்த்தியாய் எண் வகையாய்ப் புணர்ந்து நிற்கும் இயல்பினை, அறிவிப்பதாகக் கோடல் அமையும்.

(10) மனிதர்கள் எவராயினும், தவறு செய்யும் இயல்புடையர்! மனிதன் செய்யும் தவறுகளைப் பொறுத்து ஆட்கொள்ளுதலே, இறைவனாகிய புனிதனின் சிறப்பி

யற் பண்பு. இறைவன் தன் அடியவர்கள் செய்யும் தவறுகளையும் குற்றங்களையும் பொறுத்துக் கொண்டு அருள் புரிகின்றான். இறைவனின் இவ் வியல்பை விளக்குவதே சந்திரசேகரர் என்னும் சைவத் திருவுருவ மாகும். தவறுகள் செய்து தக்கனின் சாபம் பெற்றசந்திரன், சிவபிரானைச்சார்ந்து அவர் தம் திருவடிகளில் சரண் அடைந்தான். தனது திருவடிகளைச் சார்ந்து சரண் அடைந்த சந்திரன்பாற் பரிவு கொண்டு, அவனது தவறுகளைப் பொறுத்து மன் னித்து, மிக்க பெரும் கருணையுடன் அவ னைத் தன் திருமுடியில் எடுத்து அணிந்து கொண்டு காத்தருளினார் 'சந்திர மவுளீசு வரர்' என்பது, சைவ வரலாறு.

தவறு செய்தவர்களையும் மன்னித்துக் காத்தருளும் தண்ணளி உடையவன் என் னும் தத்துவத்தை விளக்குவதே, சைவக் கோயில்களில் எல்லாம் வைத்து வழிபடப் பெறுகின்றசந்திரசேகரர் திருவுருவமாகும். அடியில் விழுந்து வணங்குபவரை முடியில் எடுத்து அணிந்து காப்பாற்றும் கருணைக் கடலாகிய சந்திரசேகரரையே, பிறவிக் கட லில் வீழ்ந்து வருந்துபவரை எடுத்து முத் திக் கரையில் சேர்க்கும் முழுமுதல் இறை வனாகத் திருவள்ளுவர் மொழிந்தருளினார் எனக் கருதுதல் சால்புடைத்தேயாம்.

•

நெற்றியிற் கண்ணுடை நிமலத் தெம்பிரான்
உற்றவர்க் கருள்புரி கின்ற உண்மையைத்
தெற்றென உணர்த்தல்போல், திங்க ளின்கலை
கற்றையஞ் சடைமிசைக் கவின்று பூத்ததே

—கந்தபுராணம்.

இலக்கிய எழில் நலன் :

இவ்வாறெல்லாம் கூறுதல், திருவள்ளு வர் கருத்தாகுமோ, இவற்றைத் திருவள் ளுவர் உடன்படுவாரோ, இதுகாறும் இங் ஙனம் எவரும் கூறக் கேட்டிலமே, இவை முழுவதும் அறவே புதியனவாக உள் ளனவே எனச் சிலர் ஐயுறுவர். இப்படித் தான் கூறவேண்டும் என்று வரையறுக்காமல், இப்படியும் கூறுதல் கூடும் எனக் குறிப்பிடுவதே, இங்கு நமது நோக்கம். இஃதொரு சுவைமிக்க இனிய நல்ல தற்குறிப்பேற்ற விளக்கமே யன்றிப் பிறிதன்று. எடுத்த பொருளைச் சிறப்பித்தல் (பிரதிக்ஞாஹேது நியாயம்) என்னும் முறை பற்றி இயம்பப் பெற்ற இவ்வொரு சில கருத்துக்கள், திருக்குறளின் ''நோக்கு'' (Suggestiveness) என்னும் இலக்கிய எழில் நலனையே, இனிது உணர்த்துவதாகும்.

''பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர்; நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்''

என்னும் திருக்குறளில் ''திருநீலகண்டம்'' என்ற புகழ்மிக்க திருவுருவினையும்,

''கூற்றம் குதித்தலும் கைகூடும்; நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு''

என்னும் திருக்குறளில் 'காலசம்ஹாரம்' என்னும் திருவுருவினையும் திருவள்ளுவர் தெளிவுறச் சுட்டியிருப்பதால், இவை போன்ற ஏனைய பல சிவபிரானின் திருவுரு வங்களையும் சுட்டியிருப்பார், எனத் திருக் குறளின் நோக்குடைமைத் திறம் (Suggesti veness)பற்றித் துணிவதற்கு வாய்ப்புள்ளது!

முடிவுரை :

இதுகாறும் கூறியவற்றால், திருக்குறளுக் கும் சைவ சமயத்திற்கும் உள்ள இயைபை யும் தொடர்பையும் ஓரளவேனும் நாம் தெரிந்து கொள்ளுதல் இயலும். ''கடல் கண்டோம் என்பார் யாவரே முடிவுறக் கண்டார்'' எனக் கம்பர் பாடுதல் போல, மிகவும்பரந்துவிரிந்துசெல்லுதற்குரிய இத் தகைய ஆராய்ச்சிகட்கு ஓர் எல்லையும் உண்டோ? அறிதோறு அறியாமைகாணும் படியும், நவில் தொறும் நயம் பெருகும்படி யும், ஆழ்ந்து நுணுகிச் செல்லும் நமது தமிழ்மறையாகிய திருக்குறளை, அதன் அருமைபெருமைகளை யுணர்ந்து வியந்து, நாம் அனைவரும் நன்கினிது கற்றுப் போற்றி உய்ய முயலுவோமாக!

வாழிய திருக்குறள்!

வளர்க திருவள்ளுவர் கழகம்!

—ஆசிரியர்.

---

**வாழி மதுரைத் திருவள்ளு வர்கழகம்!**
**வாழி திருக்குறள்,நல் மாண்அறிஞர் !—வாழியரோ**
**நந்தம்அருட் குன்றக் குடிஅடிகள், மீனாட்சி**
**சுந்தரர் கோயில்,நலம் சூழ்ந்து !**

**—ஆசிரியர்.**

# விடை தெரியுமா?

(1) சாமுசித்தர், வைநயிகர், பிராகிருதர் என்பவர்களைப் பற்றிச்சிறு குறிப்புகள் தருக.

(2) "பழ மறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப்பசுங் கொண்டலே" என்னும் வரிகள், எந்த நூலில் வருகின்றன? இவ்வரிகளில் சுட்டப் பெற்ற வரலாறு யாது?

(3) "மானுட மடங்கல்" என்னும் தொடர் யாரை உணர்த்தும்? இவரைக் குமர குருபரர் எங்கு எதற்காகக் குறிப்பிட்டுள்ளார்?

(4) சாத்திர விதிகள் மூன்று வகைப்படும். அவை யாவை? விளக்குக.

(5) ஞானசிரியர் கூறும் உபதேச மொழிகளின் இயல்பைப் புலப்படுத்துக.

(6) சைவ அனுட்டானக் கிரியைகளில் செய்யப்படும் முத்திரைகள் சிலவற்றின் பெயர்களையும், இயல்பையும் விளக்குக.

(7) பெருமாளுக்கு உரியராய் நிழற் போல்வனராகத் திகழும் தேவியர் யாவர்? அவர்கள் முறையே நமக்குச் செய்யும் நலம் யாது?

(8) நம்மாழ்வார் அருளிச் செய்த நூல்கள் யாவை? அவை முறையே எவ்வெவற்றை வெளியிடுகின்றன?

(9) "உன்னைச் சிந்தையினல் இகழ்ந்த இரணியன் அகல் மார்வங் கீண்ட என் முன்னைக் கோளரியே முடியாதது என் எனக்கே?"

எனவரும் நம்மாழ்வாரின் பாடலில், கோடிட்ட பகுதியின் நுண்பொருளை விளக்குக.

(10) 'தீர்த்தங்கரர்' என்னும் சொல்லுக்குப் பொருள் யாது? தீர்த்தங்கரர்களின் பெயர்களையும் பிற குறிப்புக்களையும் தருக.

(விடை : மறுபுறம் காண்க.)

# விடை விளக்கம்

**(1)** சாமுசித்தர் எனப்படுவோர், முற்பிறவியில் சரியை கிரியை யோகங்களைச் செய்து மனத்தூய்மை உடையவராய் வாழ்ந்து, மீளப்பிறக்கும் பொழுதும் அந்தத் தூய உணர்வுடன் பிறந்து இறைவனை வழிபடுபவர்கள் ஆவர். நன்றாக முடிவு பெற்றது என்னும் பொருளை உடைய 'ஸம்சித்தம்' என்னும் வட சொற்றொடரின் தத்திதம் ஆக சாமுசித்தர் என்னும் சொல் அமைந்தது. சாமுசித்தர்கள் ஆகிய ஞானிகளுக்கு நூல்கள் வேண்டுவதில்லை. அவர்களை இறைவன் தானே வீட்டுலகிற் சேர்ப்பான்.

விநயம் (ஒழுக்கம், வழிபாடு) என்னும் நல்லியல்பு உடையவராய், ஞான நூல்களை ஓதி அறிந்து வீடுபேறு அடைய விரும்புபவர்கள், வைநயிகர் என வழங்கப் பெறுவர். விநயம் என்னும் சொல்லின் அடியாக, வைநயிகர் என்னும் சொல் அமைந்தது. இவர்கள் தாம் உய்தற் பொருட்டு, இறையருள் ஞான நூல்களை அவாவி ஓதியுணரும் இயல்பினராக இருப்பர்.

பிராகிருதர் என்பவர்கள், பிரகிருதி (உலகம், உலகியல்) நெறிகளிலேயே உழன்று வீடுபேற்றை விரும்பாமல், அறிவில்லாதவர்களாய்த் திரிந்து வருவர். பிரகிருதியையே விரும்புபவர் பிராகிருதர் எனப் பெறுவர். அருள் நூல்களில் இவர்களுக்கு ஆர்வமோ அறிவோ சிறிதும் ஏற்படாது.

இம்மூவகையினருள், சாமு சித்தர் என்போர் இயல்பாகவே ஞானம் உடையவர் ஆதலாலும், பிராகிருதர் ஞானம் சிறிதும் இல்லாதவராய் அஞ்ஞானத்தையே விரும்பி உழலும் இயல்பினர் ஆதலாலும், இவ்விருவருக்கும் அன்றி வைநயிகர் எனப்படும் நிலையிலுள்ள நன் மக்களின் பொருட்டே, தாம சிவஞான சித்தியார் என்னும் நூலை இயற்றுவதாக, ஆசிரியர் அருள் நந்திசிவம் கூறுகின்றார்.

பண்டைநற் றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்தி பண்ணுந்
தொண்டரைத் தானே தூய கதியினிற் றொகுப்பன்: மார்க்கர்
கண்டநூ லோதி வீடு காதலிப் பவர்கட் கீசன்
புண்டரி கத்தாள் சேரும் பரிசினைப் புகல லுற்றும்!

—சிவஞான சித்தியார்.

**(2)** "பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டல்" என்னும் வரிகள், குமரகுருபரர் பாடியருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் என்னும் நூலில், காப்புப் பருவம் முதற்செய்யுளில் வருவனவாகும்.

காஞ்சிபுரத்தில் இருந்த அரசன் ஒருவன், திருமழிசை ஆழ்வாரின் திருவடிகளில் பக்தி செய்து ஒழுகி வந்த கணிகண்ணார் என்பவரைத் தன்னைப் புகழ்ந்து வியந்து பாடுமாறு பெரிதும் வற்புறுத்தினன். அதற்கு அவர் நாக் கொண்டு நரனைப் பாடேன் என மறுத்தார். அதனாற் கோபமுற்ற அரசன், உடனே அவரை அந்நாட்டைவிட்டு அகலுமாறு கட்டளையிட்டான். அங்ஙனமே செய்யப்புக்க அவர், தமது குருதேவராகிய திருமழிசை ஆழ்வாரிடம் சென்று நடந்த செய்தியைச் சொல்லி விடைதர வேண்டினர்.

அது கேட்ட திருமழிசை ஆழ்வார், காஞ்சியிலுள்ள திருவெஃகா என்னும் தலத்திற்குச் சென்று, அங்கு எழுந்தருளி விளங்கும் பெருமாளை நோக்கி,

''கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டா-துணிவுடைய
செந்நாப் புலவனும் செல்கின்றேன் நீயும்உன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்''.

என்னும் பாடலைப் பாடினார். அது கேட்ட பெருமாள், தம் அடியவர்களைப் பிரிந்திருக்க மனம் பொறாராய், அவர்கள் இருக்க உரிமை இல்லாத இடத்தில் தாமும் இருத்தல் ஆகாது என்று திருவுளம் கொண்டு, ஆழ்வார் பணித்தபடியே தமது நாகப் பாய ணையைச் சுருட்டிக் கொண்டு ஆழ்வார் பின் செல்லப் புறப்பட்டார் என்பது வரலாறு. ஆழ்வார் சொல்லியபடியே, பைந்நாகப் பாயைச் சுருட்டிக் கொண்டு புறப்பட்டுப் பின் தொடர்ந்து சென்றதனால், பெருமாளுக்குச் 'சொன்ன வண்ணம் செய்தவர்' (யதோக்த காரி) என்னும் பெயர் ஏற்பட்டு இன்றும் வழங்கி வருகின்றது.

இறைவன் தனது அடியவர்களின் வயப்பட்டு நிற்பவன் (பக்த பராதீனன்), என்னும் உண்மையை உணர்த்தும் இவ்வரலாற்றையே, மேற்குறித்த வரிகள் குறிப்பிடு கின்றன. பெருமாள் தமிழ் மொழியிலுள்ள திவ்வியப் பிரபந்தங்களின்பால் மிகப் பெரி தும் ஈடுபாடு கொண்டவராக விளங்குகின்றார் என்பதனையும், இவ்வரிகள் செவ்விதில் உணர்த்துகின்றன.

(3) 'மானினு மடங்கல்' என்னும் தொடர் திருமாலின் திருவவதாரங்களுள் ஒன்றாகிய நரசிங்க மூர்த்தியைக் குறிக்கும். மானுடன்—நரன். மடங்கல்—சிங்கம். சைவப்பெரும் சான்றோர் ஆகிய குமரகுருபர அடிகள், தாம் இயற்றிய 'திருவாரூர் நான்மணி மாலை' என்னும் நூலில் நரசிங்க மூர்த்தியை நினைவுகூர்ந்து குறிப்பிடு கின்றார்.

திருவாரூர் மருதத்திணை வளம் அமைந்த மாட்சிமை மிக்கது. அந்நகரினைச் சோலைகள் பல சூழ்ந்துள்ளன. அவைகள், சூரியனின் கதிர்களும் கூட நுழையமுடியாத அடர்ச்சியும் இருளும் உடையன. புயல்கள் தங்கி உறங்கும் வகையில் உயர்ந்து நிற்பன. அங்குப் பலா மரங்கள் நிரம்ப உள்ளன. அவற்றில் வருக்கை என்னும் பலா மரங்களில், பழங்கள் பொன்னின் நிறமாகப் பழுத்துத் திகழ்கின்றன. அவற்றை அச் சோலைகளில் வாழும் குரங்குகள் கண்டு மகிழ்ந்து, தமது மடியின் மீது எடுத்து வைத் துக் கொண்டு, தமது கூரிய நகங்களால் வகிர்ந்து பிளந்து, உள்ளிருக்கும் சுளைகளை எடுத்து உண்ணுகின்றன. இவ்இயற்கைக் காட்சி, நரசிங்க மூர்த்தியானவர் தூணி லிருந்து வெளிப்பட்டுப் பொன் நிறம் கொண்ட இரணயனின் மார்பை இடந்து, வயிற்றைக்கீறி உள்ளேயுள்ள குடலும் நிணமும் ஆகியவற்றை எடுத்து உண்டாற் போல,வியக்கத் தக்கதாக விளங்கும்.

''ஒண்கதிர் பரப்பும் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பில்
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் புயந்து பாதபத்து ஒதுங்கிய
இருவேறு உருவிற் கருவிரல் மந்தி.
பொன்நிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டலும் முளைஎயிறு இலங்க,
மடித்தலத்து இருத்தி வகிர்ந்து வள் உகிரால்

தொடுத்தபொற் சுளைபல எடுத்து வாய்மடுப்பது
மானுட மடங்கல் தூண் இடைத் தோன்றி,
ஆடகப் பெயரின் அவுணன் மார்பு இடந்து
நீடுபைங் குடரின் நிணம் கவர்ந்து உண்டென,
இறும்பூது பயக்கும் நறும்பணை மருதத்து,
அந்தண் ஆரூர்..................''.

—திருவாரூர் நான்மணிமாலை, 5.

பலாப் பழத்தைக் கீறிச் சுளையை உண்ணும் மந்தி, நரசிங்க மூர்த்தியைப் போலத் தோன்றுகின்றது என்னும் கருத்துடைய இப்பாடலில், பலாப்பழம் இரணிய னும், அதனுள் இருக்கும் சக்கை குடரும், சுளை நிணமும், மந்தி நரசிங்கமூர்த்தியும் போல விளங்கின என்று, குமரகுருபரர் செய்திருக்கும் கற்பனைத்திறம், மிகவும் போற்றி மகிழ்தற்கு உரியது.

(4) சாத்திர விதிகளெல்லாம் பொதுவாக மூன்று வகைப்படும். எய்தாததனை எய்துவிப்பது, ஒருகால் எய்தி ஒருகால் எய்தாதாகற் பாலதனை அவ்வழியும் இகந்து படாமற் காத்து எய்து விப்பது, ஈரிடத்து எய்தற்பாலதனை ஒரு மருங்கு மறுப்பது என்பன அவை.

(அ) 'சிவபூசை செய்யபாற்று' என்பது விதியாக்கால், சிவபூசை செய்தல் வேறோராற்றல் பெறப்படாமையின், இங்ஙனம் விதிப்பது எய்தாததனை எய்து விப்பதாம்.

(ஆ) 'சிவபூசை செய்யுங்கால் இருந்து செய்தல் வேண்டும்' என்பது விதியாது ஒழியினும், இருந்து செய்தல் 'சிவபூசை செய்யற்பாற்று' என்னும் பொது விதியால் எய்திற்றேயாம். ஒரோவழி (சிறுபான்மை) சிலர், நின்று செய்தலும் கூடுமாகலின் அவ்வழி இருந்து செய்தல் எய்தாமையாலும், இருந்து செய்தல் விதியாக்கால் சிவ பூசைச் சிறப்பு விதி எய்தாமையானும், அதனைத் தெளிவுற வரையறுத்துக் கூறுதலே எய்தியது இகந்துபடாமற் காப்பதாம்.

(இ) வேத ஆகமங்களில் 'சிவன் எனும் நாமம் சிவனுக்கே உரித்து' எனச் செவியறிவுறுத்தாதவழி, பொதுவகையான் மங்கலப் பொருள் பற்றி ஏனைப் பொருள் களிலும் அது செல்லும் ஆகலின், அதனை நீக்குவதற்கு அங்ஙனம் செவியறி வுறுப்பது, எய்தியது ஒருமருங்கு மறுப்பதாம்.

எய்தாததனை எய்துவிப்பது அபூர்வ விதி எனவும், எய்தியது இகந்து படாமற் காப்பது நியமவிதி எனவும், எய்தியது ஒருமருங்கு மறுப்பது பரிசங்கியாவிதி எனவும் மீமாஞ்சை நூலார் கூறுவர்.

(5) வண்டுகள் தேனை நிறைய உண்டு அதனை மீட்டும் வெளிப்படுத்தும் தன்மை போல, ஞானிகள் சிவானந்தத் தேனைத் தமது உள்ளத்தே நிரம்ப உண்டு தேக்கி, உயிர்கள் மாட்டுத் தாம்கொண்ட பெருங்கருணைத் திறத்தால், உபதேச மொழி களாக வெளிப்படுத்தி அருள்வர்.

அத்தகைய உபதேச மொழிகளின் அருமை பெருமைகள், அளவிடற் கரியன, கைம்மாறு கருதாது வெளிப்பட்டு நலம் செய்யும் தன்மையால் அமுதமழை என்றும். உண்மைப் பொருளை எதிர்பாரா வகையில் நலமுற உணர்த்துவதால் அசரீரி வாக்கு (அம்பரச் சொல்) என்றும், கேட்டோர்க்குத்தாம் கருதிய நலனையும் வீடுபேற்றையும்

விளைவித்தலால் நன் நிமித்தம் என்றும் கூறத்தக்க நிலையில், ஞானாசிரியரின் உபதேச மொழிகள் விளங்கும்.

தம்செயலாக அன்றித் தமது கருவி கரணங்களை அடக்கி, அருளாய் நின்று கூறுதலின் ஆவேசம் ஏறினார் நிலையிலும்; ஞான நெறிக்கு எதிரீடாய்த் தோற்றுவனவற்றையெல்லாம், அழித்தொழித்தலையே குறிக்கோளாகக் கொள்ளுதலால் மாவீரராயினோர் நிலையிலும்; அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும், அவ்வப் பயன்களைத் தவறாது தருதலால் அரசர்களின் நிலையிலும்; வேறு எதனையும் பொருட்படுத்தாமல் தாம் விரும்பும் ஞானானந்தத்தையே புகழ்ந்துரைத்து, அதனையே அடைவிக்கும் குறிக்கோளை வலியுறுத்துதலால் மடலாளர் நிலையிலும்; தற்போதத்தின் ஒழிவையே பெரிதும் விரும்பி முயலுதலால், சாவாநந்தர் நிலையிலும்; ஞானிகளின் உபதேச மொழிகள் அமைகின்றன.

(6) சைவ அநுட்டானக் கிரியைகளில், கைவிரல் அமைப்பினாற் செய்யப்படும் அடையாளம் ஆகிய முத்திரைகள் பல. அவற்றில் சில வருமாறு :—

(அ) பதாகை முத்திரை: ஐந்து விரல்களையும் சேர்த்து நீட்டிக் கவிழ்ப்பது கவிழ்ந்த பதாகை; நிமிர்ப்பது நிமிர்ந்த பதாகை.

(ஆ) சிகா முத்திரை: இரண்டு கைகளின் நடுவிரல்கள் மூன்றையும் முட்டியாக மடக்கித் தலையின் இருபுறத்திலும் புடைப்பது.

(இ) நமஸ்கார முத்திரை : இரண்டு கைகளையும் சேர்த்து இடது பெருவிரல் மேல்; வலது பெருவிரல் பொருந்தும்படி கூப்புவது.

(ஈ) திவ்விய முத்திரை : பெருவிரல் அணி விரல்களைச் சேர்த்து மற்ற விரல்களை நீட்டுவது.

(உ) அதோ முகி முத்திரை : சுட்டுவிரலை நீட்டி மற்ற விரல்களை மடக்கிக் கீழ்நோக்கிப் பிடிப்பது.

(ஊ) தேனு முத்திரை : இரண்டு கைகளையும் சேர்த்து விரல்களைக் கோத்துச் சுட்டுவிரல்கள் நடுவிரல்களையும், நடு விரல்கள் சுட்டு விரல்களையும், அணி விரல்கள் சிறு விரல்களையும், சிறு விரல்கள் அணிவிரல்களையும் நுனியோடு நுனி பொருந்த அமைத்துப் பசுவினது மடிக்காம்பு போலப் பிடிப்பது.

(எ) கோமுக முத்திரை : நடுவிரல்கள் மூன்றையும் சேர்த்துச் சற்று வளைத்து மற்ற விரல்களை மேல் நோக்கி நீட்டிக் கவிழ்த்துப் பிடிப்பது.

(ஏ) சங்க முத்திரை : பெருவிரல் நுனியைச் சுட்டு விரலின் அடியில் பொருந்த வளைத்து மற்ற நான்கு விரல்களையும் சேர்த்து நீட்டுவது.

(ஐ) சின் முத்திரை : பெருவிரல் நுனி அல்லது அடியைச் சுட்டுவிரலின் நுனியால் தொடுவது.

(ஓ) பிரசன்ன முத்திரை : இரண்டு கைகளையும் கூப்பிப் பெரு விரல்களை இணைத்து அவற்றின் நுனிகள் அணி விரல்களின் அடியிற் பொருந்த உள்ளே மடக்குவது.

7. பெருமாளுக்கு உரிய சிறந்த தேவியர் மூவர். அவர்கள் சீதேவி, பூதேவி நீளாதேவி எனப்படுவர். ஸ்ரீவேதாந்த தேசிகர் இயற்றிய தயா சதகத்தில் அருளிச் செய்தபடி, ஞானத்தை ஊட்டுபவள் பெரிய பிராட்டியாராகிய ஸ்ரீதேவி. சேதனர்களின் வினை அல்லது குற்றங்களைப் பொறுக்கச் செய்கின்றவள் பூதேவி. கூடியவரையில் சேதனர்களின் குற்றங்களைப் பெருமாள் காணாதபடி செய்கின்றவள் நீளாதேவி.

"குழற் கோவலர் மடப்பாவையும் மண்மகளுந் திருவும்
நிழற் போல்வனர் கண்டு நிற்குங் கொல் மீளுங் கொல்?" (2480)

"உடனமர் காதல் மகளிர் திருமகள் மண்மகள் ஆயர்
மடமகள் என்றிவர் மூவர்; ஆளும் உலகமும் மூன்றே" (2760)

"பின்னை கொல் நிலமாமகள், திருமகள் கொல் பிறந்திட்டாள்
என்ன மாயங்கொலோ இவள் நெடுமால் என்றே நின்று கூவுமால்"
(3280)

8. நம்மாழ்வார் அருளிச் செய்த நூல்கள் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு பிரபந்தங்களாகும். இவைகள் நான்கும் முறையே ஆழ்வாரின் பரபக்தி, பரஞானம், பரமபக்தி, பிரம்மப் பிராப்தி என்பவற்றை விளக்குகின்றன.

(அ) திருவிருத்தம் : இதன்கண் ஆழ்வார் எம்பெருமானை அனுபவிப்பதற்குத் தடையாகவுள்ள உலகியல் தொடர்பினை அறுத்து ஒழித்தருள வேண்டுகின்றார். இராமபிரானுக்கு அடிமைத் தொண்டு செய்ய விரும்பும் பரதாழ்வான் கைகேயி தன்னை அரசன் என்று கூப்பிட்ட சொற்கேட்டுப் பட்டபாடு போல இருப்பது, திருவிருத்தம். இது இருக்கு வேதத்தின் சாரம்.

(ஆ) திருவாசிரியம் : எம்பெருமான் தன் வடிவழகினைக் காட்டியருள அதனை ஆழ்வார் இதன்கண் முழுவதாக அனுபவித்து இன்புறுகின்றார். இராமபிரான் சித்திர கூடமலையிலே எழுந்தருளியிருக்கின்றார் எனக் கேள்வியுற்ற பரதன், என் ஒருவனுடைய கண்ணீரையே கண்டு பொறுக்கமாட்டாதவர், இத்தனை பேரும் படும் அளவிறந்த ஆற்றாமையைக் கண்டால் அயோத்திக்கு மீளாது ஒழிவரோ? என்று எண்ணமிட்டுக் கொண்டு அவரைக் கானகத்தினின்று அழைத்துக்கொண்டு வரச் செல்லுகின்ற காலத்துப்போல உள்ளது திருவாசிரியம். இது எசுர் வேதத்தின் சாரம்.

(இ) திருவந்தாதி : எம்பெருமானை அனுபவித்தலால் அதற்குத் தக்க வேட்கை பிறந்து, அவ்வேட்கைக்குத் தக்கபடி அதனைப் புகழ்ந்தும் நினைந்தும், ஆழ்வார் இதன் கண் மகிழ்கின்றார். இராமபிரான் கானகம் சென்றாலும், விரைவில் திரும்பி வந்து விடுவான் என்ற நம்பிக்கையுடன் நந்திக் கிராமத்தில் தங்கியிருந்து இராமனின் வரவினையே எதிர்நோக்கி நின்று பரதன் தன் பேராவலையும் பேரன்பினையும் வளர்த்துக் கொண்டு வாழ்ந்து வந்தாற்போல் அமைந்தது பெரிய திருவந்தாதி. இது அதர்வ வேதத்தின் சாரம்.

(ஈ) திருவாய்மொழி: எம்பெருமான்தானே தன் அனந்த கல்யாண குண கண வைபவங்களுடன், தன்னை நிர்ஹேதுக கிருபையினால் காட்டியருளக் கண்டு அநுபவித்துத் தம்முடைய உலக வாழ்க்கைத் தொடர்பு ஆகிய தடை நீங்கி, இதன்கண் ஆழ்வார் எம்பெருமானைத் தலைக்கூடி இன்புறுகின்றார். இராமபிரான் மீண்டு போந்து முடிசூடிக் கொள்ள, அதுபோது தன் இயல்புக்குத் தகுதியான பேற்றினைப் பெற்றுப் பரதாழ்வான் மகிழ்ந்து இன்புற்றிருந்தாற்போலத் திருவாய்மொழி விளங்குகின்றது. இது சாம வேதத்தின் சாரம்.

9. இப்பாடலில், உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த இரணியன் என்றுள்ளது. "உன்னை இகழ்ந்த இரணியன்" என்பதே அமையும். எனினும் 'சிந்தையினால் இகழ்ந்த' என்று விதந்து கூறப்பெற்றுள்ளது. இவ் விதப்புச் சொல், ஓர் ஆழ்ந்த பொருட் குறிப்பு உடையதாகத் திகழ்கின்றது. நம்பிள்ளை என்னும் வைஷ்ணவப் பேரறிஞர், நயஞ்சான்ற அவ்வரும் பெறற் பொருட் குறிப்பினை விளக்கியருளியுள்ளார்.

இறைவன் அன்பர்களுக்கு அருள் செய்தும், அல்லாதவர்களை ஒறுத்தும் வருகின்றான். இங்ஙனம் செய்யுங்கால் அன்பர்களிடத்தில் மனம் நிறைந்த பேரன்பின திறத்தை எதிர்பார்த்தே அருள் செய்வதில்லை. "பொய்யே புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாக் கொள்வானே" என்றபடி, போலி அன்பிற்கும் பெரிதும மகிழ்ந்து இறைவன் இன்னருள் புரிகின்றான். இவ்வாறே அல்லாதவர்களைக் கடிந்து ஒறுப்பதிலும் வெளியே மேலுக்குத் தோன்றுகின்ற பகைமையைக் கண்டே இறைவன ஒறுத்து விடுவதில்லை. உள்ளபடியே அவர்களின் உள்ளத்திலும் பகைமை உணர்ச்சி ஆழ்ந்த படிந்திருக்கின்றதா என்று ஆராய்ந்து பார்த்தே, அதன்பின்னர் இறைவன் அவர்களை ஒறுக்க முற்படுகின்றான்.

அருள் செய்வதற்கு அற்பமான காரணம் ஏதேனும் இருந்தாலும் போதும். ஆனால் தண்டிப்பதற்கோ மிகப்பெரிய வலிய காரணம் வேண்டும். நலம் செய்வதாயின் எவருககும் எதுவும் ஆராயாமலே நலம் செய்யலாம். ஆனால் ஒருவனுக்குத் தண்டனை தருவதாயிருந்தாலோ, பலகாலும் பலமுறையும் தீர ஆராய்ந்து பார்த்தே ஏற்ற பெற்றி தண்டித்தல் வேண்டும்.

ஆதலின், பெருமாள் இரணியனின் பகைமை, வெளிநோக்காக அமைந்ததோ அல்லது உள்ளத்திலேயே பெரிதும் ஆழப்படிந்து கிடந்ததோ என்று நன்கினிது ஆராய்ந்து பார்த்து, அதன் பின்னரே இரணியனின் மார்பைப் பிளந்து கொன்றார், என்பது இப்பாசுரத்தின் இனிய அரிய நுண்பொருள் ஆகும்.

"உளந்தொட்டு இரணியன் ஒண்மார்பு அகலம் பிளந்திட்ட" எனவரும் பெரியாழ்வார் திருமொழியிலும் 'உளந்தொட்டு' எனவருதல், இக்கருத்தினை அரண்செய்து வலியுறுத்தியிருத்தல் உணர்ந்து மகிழத்தக்கது.

10. தீர்த்தங்கரர் என்போர், ஜைன சமயத்தின் ஆசாரியர்களாவர். இச்சொல்லுக்குக் கரையேறியவர் என்பது பொருள். அதாவது பிறவியாகிய பெருங்கடலை நீந்தி முத்தியாகிய கரையை அடைந்து, பிறரையும் கரையேற்ற வல்லவர்கள் என்பது

கருத்து- ஜைன சமய ஆசாரியர்களாகிய தீர்த்தங்கரர்கள் 24 பேர்களாவர். அவர் தம் பெயர்களும் அடையாளங்களும் பின்வருமாறு :

| | பெயர் | — | சின்னம் |
|---|---|---|---|
| 1. | ரிஷபதேவர் (அல்லது) ஆதிநாதர் | — | காளை |
| 2. | அஜிதநாதர் | — | யானை |
| 3. | சம்பவநாதர் | — | குதிரை |
| 4. | அபிந்தானர் | — | குரங்கு |
| 5. | சுமதிநாதர் | — | சக்கரம் |
| 6. | பத்மப்ரபர் | — | செந்தாமரை |
| 7. | சுபார்சுவநாதர் | — | சுவஸ்திக ஆசனம். தலைக்குமேல் ஐந்து அரவம் |
| 8. | சந்திரப்ரபர் | — | பிறைமதி |
| 9. | புஷ்பநாதர் | — | முதலை, (நண்டு) |
| 10. | சீதளநாதர் | — | கற்பகமரம் |
| 11. | சிரேயநாதர் | — | மான், (கருடன்) |
| 12. | வாசபுஜ்யர் | — | எருமை, (எருது) |
| 13. | விமலநாதர் | — | காட்டுப்பன்றி |
| 14. | அனந்தநாதர் | — | கரடி |
| 15. | தர்மநாதர் | — | வச்சிராயுதம் |
| 16. | சாந்திநாதர் | — | மான் |
| 17. | குந்துநாதர் | — | ஆடு |
| 18. | அறநாதர் | — | மீன் |
| 19. | மல்லிநாதர் | — | நீர்க்குடம் |
| 20. | முனீசுவரர் | — | ஆமை |
| 21. | நமிநாதர் | — | அல்லி |
| 22. | நேமிநாதர் | — | சங்கம் |
| 23. | பார்சுவநாதர் | — | ஆசனத்தில் ஓர் அரவம், தலைக்குமேல் ஏழுதலை அரவம் |
| 24. | மகாவீரர் | — | சிங்கம் |

# சொல்லில் தத்துவம்

## முன்னுரை :

மொழியும் பண்பும், ஒரு நாட்டினது மக்களின் விழுமிய செல்வங்களாகும். நாட்டிற்கு விழுப்பம் விளைவிக்கும் அவை இரண்டினையும் உயிரினும் மேம்பட்டனவாக மதித்துப் போற்றுதல் வேண்டும். "நிலத்திற் பிறந்தமை கால் காட்டும், காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்" என்னும் பொய்யாமொழிக் கிணங்க, ஒரு தனி மனிதனின் பண்பினை, அவன்றன் வாய்மொழியின் வைத்து நாம் உணர்ந்து கொள்ளுதல் கூடும். அங்ஙனமே, ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டினையும் மனப்பான்மையினையும், அவர்தம் மொழியின் இயல்பும் அமைப்பும் கொண்டு, நாம் ஆராய்ந்து கொள்ளலாம்.

## சொல்லில் உயர்வு :

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' எனப் பாடினார் பாரதியார். உலகில் ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு இயல்பு உண்டு என அறிஞர்கள் கூறுவர். அம்முறையில், தமிழ் மொழிக்கும் தத்துவ உணர்வுக்கும் மிக நெருங்கிய தொடர்பு காணப் படுகின்றது. எழுத்துக்களுக்கு உயிர் எழுத்து-மெய் எழுத்து-உயிர்மெய் எழுத்து எனப் பெயர்கள் அமைத்து வழங்கியதும், பிற மொழிகளிற் போலச் சொற்களைச் சொல் நோக்காது பொருள் நோக்கி உயர்திணை அஃறிணை, ஆண்பால் பெண்பால் எனப் பாகுபாடு வகுத்ததும், தமிழ் இலக்கணத்தின் தனிப் பெரும் சிறப்புக்களாக விளங்குகின்றன.

தமிழிலுள்ள எல்லாச் சொற்களும் ஆழ்ந்த பொருட் குறிப்பு உடையனவாகவே அமைக்கப் பெற்றுள்ளன. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பிய நூற்பா. ஆதலின், பிற மொழிகளிற் போலக் காரணமின்றியும், பொருள் குறியாமலும், இடுகுறியாக மாத்திரம் வரும் சொற்கள் எதுவும், தமிழில் இல்லை என்பது புலனாகின்றது. புலமையுடையவர்கள் ஆராய்ந்து காணும் பொழுது, தமிழ்ச் சொற்கள், பற்பல அரிய சிறந்த உண்மைகளை, உணர்த்த வல்லனவாகத் திகழ்கின்றன.

## உயர்பொருட் சொற்கள் :

கடவுள் இறைவன் இயவுள் உலகு வையம் நிலம் தரை உடல் உயிர் தவம் ஒழுக்கம் கற்பு முதலிய சொற்களில், செறிந்துள்ள திட்ப நுட்பம் சான்ற கருத்துக்கள், பழந்தமிழ் மக்களின் அறிவறிந்த பண்பினையும், உயர்வற உயர்ந்த நாகரிகச் சிறப்பினையும், உள்ளவாறு உணர்தற்குப் போதிய சான்றுகளாக மிளிர்கின்றன.

எல்லாவற்றையும் கடந்து நிற்பவன்; எல்லாவற்றையும் உள்ளிருந்து கடாவி (செலுத்தி)நடாத்துபவன் கடவுள். எல்லாப் பொருளிலும் தான் தங்கி யிருப்பவன்; எல்லாப் பொருள்களும் தன்பால் தங்க இருப்பவன் இறைவன். தான் இயங்காமல் தனி

நின்று, எல்லாப் பொருள்களின் உள்ளும் இருந்து இயக்குபவன் இயவுள். எல்லா உயிர்களும் உலவுதற்கு இடமாக இருப்பது; என்றேனும் ஒரு காலத்தில் அழிந்து படத் தக்கது உலகம். எல்லாப் பொருள் களேயும் வைக்குமிடமாக விளங்குவது வையம். அனைவரும் அனைத்தும் நிற்பதற் குரிய இடம் நிலம். எல்லாவற்றையும் தரிப்பது (தாங்குவது) தரை. அவ்வப் போது மாறுபட்டு நிற்பது உடல் (உடலு தல்—மாறுபடுதல்). மூச்சு விடுதலாகிய உயிர்த்தலைச் செய்வது; இறைவனை அறிந்து வழிபட்டு உய்வதற்கு உரியது உயிர். தீய பண்புகள் அழிந்து (தபுதல்—அழிதல்), நற்பண்புகள் ஓங்கி மிகுவது (தவ—மிகல்) தவம். முன்னொடுபின் முரணா மல், மனம் மொழி மெய் என்னும் மூன்ற னுலும் ஒழுங்குபட்ட வாழ்க்கை ஒழுக்கம்; கல்லைப் போலும் அன்பின் திண்மை; தாய் தந்தையரும் சான்றோரும் அறநூல் களும் கற்பிக்கும் நெறியில் ஒழுகும் தன்மை கற்பு.

இத்தகைய சொற் பொருள் நலங்கள் பலவற்றையும் கருதுங்கால், இச் சிறந்த சொற்களைப் படைத்து வழங்கிய நம் தமிழ் முன்னோர்களின் பண்பாடும் நாகரிகமும், நன்கினிது புலனும்,

**சிதம்பர சுவாமிகள் :**

தமிழகச் சமய உலகில், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் அவர்களை, அறிஞர் அனைவரும் நன்கினிது அறிவர். ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னே விளங்கி யிருந்த தமிழ்ப் பெருஞ் சான்றோர் அவர்! அவர் இயற்றிய திருப்போரூர்ச் சந்நிதி முறை என்னும் நூல், சமய உலகில் பெரும் புகழ் வாய்ந்த அரும் பெறல் துதி நூல்! வடலூர் இராமலிங்க அடிகளாரால் பெரிதும் மதித்துப் போற்றப் பெற்றவர் சிதம்பர சுவாமிகள் எனின், அவர்தம் அருமை பெருமைகளை நாம் என்னென்று புகழ்ந்துரைப்பது?

அத்தகைய பெருஞ் சிறப்பினராகிய சிதம்பர சுவாமிகள், திருப்போரூர்க்கு அணித்தே யுள்ள திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரப் பெருமான் மீது பாடிய பதிகம் ஒன்றில், ஒரு பாடலின் வாயிலாக, அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழி யின் தத்துவ அடிப்படை உணர்வு நலத் தினை, அழகுற விளக்கி யருள்கின்றார்.

'வீடு' என்னும் சொல் யாவரும் அறிந் தது; யாவரும் வழங்குவது. மிகவும் எளிய சிறிய இந்தச் சொல், தத்துவ நூற் கருத் துக்களை யெல்லாம் தன்கண் சுருக்கமாகத் தொகுத்துப் பொதிந்து கொண்டு, திகழ் தலை ஓர்ந்து உணர்ந்து வியக்கின்றார் சிதம்பர சுவாமிகள்!

**சொல்லில் தத்துவம் ;**

'வீடு' என்னும் சொற்குப் பொருள் விடுதலை(முத்தி). 'வீடு'என்ற சொற்பொருட் குறிப்பினாலேயே, கட்டுண்டிருந்த நிலை (பெத்தம்) புலனாகின்றது. அதனால் கட் டுண்டவனும், கட்டியிருப்பதும் ஆகிய பொருள்கள் உண்டு என்றும், தெளிவாகத் தெரிகின்றது. கட்டுண்டவன் பசு; கட்டி யிருப்பது பாசம். கட்டு ஆகிய கயிறு, அறிவில்லாத சடப் பொருள்! கட்டப்பட்ட வனோ, தனக்கென உரிமை இல்லாதவன் (அசுதந்தரன்). எனவே, கட்டியுள்ள கயிற்றை அவிழ்த்துக் கட்டப்பட்டிருப் பவனை விடுவிப்பவன் ஒருவன் உளனுதல் வேண்டும். அவனே எல்லா அறிவும் எல்லா ஆற்றலுமுடைய தலைவன் (பதி) ஆவான். கட்டுண்டவன் அத்தலைவனின் அருளைப் பெற்றால், கட்டு அவிழ்ந்து விடு தலை பெறலாம். இதனையே எல்லாச்சமயங் களும் ஒவ்வொரு வகையில் இயம்பு கின்றன. இதனைச் சிறப்பாகச் சைவ சித் தாந்தம் என்னும் தமிழகத் தத்துவக் கொள்கை விளக்குகின்றது. பதி பசு பாசம் எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறும் முப்பொருள் உண்மைகளை யெல் லாம், 'நுண்ணிய ஆலின் சிறுபழத்து ஒரு

விதை' போல, வீடு என்னும் எளிய இனிய சிறிய தமிழ்ச் சொல்லே சுருக்கமாகத் தொகுத்து உணர்த்திவிடுகின்றது! எனச் சிதம்பர சுவாமிகள், பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றுர்.

வீடென் றறைதரு சொற்குப் பொருளோ
விடுநல் ஆதனிறைல்,
வீக்குண் டோனும், கட்டும், முன்னர்
விளங்கும் திடமாகப்;
பீடுறு கட்டுத் தானுய் விட்டுப்
பெயராது; இதுசடமாம்;
பிணிபட் டோன்அசு தந்திரன் ஆம்; இப்
பிணிபெயரச் செய்வோன்,
நீடு சுதந்தரம் உளனும் ஒருவன்;
நேரும்இவ் வேதுவினல்
நிகழ்பதி பசுபாசம் என்னும்முப் பொருள்,
நித்தியம் என்றருளி,
வேள்தனை வெல்லும் குருவாய் எனைஆள்
மெய்ப்பொருள் நீ அன்ருே?
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கனியே!

'வானம்' 'வானுலகம்' எனப் பொருள் படும் Heaven என்னும் ஆங்கிலச் சொல், 'மிகவும் முயன்று பாடுபட்டு உழைத்தே அடைவதற்கு உரியது' (That which is to be attained by much heaving) என்னும் நுண்பொருட் குறிப்புடையது என்று, ஆங்கில மொழி அறிஞர்கள் கூறுவதும், இங்கு நாம் இயையு பற்றி உணர்ந்து இன்புறுவதற்குரியது.

முடிவுரை :

"ஒவ்வொரு மொழியிலும், தனிச் சிறப் பாகப் பொருள் வளம் நிறைந்த சொற்கள் சில உள்ளன. அவைகள், செம்பாதிமறந்து போன பழம் பெரும் தொடர்புணர்ச்சிகளை யும், தம்மிடம் மறைவுறப் பொதிந்து வைத் துக் கொண்டுள்ள புதையலாகத் திகழ் கின்றன. சொற்பொருள் கூறும் நிகண்டு கள் உணர்த்தாத, எத்தனையோ பலஅரிய பொருட் குறிப்புக்களை, அவைகள் விளக் கிக் கொண்டு நிற்கின்றன. அவற்றின் வளம் மிகுந்த நுண் பொருட்டிறங்களை, அவ்வம் மொழியாளரே செவ்விதின் உணர வல்லவராவர். பொருள்வளம் நிறைந்த இனைய சொற்களினுலேயே கவிதைகள் அமைகின்றன; அவைகளே மொழி பெயர்த்து உணர்த்த முடியாத, கவிதை அழகுக்குரிய திறவு கோலாகவும் திகழ் கின்றன. இத்தகைய பொருள் வளம் மிக்க சிறந்த சொற்கள், இந்திய மொழிகளில் ஏராளமாக உள்ளன" என அறிஞர் ஒருவர் கூறுவது, * ஈண்டு நாம் சிந்தித்து இன்புறு தற்குரியதாக உள்ளது.

இங்ஙனம், செந்தமிழ் மொழியின் சிறந்த தத்துவ உணர்வு மாட்சிமையினை நலங் கொள விளக்கிய, சிதம்பர சுவாமிகள் போன்ற சான்ருேர்களின் நூல்களை, நாம் பலகாலும் ஓதி மகிழ்ந்து உய்வோமாக!

—ஆசிரியர்,

* " In every language there are some words that are peculiarly **rich** in meaning; they have a wealth of secret loveliness, drawn from ancient and half-forgotten associations; they do not stand alone, but are part of a whole world of thought to which their dictionary definition often gives little clue, yet which is present, however dimly, to those who speak the language as their mother-tongue. A stranger may learn something of their power, but he can never savour them to the full. They are the stuff of which poetry is made, and the key to its untranslatable beauty. They abound in the great languages of India."

—Marjorie Sykes,

# கல்வெட்டைக் காத்திடுங்கள்

திரு. இரா. நாகசாமி, M. A.,
இயக்குநர், தொல்பொருள் துறை, சென்னை.

நம் கோயில்களின் திருச்சுற்றுக்களிலுள்ள கற் சுவர்களில் ஏராளமான கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ஊருக்குப் பொதுவான இடமாதலால் கோயிலின் கற்களிலே கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டன. இக்கல் வெட்டுக்களில், அந்த அந்தக் கோயிலின் பெயர் என்ன, அங்குப் பிரதிட்டை செய்துள்ள கடவுளின் பெயர் யாது, எந்த எந்தக் காலங்களிலே வழிபாடு நடைபெற்றது, யார் யார் இந்த வழிபாட்டை ஏற்படுத்தினர், வழிபாட்டின் போது என்ன அமுது படைக்கப்பட்டது, வழிபாட்டிற்காக எவ்வளவு நிலம் மான்யமாகக் கொடுக்கப்பட்டது, அந்நிலத்திலிருந்து ஆண்டுக்கு எவ்வளவு தான்யம் பெறப்பட்டது, எந்த எந்த அரசர்கள் அப்பகுதியை ஆண்டிருக்கின்றனர், எந்த எந்த அரசர்கள் தாங்களே நேரில் அக்கோவிலுக்கு வந்திருக்கின்றனர், அக்கோவிலிலே திருப்பதியம் கற்பிக்கும் பள்ளியின் பெயர் என்ன, அங்கு வைத்தியசாலை இருந்ததா, அதை நிறுவியவரின் பெயர் என்ன, ஒரு விளக்கு எரிக்க வேண்டுமானால் அதற்கு எவ்வளவு பணம் செலுத்த வேண்டும், முதலிய அக்கோயிலைப் பற்றிய சிறந்த செய்திகள், இக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. தமிழக வரலாற்றுக்கு இவை மிகவும் துணையாக நிற்பவை, அக்கோயிலின் வரலாற்றுக்கு அடிப்படையானவை.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த கல்வெட்டுக்களைச் சிலர் அதன் பெருமை அறியாது அழிக்கின்றனர். சிலர் தங்கள் கருத்துக்கு ஏற்பப் பணி புரிய விரும்பி இவற்றைச் சிதைக்கின்றனர். முக்கியமாக, கோயிற்சுவர்களின் புறங்களை, சுண்ணும்பும், செம்மண்ணும் இட்டுப் பட்டைபூசி, கல்வெட்டுக்களை மறைக்கின்றனர். சுவர்ப்புறங்களுக்குச் சுண்ணமும், செம்மண்ணும் இடுவது சமீப காலத்தில் ஏற்பட்ட வழக்கம். சுவர்களின் புறத்தே கல்வெட்டுக்கள் பொறித்து இருப்பதிலிருந்து அவற்றின் மீது எதுவும் பூசாமல் இருப்பதே பண்டைய வழக்கம் என்று நன்கு புலனாகும். ஆலய வழிபாட்டிற்கு அமைந்துள்ள ஆகம நூல்களிலும் இவ்வாறு சுண்ணமும், செம்மண்ணும் பூசும் வழக்கத்திற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. இது ஒரு புதிதாகத் தோன்றிய வழக்கம். இதன் பயன் பல கல்வெட்டுக்கள் மறைவது. இவற்றை ஆண்டாண்டு தோறும் அழித்துப் பூசுவதினால் கல்வெட்டுக்கள் பெரும் சேதம் அடைகின்றன. சுண்ணும்பில் உள்ள காரம் கற்களைத் தின்று, அழித்துவிடும் நிலைக்குக் கொண்டு வந்து விடுகிறது. இந்த வழக்கத்தைத் தடுத்து நிறுத்துவதால் பண்டைய மரபைக் காத்ததோடு வரலாற்றையும்காத்த பெருமையையும் உடையவர் ஆவோம்.

ஒரு சில இடங்களிலே தொல்பொருள் ஆராய்ச்சியாளர் வருவதற்கு முன்னரே சில பகுதிகளைத் திருத்தி அமைத்து விடவேண்டும் என்று விரும்புவோரும் உண்டு. இதனால் ஏற்படும் நஷ்டம்—பெரும் தீங்கு, யாருக்கு, என்பதை நாம் ஒரு கணம் சிந்திக்க வேண்டும். எந்தக் கோயில்களிலே காணப்படுகின்றனவோ அந்தக் கோயிலின் வரலாற்றையும, தமிழக

வரலாற்றையுமல்லவா அழித்தவர் ஆகின்றோம்? பண்டைய காலங்களில் கோயில், ஊர் மக்களுடைய பொதுச் சொத்தாகக் கருதப்பட்டு வந்தது. ஊர்ச்சபைகளைப் பற்றிய வரலாறுகள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. ஊர்ச்சபைகளெல்லாம், கோயில்களிலே கூடிப் பணி புரிந்தன. சுமார் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழக வரலாற்றை எடுத்துக் கூறி வந்த கல்வெட்டுக்களை, ஓரிருவர் அறியாமையால் அழித்து விடாமல், விழிப்போடு இருக்க வேண்டியது பொது மக்களின் கடமையாகும்.

பல கோயில்களில் அறநிலையப் பாது காப்பு அதிகாரிகள் கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களை எப்பாடுபட்டும் பாதுகாப்போம் என்ற உறுதியோடு பணிபுரிகின்றனர். அறங்காவலர்கள் கல்வெட்டுக்களைக் காக்க இப்போது ஆர்வத்தோடு முன்வருகின்றார்கள். ஒரு சில எழுத்துக்களே இருந்தாலும் அவற்றைக் காக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி இப்போது எங்கும் காணப்படுகின்றது. இருந்த போதிலும் ஒரு சில அறியாமையால் ஏற்பட்ட பழக்கங்கள் இக்கல்வெட்டுக்களுக்குக் கூற்றாக அமைந்துள்ளன. அதில் முக்கியமாகச் சுண்ணாம்பும், செம்மண்ணும் பூசும்வழக்கத்தைக்குறைக்கவேண்டும். அடித்துத்தான் ஆகவேண்டுமென்றால், கல்வெட்டு இருக்கும் பகுதியை விட்டு விட்டு மற்றப் பகுதிகளிலே அடிக்கவேண்டும்.

சுண்ணாம்பையும், செம்மண்ணையும் விட்டு எண்ணெய் வண்ணங்களை உபயோகித்து இக் கல்வெட்டுக்களின் மேல் பூசி மறைத்து விடுகிறார்கள். சுண்ணாம்பையும், செம்மண்ணையுமாவது தண்ணீர் விட்டுக் கழுவி விடலாம். ஆனால், எண்ணெய் வண்ணங்களை இவ்வாறு எடுக்கவே முடியாது. மூன்றாவதாக, கற்சுவர்களின் இணைப்புக்களைச் சிமெண்டால் பூசி மறைப்பதாகும். இவ்வாறு பூசிய சுவர்கள் அருவருக்கத் தக்கவையாகக் காட்சி தருகின்றன. நம் பண்டைய ஸ்தபதிகள், கற்களை மிகவும் நுணுக்கமாகச் செதுக்கி ஒன்றோடு ஒன்று இணைந்து நிற்கும்படி இச்சுவர்களைத் தோற்றியிருக்கிறார்கள். இவ்வாறு தோற்றிய சுவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இன்று வரை நின்று வந்திருக்கின்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக எழிலோடு விளங்கியஇச்சுவர்களின்புறங்களைச்சிமெண்டு பூசி அருவருக்கத்தக்க காட்சியை அமைப்பது நம் மரபுக்கு ஏற்றதன்று. இவ்வாறு இணைப்புக்களைப் பூசும்போது கல்வெட்டுக்கள் சிதைகின்றன. கல்வெட்டுக்கள் தொடர்ச்சியற்று விடுகின்றன. எனவே இவ்வழக்கத்தையும் நாம் தடுக்கவேண்டும். நான்காவதாக, இக்கல்வெட்டுக்களின் மேல் மின்சாரக் கம்பிகளை எடுத்துச் செல்வதையும், மின் விளக்குகளைப் போடுவதையும் தவிர்க்க வேண்டும். ஐந்தாவதாக இக் கல்வெட்டுக்களின் சுவர்களின் முன்பு வேறு வேறு கட்டிடங்களை எழுப்பி, இவற்றை மறைந்து போகும்படி செய்வதும் கூடாது.

இதுகாறும் தமிழகத்தில் இருபத்தையாயிரம் கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஐயாயிரம் கல்வெட்டுக்கள் மட்டும் முழுமையாகப் பதிக்கப்பட்டுள்ளன. இன்னும் எவ்வளவோ கல்வெட்டுக்கள் படி எடுக்க உள்ளன. தமிழகத்திலுள்ள எல்லாக் கல்வெட்டுக்களையும் பதிப்பிக்க வேண்டுமென்று தமிழக அரசு ஓர் திட்டத்தை மேற்கொண்டு, அதற்கு வேண்டி ஆவன செய்து வருகின்றது. தமிழக அரசின் தொல்பொருள் துறை இப்பணியில் ஈடுபட்டு வருகின்றது. கல்வெட்டுக்களைப் பாதுகாப்பதில் மிகுந்த ஆர்வத்தோடு பணி புரிந்து வரும் அறநிலைய அதிகாரிகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். 1966 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழக அரசின் தொல்பொருள் பாதுகாப்புச் சட்டப்படி, தொல்பொருள்களுக்கோ, கலைப் பொருள்களுக்கோ, அல்லது கல்வெட்டுக்களுக்கோ தீங்கு புரிபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு உண்டு. எனவே இவற்றிற்குத் தீங்கு புரிபவர்களை அதிகாரிகளின் கவனத்திற்கு மக்கள் கொண்டு வர வேண்டும்.

கல்வெட்டைக் காத்திடுங்கள்!!

தமிழக வரலாற்றைப் போற்றிடுங்கள்!!

# ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாஹம்

(மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

## 2. க : வீர்யவாந்?

"வீர்யவாந்க:?" வீர்யமுடையவன் யாவன்? என்கிற இரண்டாவது வினாவை இனி விமர்சிப்போம். பகவானுடைய திருக்குணங்களில், வீர்யம் சௌர்யம் பராக்ரமம் என மூன்று குணங்கள் சேர்த்து அநுஸந்திக்கப்படுவதுண்டு. இம்மூன்று சொற்களுக்கும் பொருளில் வாசியில்லைபோல் தோன்றினாலும் வாசி கொள்ளலாம்.

### சௌர்யவீர்ய பராக்ரமங்களின் பாகுபாடு :

எதிரிகளின் சேனை எவ்வளவு பிரபலமாக இருந்தாலும் அதைக் கண்டு சிறிதும் அஞ்சாமை (1), அந்தச் சேனையினுள்ளே ஒருவனாகவே புகுந்து எதிரிகளை அநாயாஸமாகக் கொன்று முடிக்கும் வல்லமை (2), அப்படிச் செய்யுமளவில் தனக்குச் சிறிதளவேனும் பங்கம் நேராதபடி ஸகலவித பங்கங்களும் எதிரிகளுக்கே சாரநிற்றல் (3), என்றிங்ஙனமே மூன்று வகையான ஆற்றல்கள் பெரும் போர் வீரர்களுக்கு இருக்க வேண்டியவையுண்டு. இம் மூன்றையுஞ் சொல்லும் சொற்களாக இவற்றைக் கொள்ளலாம்.

இங்கு "க : வீர்யவாந்?" என்று வீர்யமொன்று மாத்திரமே சொல்லப் பட்டிருந்தாலும் மற்றையிரண்டும் உபலக்ஷணமாகக் கொள்ளத்தக்கன. அல்லது வீர்ய மென்ற சொல்லிலேயே அம்மூன்று பொருள்களையும் சேர அநுஸந்தானம் செய்யவுமாம்.

### சீலத்துக் கடுத்தபடி, வீர்யத்தைச் சொன்னதின் பொருத்தம் :

கீழே "குணவாந்க:" என்றவிடத்தில் பகவானுடைய எளிமைக் குணத்தை நினைத்து உருகி நெஞ்சு நீர்ப்பண்டமாகிக் கிடப்பவர்களுக்கு உடனே இந்தவீர்யத்தை அநுஸந்தித்தாலல்லது தரிப்புஏற்படாதாதலால் இதனை அடுத்த வினாவாக வைத்தது மிகப் பொருத்தமாகும். ஸௌலப்யத்தை யநுஸந்தித்து உருகுமவர்கள் ஈடுமெடுப்புமில்லாத மேன்மையை யநுஸந்தித்தே ஒருவாறு தரிக்க வேணுமென்பது ஆசாரியர்களின் அருமருந்தான அருளிச் செயல்.

### இராமபிரானுடைய மஹாவீரத்வம் ,

ஸ்ரீராமாயணத்திலும், மற்றும் இராமபிரானைப் பற்றிப் பேசும் பல நூல்களிலும் இராமனை வீரனென்றும் சூரனென்றும் பராக்ரமசாலியென்றும் பாராட்டிக்கூறுவது விசேஷமாகக் காணத்தக்கது. இராமனுக்கு மஹாவீரனென்ற ஒரு திருநாமமுண்டு. "ஜயஜய மஹாவீர!" என்றே ரகுவீரகத்யத்தின் தொடக்கம். வீரராகவனென்றே ஒரு திவ்யதேசத்தில் திருநாமம் பெற்று விளங்குகின்றமை ப்ரஸித்தம். பவபூதி மஹாகவி மஹாவீரசரித மென்றே பெயரிட்டு நூலியற்றினன். ஆழ்வார்கள் இராமனது செயலைச் சொல்லி வீரனென்றே வாய் வெருவுவர்கள்; "இலங்கை மன்னன்ஐந் தொடைந்து பைந்தலைநிலத்துகக் கலங்கஅன்று சென்று கொன்று வென்றி கொண்ட வீரனே" என்றும் "மாறுசெய்தவாளரக்கன் நாளுலப்ப அன்றிலங்கை நீறுசெய்து சென்று கொன்று வென்றி கொண்ட வீரனர்" என்று முள்ள (திருச்சந்த விருத்தம்) பாசுரங்கள் காண்க.

### ராவணன் கொண்டாடின ராமவீர்யம் :

இவையெல்லா வற்றிலுங் காட்டிலும் எதிரி கையாலே விடுதீட்டென்னுங் கணக்கிலே இராவணனே வியந்து போற்றும் வீரியம் இராமனுக்குள்ளது. (வால்மீகி. யுத்த 106-6). "நமக்கு சத்துருவாயும் புகழ்பெற்ற வீரமுடையனும் பராக்கிரமத்

திற்காகக் கொண்டாடத் தக்கவனுயுமுள்ள இராமனெதிரில்'' என்பது இராவணனுடையமொழி. இராமனை ப்ரக்க்யாத வீர்யனென்று இராவணன் தன் வாயினால் போர்க்களத்திற் சொல்லுவதானது அந்த வீர்யத்தைத்தான் மிக நன்ருக வநுபவித்ததனுலன்ரே! ''பராக்ரம விஷயத்தில் கொண்டாடத்தக்க'' என்றும் அடுத்த படியே சொல்லுகின்ருன்.

மூலபலவதத்தன்று காட்டின விர்யத்தின்விறு :

இங்ஙனே சொல்லும் படியாக இராமன் செய்த வீரச் செயல்கள் பலபல விருப்பினும் ஒன்றெடுத்துக் காட்டுவோமிங்கு. யுத்தகாண்டத்தில் தொண்ணூற்று நான்காம் ஸர்க்கம் காண்க. அங்கு மூலபலம் திரண்டவன்று இராமனுடைய அதிமாநிஷப்போர் வல்லமையைப் பேச வான்மீகி முனிவரும் தடுமாறுகின்ருர். இராமனுல் பலவாறு தகர்ப்புண்ட அரக்கரது சேனைகளைக் கண்டார்களே யொழியப் பம்பரமாகச் சுழல்கின்ற இராமனை ஒருவரும் காணமாட்டிற்றிலர் என்கிருர்.

மேலே, ஆயிரக்கணக்கான ஸ்ரீ ராம மூர்த்திகளைக் கண்டார்களென்கிருர். உடனே அந்தப் போர்க்களத்தில் இராமனொருவனையே கண்டார்களென்கிருர்.

இராமனைக் காணவேயில்லையென்பது, ஆயிரக்கணக்கான இராமர்களைக் கண்டார்களென்பது, ஒரு ராமனையே கண்டார்களென்பது—ஆகவிப்படி ஒன்ருெடொன்று சேராதவண்ணம் பேசும்படியாகவன்ரே பெருமாள் மிக விசித்திரமான போர்த் தொழில் நிகழ்த்திற்று.

திருவாய்மொழியில் (8-6-3) '' ஒருவரிருவரோர் மூவரென நின்று உருவுகரந்து உள்ளுந்தோறும் தித்திப்பான் '' என்ற பாசுரத்திற்குப் பூருவாசாரியர்கள் பொருள் நிர்வஹித்திருக்கிற விதம், இதர பண்டிதர்களின் புத்திகுச்சிறிதும்எட்டமாட்டாதது. ஒருவரிருவரோர் மூவரென நின்றதும் உருவுகந்ததும் எப்போதென்று தெரிந்து கொள்ள முடியாதபடி ஆழ்வார் பாசுரம் தோன்றியுள்ளது. இதற்குக் கீழ்ப்பாட்டு '' செருக்கடுத்தன்று திகைத்த வரக்கரை, உருக்கெடவாளிபொழிந்த வொருவனே '' என்று முடிந்திருக்கிறது. மேற்பாட்டின் முன்னடிகட்குக் கீழ்ப்பாட்டின் பின்னடிகளோடு அந்வயமென்று கண்டு உரை செய்தருளியுள்ளார்கள்.

இங்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்திகள் இவை காண்மின்;— ''ஒருவரிருவரோர் மூவரென நின்று உருவுகரந்து—உருக்கெடவாளி பொழிந்த வொருவன்'' என்றுகீழோடே அந்விதமாகக் கடவது. மூலபலம் சாம்படி அருளுகிற வன்று முந்துற ஒருவனுய்த்தோற்றி, சாரிகையில் வேகம் மிகமிக இருவரும் மூவருமாய்த் தோற்றி, வேகம் மிக்கவாறே இந்த்ரிய ஸம்யோகத்துக்கு இடமில்லாதபடியாகையாலே ரூபக்ரஹணம் அரிதாகி உருக்கெட வாளிபொழிந்த வொருவனென்று அந்வயம். வ்யாபரித்த சடக்காலே ரூபம் கண்ணுக்குப் பிடிபடாதொழிகை'' என்று. இதனுல் இராமனது வீரம் வாசாமகோசரமென்றதாயிற்று.

ராமவீர்யத்தில் தோன்றும் சங்கையும் பரிஹாரமும் :

இராமன் இவ்வளவு மஹாவீரனுயிருக்கும்போது இராவணனை ஒரு நொடிப் பொழுதில் கொன்றிருக்கலாமே; அங்ஙனம் கொல்லாது வெகு ப்ரயாஸங்கள் பட்டதாகத் தெரிகிறதே, அஃது ஏன்? என்று சிலர் கேட்கக்கூடும். கேண்மின்; ''பொல்லாவரக்கனைக் கிள்ளிக் களைந்தானை'' என்று ஆண்டாளும் ''சதுரமாமதிள் சூழிலங்கைக்கிறைவன் தலைகள்பத்துதிரவோட்டி'' ஓர்வெங்கணையுய்த்தவன்'' என்று திருப்பாணுழ்வாருமருளிச் செய்தபடியே ராவண ஸம்ஹாரத்தைப் பெருமாள் அவலீலையாகவேதான் செய்தார். அதில் ஐயமொன்றுமில்லை.

''எப்படியாவது ராவணன் உடன்பட்டு வழிபட்டு உஜ்ஜீவிக்கவும் ஜீவிக்கவும் ப்ராப்தமாமோ? என்கிற நசை பெருமாளுக்கு இருந்தமையினுலேயே அவனை ஸம்ஹரிப்பதுல காலதாமதம் செய்யப்பட்டதெனகிற தத்துவம் உணரத்தக்கது. இராவணனைக் காட்டும் பன்மடங்கு வலிமை மிக்கவனென்று ப்ரஸித்தி பெற்றிருந்த வாலியை அநாயாஸமாக முடித்தவர் பெருமாள் (ஸுந்தரகாண்டம் ஸர், 51 ச்லோ, 11). திருவடி இராவணனுக்கு ஹிதோபதேசம் செய்கையில் 'அப்பா ராவணு! வாலியென்கிற வாநரேச்வரரை ஏற்கெனவே நீ அறிவாயன்ரே, அவர் இராமனுல் ஒரே அம்பினுல்முடிக்கப்பட்டாரகாண்'என்கிருர்.

அன்றியும் இராவணனைப் பலவாறு பங்கப்படுத்தியவன் கார்த்த வீரியார்ஜுனன். அன்னவனைப் பரசுராமன் தனது கோடா

லிப் படையினுல் ஆயிரங்கைகளையும் வெட்டிக் கொன்றவன். அப்பரசுராமன் இராமபிரானிடம் பட்டபாடு தெரிந்ததே. இத்தகைய ஒப்புயர்வற்ற ஆற்றல்பெற்ற இராகவன் இராவணனைச் சங்கரிக்கச் சிரமப்படவேண்டுமோ? சிரமப்பட்டதாகக் கதையிலே கண்டால் ஸத்யஸங்கல்பனும் மஹாவீரனுமான இராமன் எதற்காக இப்படிச் சிரமப்பட்டானென்று ஆராய வேண்டுமன்ரே.ஆராய்ந்தஅளவில், கீழே நாம் தெரிவித்த காரணமே ஊர்ஜிதமாகும்.

சூர்ப்பணகை மூக்கறுப்புண்டு ஜனஸ்தானத்திலிருந்த தன் தமையனுகிய கரனிடஞ்சென்று செய்தியறிவித்துப் புரண்டழுது அவனுக்குக் கோபத்தையுண்டாக்க, அவன் பதினுலாயிரம் ஸேனுதிபதிகளையும் ஸேனைகளையும் இராமனேடு போர்புரிய வனுப்ப, இராகவன் அவர்கள் அத்தனை பேரையும் தாம் ஒருவராகவே கொன்று வென்றிட, பிறகு கரன்தானே நேரில் வந்து எதிர்க்க இராமன் ''அஸஹாயசூர!' என்று ரகுவீரகத்யத்தில் விளிக்கும்படியாக லக்ஷ்மணனையும் துணை கொள்ளாமல் ஏகாகியாய் அவன் தலையை யறுத்திட்டதும் ப்ரஸித்தம்.

''கொடிய கொள்கையையுடைய அரக்கர்களோ பதினுலாயிரவர்; தருமமூர்த்தியான இராமனே ஒருவன்; இப்போர் எங்ஙனமே யாகப்போகிறதோ'' என்று வயிறு பிடித்த மஹரிஷிகளும் வியக்கும்படி அவலீலையாக வன்ரே நீறு செய்தது. அத்தகையபேராற்றல் பெற்ற பெருவீரனுக்கு இராவணன் ஒரு பதார்த்தமோ? ஒரேயடியில அவனைத் தொலைக்கமாட்டாமையில்லை. எவ்வகையினுலாவது அவன் அபிமுகனுக வருகிருனேவென்றுபார்த்திருந்தாரததனை.இது பெருமாளுடைய வார்த்தையினுலேயே நன்கு விளங்கும்படியை நிரூபிப்போமிங்கு.

ஸ்ரீராமாயண யுத்த காண்டத்தில் 'சாகும் வரையில் தானே பகைகள்; நம்முடைய பிரயோஜனமோ நிறைவேறி விட்டது. விபீஷணு! இவனுக்கு ஈமக்கடன் செய்யக்கடவை;உனக்குப்போலேஎனக்கும் இவனேடு உறவு உள்ளது' என்பது விபீஷணுழ்வானை நோக்கிப் பெருமாளருளிச் செய்ததொரு ச்லோகம். இராவணன் மாண்ட பின்பு 'இந்த மஹாபாபிக்கு நான் உத்தரக்ரியை (ஈமக்கடன்) பண்ண மாட்டேன்' என்று ஒரு நிலைநின்ற விபீஷணுழ்வானை நோக்கிக் கூறியது இது. ஸாதாரணமாக வடமொழிபயின்ற அனைவரும் ஸ்ரீராமாயணத்தில் இறங்கி அர்த்தம் சொல்லப் புறப்படுவது வழக்கமாதலால், அப்படிப்பட்டவர்கள் இதற்குக் கூறும் பொருள் எங்ஙனேயென்னில், 'உலகத்தில் ஒருவனிடத்து ஒருவனுக்குப் பகை மரணம் வரைக்குமே யாதலால் இந்த ராவணன் மாண்டொழிந்த பின்பும் இவனிடத்து நாம் பகை வைப்பது ஏதுக்கு? இவனை வதை செய்வதும், பிராட்டியைக் கைக்கொள்வதுமே நமக்கு ப்ரயோஜனமாதலால், அது நிறைவேறப் பெற்ற பின்பும் இவன் மீது நாம் பகை பாராட்டலாகுமோ? பகையை மறந்து இனி இவனுக்குச் செய்ய வேண்டியதைச் செய்— என்று பெருமாள் கூறுவதாகவே பலரும் பொருள் சொல்லுவர்.

இப்பொருள் பொருத்த முடைய்தன்றென்றும், இது இராமபிரானுடைய திருவுள்ளத்திற்கு ஒவ்வாததென்றும், நம்பிள்ளை திருவுள்ளம்பற்றி இன்சுவைமிக்க வியாக்கியானம் செய்தருளியுள்ளார். (அதனையே இங்கு விவரிக்கிருேம்). இதுவரை பெருமாள் மீது இராவணன்பகை பாராட்டியிருந்தானேயல்லாது, இராவணன் மீது பெருமாள் சிறிதும் பகை பாராட்டியிருந்ததில்லை; விபீஷணுழ்வானைப் பரிக்ரஹிப்பதா? விட்டுவிடுவதா? என்று விசாரம் நடந்து பரிக்ரஹிப்பதென்று நிச்சயித்து,

''சுக்ரீவா! இந்த விபீஷணனை அழைத்து வா; இவனுக்கு நான் அபயம் அளித்தாயிற்று'' என்று சுக்ரீவனை ஏவி விபீஷணனை அழைத்துக் கொண்டு வர நியமித்தபோது ''வந்தவன் விபீஷணுயிருந்தால் ஸரி. இராவணனே மாறுவேஷம் பூண்டு வந்திருந்தாலும் ஸரி; விடாதே கொண்டுவா'' என்று பெருமாள் கூறியுள்ளார். அங்ஙனே சொன்ன பெருமாளுடைய திருவுள்ளத்திற்கு இணங்கவல்ல பொருளன்ருே பணிக்க வேணும்.

மரணுந்தாநி வைராணி ச்லோக விசேஷார்த்தம் :

இது கேண்மின்; விபீஷணு! இவ்விராவணன் ஜீவித்திருக்கும் நாளிலேயே இவனுக்குச் சில நன்மைகள் நான் செய்யக் கருதியிருந்தேன்; அவை ஈடேருதபடிக்கு இவன் பலவகையான த்வேஷ காரியங்களைச் செய்து வந்தான். மஹரிஷிகளின் குடியிருப்பை யழித்தான். பிராட்டியைப் பிரித்தான். நம் உயிர் நிலையான ஸ்ரீ ஜடாயு

மஹாராஜரை நலிந்தான். இப்படிப்பட்ட வைரங்களை இவன் தான் சாகிறவரையில் செய்து தீர்த்தானாயினும், இனிச் செய்யப் போகிறதில்லையே—என்பதே 'மரணாந்தாநி வைராணி'' என்பதற்குப் பொருள். (வைராணி என்றது வைரகார்யாணி என்றபடி).

''இனி நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜனம்'' என்றதுதான் இங்கு உயிரான வார்த்தை. இதன் பொருளைத்தான் செவ்வனே உணரப்பெற வேணும். ''இவனை முடிக்கவேண்டியது நமக்கு ப்ரயாஜனம்; அது நிறைவேறி விட்டது'' என்று பெருமாள் சொல்லுவதாகக் கொள்ளவே கூடாது; அப்பொருள் நெஞ்சாலும் நினைக்கத்தக்கதன்று. எடுத்துக் கழிக்கவுந்தகாத பொருள் அது. இதற்கு நம்பிள்ளையருளிச் செய்திருக்கிற ஸ்ரீஸூக்தியை அப்படியே எழுதுகிறோமிங்கு.

''(நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜனம்)இவன் ஜீவித்திருக்கிற நாளிலே நாம் செய்யும் நன்மையை இவன் விலக்காதொழிய வேணுமென்று இதனையே பெறப்பார்த்திருந்தோம்; அது அந்நாளில் பெற்றிலோம். நாம் தேடி யிருந்தவது முந்துறமுன்னம் ஸித்திக்கப் பெற்றோமிறே'' என்று

இதைச் சிறிது விவரிப்போம். பகவான் சேதநர்களுக்கு நன்மை புரியக் கடமைப் பட்டவன். தான் செய்ய நினைத்த நன்மைகளை நிர்ஹேதுகமாகத் தானே செய்துவிடலாமானாலும் ''எம்பெருமான் ஸர்வக்ஞனாயிருந்தாலும் இயற்கையில் கருணைக் கடலாயிருந்தாலும், உலக நிர்வாஹம் பழுதற நடைபெறும் பொருட்டுக் காக்கப்பட வேண்டியவனது வேண்டுகோளை எதிர் பார்க்கின்றான்'' என்று சாஸ்திரங்களிற் கூறியிருப்பதனால் சேதநர்களிடமிருந்து சிறிது எதிர்பார்த்திருக்கிறான் என்று ஏற்படுகின்றது.

அப்படி பகவான் எதிர்பார்த்தது எது? என்னில்: அதை நாம் ஒருவிதமாக நிஷ்கர்ஷித்துச் சொல்லமுடியாது. கர்மயோகம் ஜ்ஞாநயோகம் பக்தியோகம் முதலானவற்றில் ஏதேனுமொன்றை எதிர்பார்க்கக் கூடும்; ''நாம் செய்யும் நன்மையை இவன் விலக்காதிருக்க வேணும்; என்று இவ்வளவே யெதிர்பார்ப்பதுமுண்டு; அதற்கு அப்ரதிஷேதம் என்று பெயர். ப்ரதிஷேதம் விலக்குகை; அப்ரதிஷேதம்—விலக்காமை. பகவானுடைய கருணை நம்மேல் பெருக வொண்ணாதபடி நாம் தந்தலை வெட்டிகளாய்த் திரிவதுண்டே அதுதான் விலக்குகை; நம்முடைய விபரீத ப்ரவ்ருத்திகளைக் கண்டு பகவான் ''ஐயோ! நம்முடைய கருணைபுகுவதற்கும் இடம் தாராமல் இப்படி தடை செய்கிறானே பாவி'' என்று கண்ணீர் பெருக்கி நிற்பன். சேதநன் அநுகூல ப்ரவ்ருத்தியொன்றும் செய்யாமற்போனாலும், விபரீத ப்ரவ்ருத்திகளைச் செய்யாமலாவதிருந்தால், அவனுடைய அருள்வெள்ளம் தடையின்றிப் பெருகியே தீரும். இதை ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் ஆழ்வான் அற்புதமாக அருளிச்செய்கிறார். ''பதினாயிரம் பிரம கற்பம் அளவும் அநுபவித்தாலும் தீராத பாவங்களை சேதநன் அரை நொடிப் பொழுதில் செய்கிறான்'' (ச்லோ. 61). இதில் ''சேதநனுடைய கெடுதலான எண்ணம் தொலைந்த உடனே அவனை மன்னிக்கிறாய் பெருமானே''. என்பது உயிரான வார்த்தை சேதநன் ஸுக்ருத விசேஷங்களைச் செய்யாமற் போனாலும் துஷ்க்ருதமாவதொன்றும் செய்யாமலிருந்தால், அவ்வளவையே பற்றாசாகக் கொண்டு எம்பெருமான் அருள்புரிந்து தீருகிறான் என்பது தான், இந்த கூரத்தாழ்வானது ஸ்ரீஸூக்தியில் காட்டப்பட்ட விஷயம்.

நாமாகவொரு ஸுக்ருதமும் செய்யாதவளவில் அதைப் பற்றிச் சிறிதும் கவலையில்லை. எம்பெருமானது கருணைப் பெருக்குக்குத் தடையாக அவனொரு எதிரம்பு கோப்பதும், அவனாக அருள் செய்யத் திருவுள்ளம் பற்றினாலும் அதையும் தடைசெய்வதுபோல் நாம் விபரீத ப்ரதிகூல ப்ரவ்ருத்திகளிலே கைவைப்பதுமாயிருந்தால் அது கண்டு எம்பெருமான் ஐயோவென்று சோகிக்கவே நேர்கின்றது.

இராவணன்பிராட்டியைக்கவர்ந்தது, ஜடாயுவை நலிந்தது, பரம பாகவதர்களைக் குடியிருக்க வொட்டாது தீங்கிழைத்தது முதலியன செய்தாலும் இவற்றைப் பொருட்படுத்தமால் கருணைக் கடலான காகுத்தன் ''இன்றுபோய் நாளைவா'' என்பது முதலிய வார்த்தைகளினால் இரக்கக் குறிகாட்டியிருந்தும், அந்தோ! அவன் பெருமாள் திருவுள்ளத்தை யறியப் பெற்றிலன். ''இன்று புறப்பட்டுப் போ; அநுமதி தருகின்றேன்'' என்ற பெருமாள் நியமனத்தைப் பெற்று இல்லம் சென்ற அவன், திரும்பவும் போர் புரிய வாராதிருந்தானாகில், பெருமாள் அவனையே இலங்கைக்கு அரசனாக்கி வைத்திருப்பார்!

(தொடரும்)

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

(திரு. வி. பலராமையா அவர்கள், பி.எ.பி.எல்.
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8)

"சித்தர்கள் மருந்து" என்ற தலைப்பில் சில கட்டுரைகள் எழுதத் தொடங்கி, அறுகம்புல் என்னும் பிள்ளையார் மூலிகையைப் பற்றி, முன் இரண்டு கட்டுரைகளில் எழுதினேம். மூலிகைகளைப் பற்றித் தனிப்பட்ட முறையில் எழுதுவதைக் காட்டிலும், மனித உறுப்பு களை ஒவ்வொன்ருக எடுத்துக் கொண்டு, அதனதற்கு விளையும் பிணிகளைப் பற்றி எழுதி அதற்கு உகந்த மூலிகைகளையும், அவைகளை உபயோகிக்கும் முறைகளையும் பற்றி எழுதி னல், எல்லோருக்கும் பயன்படுமெனக் கருதி, இக்கட்டுரையில் "உச்சி" என்பதை முதலா வதாகத் தொடங்கி, பாதம் வரையில் தனித் தனி உறுப்புக்களைப் பற்றி எழுத முற்பட்டுள் ளேன்.

இவ்விதம் எழுதுங்கால் "உச்சி" என்னும் தலைப்பில் வரும் கட்டுரையை மாத்திரம் சிறிது விரிவாக எழுதுவது சிறந்ததெனக் கருதுகிறேன். வாசகர்கள் இதை நேரத்தின் முக்கியத்தைக் கருதாமல் கூர்ந்து படிக்கும் படி வேண்டுகிறேன்.

இதற்கு முன் கட்டுரையில், இந்த உச்சி யின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பஞ்சபூத சக்திகளின் வலிமையை எழுதுங்கால் குறிப் பிட்டிருந்தேன். ஒரு சில இடங்களில் அக்கட் டுரையின் பொருள், திரும்ப இக்கட்டுரையில் வரக்கூடுமாயின் அதைப் பொருட்படுத்தாது, சந்தர்ப்பத்தை அனுசரித்து எழுத நேரிட்ட தென்பதை வாசகர்கள் அறிய வேண்டு மென்று கோருகிறேன்.

மனித உடலில் தலையெனும் உறுப்பு மிக மிக முக்கியம் வாய்ந்தது. இந்தத் தலைதான் பிரணவம் ஆகிய "ஓம்" குடியிருக்குமிடம். பஞ்சபூத சக்திகளாகிய "நமசிவாய" என் பதைமந்திரமாகக்கருதும் ஐந்தெழுத்துக்களில் நான்கெழுத்துக்கள் வாசம் செய்யுமிடம் தலை யே. பிரதானமாக விருக்கும் "மூலை" யென்னும் பராசக்தியிருக்குமிடம் இத்தலை தான். சிவன் என்னும் தலைவன் இருக்கும் இடம்தான் தலை. மண்டைகனத்தவன், தலை கர்வம், வணங்காமுடியென்ற சில சொற்கள் அகங்காரமுடையவனை நோக்கிக் கூறுவது, உலக இயல்பாயுள்ளது. இறந்தானென்னும் கருத்தைக் குறிக்க "மண்டையைப் போட் டான்" என்று திருநெல்வேலி மாவட்ட மக்கள் பேசுவண்டு. இதைக் கேட்டு நான் மிக்க மகிழ்ச்சியுறுவதுண்டு. மண்டையில் உள்ளது மூலம் என்பது, அம்மாவட்ட மக் களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ, உலக வழக்கமாக மேற்சொன்ன மொழியை உப யோகித்து வருகிருர்கள்.

ஒருவனுடைய உடலிலுள்ள எந்தப் பாரிசத் தின் எறும்புகள் நொறுங்கி விட்டாலும் அவனுடைய உயிருக்கு ஆபத்து உண்டாவ தில்லை. ஆனல் தலையில் கபாலத்திற்குப்பழுது நேரிடுங்கால் உயிர் நிச்சயமாய்ப் போய்விடு கிறது. எந்த மருத்துவனலும் அந்தப் பழு தைச் சீர்திருத்த முடிவதில்லை. ஆகவே தலை யெனும் சிகரம் மனித உறுப்புகளில் பிரதான மானது. சூரிய சந்திரர்கள், முக்கோடி தேவர் கள், மும்மூர்த்திகள் வசிக்கும் இடம், அந்த சிகரந்தான். ஒலியும் ஒளியும் புணர்ந்து இருக் கும் இடம், அதுதான். அகாரம், உகாரம், மகாரம், வகாரம், சிகாரம், யகாரம் வாசம் செய்யுமிடமும் அதுதான். "தன்னையறிந்தவன் தலைவனையறிவான்" என்பது சித்தர்கள் மொழி.

அதையே 'தலையை வணங்குபவன் தான் தன்னையறிவான்' என்று மாற்றியமைப்பினும் அது உண்மைக்குப் புறம்பானதல்ல.

"தன்னையறிந்திருந்த தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சையவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே''

(திருமந்திரம்)

இச்செய்யுளில் 'சென்னியில் வைத்த சிவன்' என்பதைக் கவனிக்கவும்.

கடவுளே போற்றி என்னைக்
கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி என்னை
யாண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை
யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி

(திருவாசகம்)

என்னும் செய்யுள் குறிக்கும் தத்துவமானது, பிரணவத்தின் மத்திய பாகமானது மூடியிருக்கின்றது. அதைத் திறந்துதான் ஞான கர்மத்திற்கு வேண்டிய ஆயுதங்களை எடுக்க வேண்டும். அந்தப் பாகத்திற்கு இருதயக் கமலம் என்றும், உந்திக்கமலம் என்றும், மணிபூரகமென்றும், நாபிக் கமலமென்றும், மௌனமென்றும் பெயரிட்டு இருக்கின்றார்கள். சங்கரா என்னும் பதமானது சங்கையும் சர்ப்பத்தையும் குறிக்கின்றது. சங்கானது சத்தத்தின் மூலமாயும், சர்ப்பமானது சிவன் வெளிப்படும் இருதய கமலத்தையும் பிரம்ம ரந்திரத்தையும் மறைத்துக் கொண்டிருப்பதால் வாலின் நுனி முதல், உச்சி வரையில் செல்பவர்கள்தான் சிவத்தைக் காண முடியும்.

(தொடரும்)

---

## மதிப்புரைகள்.

**(1) உபய வேதாந்த க்ரந்த மாலை:** சென்னை, தியாகராயநகர், 7, நாதமுனி தெருவில் உள்ள விசிஷ்டாத்வைத பிரசாரிணி சபா, கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக வைஷ்ணவ சமயத்திற்குப் பெருந் தொண்டாற்றி வருகின்றது. சென்னை செங்கற்பட்டு, தென்னாற்காடு, கோயமுத்தூர், திருநெல்வேலி, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சை முதலிய மாவட்டங்களிலும், ஆந்திரம், கேரளம், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம். உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீஹார், ராஜஸ்தான், மைசூர், பாண்டிச்சேரி, டில்லி முதலிய பிற பகுதிகளிலும், பெருமக்கள் பலர், இச்சபையின் உறுப்பினர்களாக விளங்கி வருகின்றனர்.

சிறந்த வைஷ்ணவப் பேரறிஞர்கள் பலரைக் கொண்ட 'பதிப்பாசிரியர் குழு' ஒன்று அமைக்கப்பெற்று, இச்சபையின் சார்பில் வைஷ்ணவ சமய இலக்கியங்கள் பற்பல, தமிழ் ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில், வெளியிடப்பெற்று வருகின்றன. அவைகளுள் எல்லாம் "உபய வேதாந்த க்ரந்த மாலை'' என்னும் பெயரில் வெளியிடப் பெற்றுள்ள இந்நூல்கள், மிகவும் தலைசிறந்து திகழ்கின்றன,

**(2)** ஸ்ரீ பரமஹம்ச பரிவ்ராஜக ஸ்ரீரங்க ராமானுஜ மஹாதேசிகன் திருவடியான **ஸ்ரீஉத்தமூர். தி. வீரராகவாசாரியர்** அவர்கள், திவ்வியப் பிரபந்தங்களுக்கு இயற்றியுள்ள **'ப்ரபந்தரக்ஷை'** என்னும் விரிவுரைகள், மிகச் சிறந்த முறையில், பல பெருந் தொகுதி களாக வெளியிடப் பெற்றுள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பெரியாழ்வார் திருமொழி | விலை | .... | ரூ. | 12—00 |
| 2. | திருப்பாவை | ,, | .... | ரூ. | 3—50 |
| 3. | நாச்சியார் திருமொழி | ,, | ... | ரூ. | 4—00 |
| 4, | பெருமாள் திருமொழி | ,, | .... | ரூ. | 1—50 |
| 5. | திருச்சந்த விருத்தம் | ,, | .... | ரூ. | 2—00 |
| 6. | திருமாலை, திருப்பள்ளி எழுச்சி, அமலன் ஆதிபிரான் கண்ணிநுண் சிறுத்தாம்பு | ,, | .... | ரூ. | 3—00 |
| 7. | இயற்பா 1, 2, 3, 4 திருவந்தாதிகள் | ,, | .... | ரூ. | 6—50 |
| 8. | நம்மாழ்வார் பிரபந்தங்கள், 5 தொகுதிகள்-தனித்தனியே | ,, | .... | ரூ. | 54—00 |

இவ்வுரை நூல்களின் அருமை பெருமைகள் அளவிடற் கரியன. வடமொழி தென்மொழி என்னும் இரு பெரும் மொழிகளையும் கடைந்தெடுத்து, வடித்தளித்த அமிழ் தம் போல, இவை அனைத்தும் விளங்குகின்றன. பாடல்களுக்குப் பதவுரையாக அமைந்த பொழிப்புரை, விளக்கவுரை முதலியன, பழைய சம்பிரதாய உரைகள் பல வற்றையும் விடாமல் தழுவி, விரிவாக அமைந்துள்ளன.

வைஷ்ணவ நூல்களில் அன்பும் ஆர்வமும் அறிவும் உடையோர்க்கு இந்நூல் கள் ஆராப் பெருவிருந்தாகும். வைஷ்ணவப் பெருமக்கள் அனைவரின் இல்லங்களிலும் இவ்விலக்கியச் செல்வங்கள், தனிச் சிறப்பாக வாங்கி வைத்துப் போற்றிப் பயன் கொள்ளுதற்கு உரியன. வைஷ்ணவர் அல்லாத ஏனைய தமிழ் அன்பர்களும் பிறரும் கூட, வாங்கிப் படித்துப் பயன்பெறுதற்குரிய அரிய கலைச் செல்வங்களாக இந்நூல்கள் விளங்குகின்றன!

நமது சமய வளர்ச்சியிலும் பாதுகாப்பிலும், பற்றும் கருத்தும் உடைய அனை வரும், இத்தகைய நூல்களை வாங்கி ஆதரிக்கப் பெரிதும் கடமைப் பட்டுள்ளனர். இந்நாளில் இதுபோன்ற மிகப் பெரும் நூல்களையெல்லாம் ஆராய்ந்து கற்றுணர்ந்த வரும், விளக்கி உரை எழுதுவோரும், அவற்றை வெளியிடுவோரும், மிகமிக அரியராக உள்ளனர். அத்தகையவர்களின் அரும்பெரும் தொண்டு முயற்சிகளுக்கு, ஆதரவும் ஊக்கமும் அளிக்க வேண்டுவது, நம்மனோர் அனைவருக்கும் உரிய தலையாய கடமையாகும்.

—ஆசிரியர்.

(2) சிவஞானபோதம்—உரை :

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தின் சரர்பில் 'சித்தாந்த கலாநிதி' திரு ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் நிகழ்த்திவந்த தத்துவச் சொற்பொழிவுகளின் சாரமாக, இந்நூலைத் 'திருக்குறள்வேள்' திரு. ஜி. வரதராஜபிள்ளை, B. A., அவர்கள், சிறந்த முறையில் சுருக்கமாகத் தொகுத்து அழகுற வெளியிட்டுள்ளார்கள். திருக்குறள், திருவாசகம் என்னும் இருபெரும் சிறந்த நூல்களுக்கு முன்னரே உரை எழுதி வெளியிட்டுள்ள அவர்கள், சைவ சித்தாந்தத் தலைமணி நூலாகிய சிவஞான போதத்திற்கும் எளிய இனிய தெளிவான நடையில் இவ்வுரை நூலை இயற்றி அளித்திருப்பது மிகவும் பாராட்டுதற்குரிய நற்பெரும் செயலாகும்.

இப்பெருந்தகையாரின் சைவத் தமிழ் நலங்கள் இணையற்றனவாகும். உயர் குடிப் பிறப்பும், உத்தமக் குணங்களும் வாய்ந்து, அறப்பெருஞ்செயல்கள் பல ஆற்றி வரும் சிவநெறிச் செந்தமிழ்ச் செம்மலாகிய 'திருக்குறள்வேள்' அவர்களின் இவ்வுரை நூல், சிவஞான போதப் பேருரை நூலைப் பயிலுதற்கு ஓர் அடிப்படைப் பயிற்சி நூலாய் அனைவர்க்கும் பெரிதும் பயன்படும். விலை : 50 காசு. கிடைக்குமிடம் : திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம். திருச்சிராப்பள்ளி—2.

(3) சைவ அநுட்டான விதியும் விளக்கங்களும் :

இந்நூல், தேவகோட்டை சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி) அவர்களால் இயற்றப்பெற்று, திருக்காருயில் அறங்காவலர் தேவகோட்டைச் சிவபூசைச் செல்வர் முத்து கரு. அரு. கரு. அருணாசலம் செட்டியார் அவர்களின் 59-ஆம் ஆண்டு நிறைவு அஸ்திராபிஷேக மலராக வெளியிடப்பெற்றது. சைவ அநுட்டானக் கிரியைகளை இந்நூல் மிகவும் தெளிவுற, அழகுற விளக்குகின்றது. சைவ அநுட்டானக் கிரியைகள் பலவற்றின் தத்துவக் கருத்து விளக்கங்களை ஆசிரியர் இந்நூலில் மிக நன்றாக விளக்குகின்றார். பல்வேறு மந்திரங்கள். தமிழ் எழுத்துக்களில் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. தெய்வங்களைப் பற்றிய தியானச் செய்யுடகளும், திருமுறைப் பாடல்களும் சேர்த்திருத்தல் குறிக்கத்தக்கது. சைவக் கிரியைகளில் செய்யப் பெறும் முத்திரைகளின் விளக்கங்களை வரையோவியங்களுடன் பதிப்பித்திருப்பது இந்நூலுக்குத் தனிச் சிறப்பைத் தருகின்றது. கிடைக்கும் இடம் : சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை. விலை : 75 காசு, அஞ்சற் செலவு 25 காசு.

(4) தேவாரத் தலவணக்கம் :

இந்நூல் காரைக்குடியில் சைவ சித்தாந்தப் பெருவாழ்வு வாழ்ந்து, பல நூல்கள் இயற்றிப் புகழ்பெற்று விளங்கிய சான்றோர் திரு. சொக்கலிங்க ஐயா அவர்களின் புதல்வர், திருநாவுக்கரசு அவர்களால் தொகுக்கப்பெற்றது. தமிழ்க்கடல் திரு. ராய. சொ. அவர்களின் முன்னுரை பெற்றது. இந்நூல் தேவாரம் பெற்ற 275 தலங்களையும் நினைத்துப் போற்றி வழிபடுவோர்களுக்குப் பெரிதும் பயன்படும் கையடக்கமான சிறிய நூல்! விலை குறிக்கப்படவில்லை. கிடைக்குமிடம் : சிவநேசர் திருக்கூட்டம், காரைக்குடி.

—ஆசிரியர்,

# திருக் கழுக்குன்றச் சிறப்பு

(அருட்டிரு. அழகர் அடிகளார், மாம்பாக்கம் குருகுலம்)

முன்னுரை :

இது நல்ல அமைப்புக்கள் பலவுள்ள தலம். கழுகு + குன்றம் என்பது கழுக்குன்றம் என்று திரிந்து விட்டது. 'கு'வை விட்டாலும் 'திரு'வை விடாமல் 'திருக்கழுக்குன்றம்' என்றே வழங்குகின்றோம். பாமர மக்கள் கூட, கழிக்குன்றம் என்று சொன்னாலும், 'திரு'வை விடாமலேயே சொல்லுகின்றனர். தொண்ட நாட்டில் காஞ்சிபுரம் கோயில்கள் நிறைந்த பெரிய தலம். சிதம்பரம் சைவர்களுக்கு முதன்மையான தலம். சென்னையில் மயிலாப்பூர் தேவாரப் பாடல் பெற்றது. இவற்றைத் திருக்கச்சி, திருத்தில்லை, திருமயிலை என்று நாம் அன்றாட வழக்கில் வழங்குவதில்லை. திருவான்மியூர், திருப்போரூர், திருக்கச்சூர் என்று சில தலங்களுக்கு மட்டுமே எல்லோராலும் 'திரு' என்னும் அடைமொழி விடாமல் வழங்கப்படுகிறது. அவற்றுள் ஒன்று நம் திருக்கழுக்குன்றம். இதனை விவரமறியாத எழுத்தறிவற்ற சிலர் திருக்கழிக்குன்றம் என்று வழங்குகிறார்கள். அதை நாம் திருத்த முயல வேண்டும்.

பெயர்ச் சிறப்பு :

'திருக்கழுக்குன்றம்' என்னும் இப்பெயரில் இரண்டு சிறப்பு. ஒன்று 'கழுகு'. மற்றொன்று 'குன்றம்'. இங்கே இரு கழுகுகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உச்சிப் போதில் வந்து உணவு கொள்ளுகின்றன. நம் சமயாசிரியராகிய மாணிக்கவாசகர் காலம் 1700 ஆண்டுக்கு முற்பட்டது. அவர் காலத்துக்கு முன்னரே இவ்வழக்கு இருந்திருக்கின்றது. பின் வந்த திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திகள், பட்டினத்தார், அருணகிரியார் காலங்களிலும், இக்கழுகுகள் வந்திருக்கின்றன என்று தெரிகிறது. 'கழுகு தொழு வேத கிரி சிகரி' என்றே அருணகிரியார் குறிப்பிட்டுப் பாடியிருக்கின்றார். இப்போதும் இப்பறவைகள் வருவதை நாம் பார்க்கின்றோம்.

தல புராணங்களில் அவ்வத் தலத்தைப் பற்றிப் பற்பல செய்திகள் கூறப்பட்டிருக்கும். ஆனால் அச்செய்திகள் இன்றும் காணப்படும் நிலையில் அத்தலங்களிற்பல இல்லை. ஆனால் திருக்கழுக்குன்றத்தில் இன்றும் தலபுராணத்தில் உள்ளபடி இரண்டு கழுகுகள் வருகின்றன. அதற்கு என்ன காரணம் என்று இப்போது சிந்திக்க வேண்டுவதில்லை. சிலர் 'மந்திரம்' என்பர், சிலர் 'உணவு கொடுப்பதால்' என்பர், சிலர் 'பழக்கம் காரணம்' என்பர். என்ன சொன்னாலும், குறிப்பிட்ட பறவை வருகிறது.

திருக்காளத்தியில் ஆனையும் சிலந்தியும் பூசித்தது என்பர். திருக்கச்சியில் 'கச்சபம்' என்னும் ஆமை பூசித்தது என்பர். இப்படியே பல தலங்களிலும் சொல்லுவர். ஆனால் இன்று அந்நிலைகளைக் காண முடியாது. அங்கெல்லாம் மந்திரம், உணவு, பழக்கம் முதலிய காரணங்கள் சொல்லுவதற்கு வாய்ப்பில்லை. இந்தியாவில் எங்கும் காணமுடியாத ஒன்று இங்கே காணக் கிடைக்கின்றது.

பட்சி தீர்த்தம் :

இத்தலத்தை வடநாட்டார் 'பட்சி தீர்த்தம்' என்றே வழங்குகின்றனர். கங்கையில்

மூழ்கிக் காசியைக் கண்டு வணங்கி இராமேசுவரத்துக் கடலில் மூழ்கவரும் வடநாட்டுப் பத்தர்களுக்குத், தமிழகத்திலுள்ள நூற்றுக்கணக்கான தலங்களில் 'பட்சி தீர்த்தம்' என்னும் நம்திருக்கழுக்குன்றமும், காஞ்சி, கும்பகோணம், மதுரை முதலிய மற்றும் சில தலங்களுமே தெரியும். இடையில் எதை வணங்காமல் விட்டாலும் பட்சி தீர்த்தத்தை மட்டும் விட மாட்டார்கள். காரணம், கழுகுக் காட்சியும், அவைகள் காசிக் கங்கையில் நீராடித் திருக்கழுக்குன்றத்தை வணங்கி உணவுகொண்டு, இராமேசுவரத்தில் இரவு தங்குகின்றன என்னும் வழக்கும், கழுகுகள் தம்மைப்போலவே காசி இராமேசுவரத் திருப்பயணத்தில் திருக்கழுக்குன்றத்தின் தொடர்போடு உள்ளன என்னும் நினைவை, அவர்களுக்கு எழுப்பி விடுகின்றன.

குன்றம் :

இனி, மற்றொரு சிறப்பாகிய 'குன்றம்' என்பதைப் பார்ப்போம். இங்குள்ள சிறிய மலை (குன்று), பண்டைய நாட்களில் இருந்தது போலவே இன்றும் இருக்கிறது என்பதன்று இங்கே சிந்திக்க வேண்டியது. இயல்பாகவே, மலையின் வளமும் மற்றைய சிறப்புக்களும் எங்குமே இன்று குன்றித்தான் காணப்படுகின்றன. ஆண்டவன் இங்கே மலையின்மேல் எழுந்தருளி இருக்கின்றான். அது, அருள்வளமாதலின், அதற்கு மட்டும் எஞ்ஞான்றும் குறைவிருப்பதில்லை. இங்குள்ள மலை, வேதமலை-வேதாசலம்-வேதகிரி-மறைமலை என்றெல்லாம் குறிக்கப்படுகின்றது. வேதத்தின் உச்சியில் (பிழிவில்-அதாவது சிறப்பான பகுதியில்) ஆண்டவன் இருக்கின்றான். அதற்கேற்ப இங்கேயும் ஆண்டவன் மலை உச்சியில் இருக்கின்றான்.

தலை-எண் சாண் உடம்பில் சிறந்த பகுதி. ஐம்பொறிகளும் தலையில் உள்ளன. ஆளுக்கு ஒன்று கொடு என்பதனைத் 'தலா ஒன்று கொடு' (தலை-தலா) என்பர். தலையை வைத்தே ஆள் எண்ணிக்கை எண்ணப்படுகிறது. சிறந்ததைத் தலைமேல் வைத்துக் கொள்ளுகிறோம். தோளிலும் மார்பிலும் கூட வைக்கலாம். தலைமேல் வைப்பது சிறப்பு.

சேரன் செங்குட்டுவன் சிவபிரான் திருக்கோயில் அருளமுதை(பிரசாதத்தை)த்தன் உச்சியில் சூட்டிக்கொண்டதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அவன், திருமால்கோயில் அருளமுதைத் தோளில் வைத்துக்கொள்வானும். நீலகிரிநெளியப்படைஎடுத்து வடநாடு சென்று வென்று, இமயத்திற் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டிக் கற்புக்கரசி கண்ணகிக்குச் சிலை வடித்துக் கோயிலமைத்தவன் செங்குட்டுவன். அவன் சிரமிசைச் சூடுவது சிவபிரான் அருளமுதம்.

சிறந்தது என்றபொருளில்(தலை-தலம்), தலைமை வாய்ந்த இடம் என்ற கருத்தில் 'தலம்' என்னும் வழக்கு வந்துள்ளது. தக்கவர்கள் சிறந்த இடத்தில் இருக்கிறார்கள். கடவுளும் அப்படியே தலங்களில் சிறந்து விளங்குகிறார்.

மலைத்தலம் :

தலங்களில் மலைத்தலங்கள் மிகவும் சிறந்தவை. தக்கவர்களின் நல்லுணர்வு அலைகள் வானொலியின் ஒலியலைகளைப் போல எங்கும் பரவும். அவை நுண்ணியவாதலின், நாம் உலவும் தரைக்கு மேலே உயர்ந்த வெளியிடத்தில் நன்கு பாய்ந்துகொண்டிருக்கும். பொது மக்களின் தடித்த தீய உணர்ச்சிகள், தரையை ஒட்டிய அடிப்பகுதியில் உலவும். ஆதலின், நல்லுணர்வுகளில் திளைக்க விரும்புவோர் தனித்த நிலையில், பரந்த வெளிகளையும் கடற்கரைகளையும் மலையிடங்களையும் நாடிச் சென்று அங்கே தம் சிந்தனையை ஒருமுகப் படுத்தித் தேனித்திருப்பர் (தியானம் செய்வர்). ஆகவே, உயர்ந்த இடமாகிய மலைத்தலங்கள் மிகவும் சிறப்புடையவைகளாய் இருக்கின்றன.

இத்தகைய மலைத் தலங்களிலும் திருக்கழுக்குன்றம் சிறந்ததொன்றாகத் திகழ்கின்றது. காரணம், சிவபிரான் வேதமுடியில் (வேதசிரம்-உபநிடதம்) இருக்கிறார் என்பதைக் காட்டுவதுபோல், இங்கேயுள்ள

வேதமலையின் உச்சியில் அவர் எழுந்தருளி யிருக்கிருர். இமயமுதல் குமரிவரையுள்ள வேறு எந்த மலையிலும், உச்சியில் சிவ பிரான் கோயில் இல்லை. திருச்சிராப்பள்ளி யில் மலைச்சாரலிலும், திருவண்ணுமலையில் தாழ்வரையிலும், திருவாட்போக்கியில் மலை யின் ஒரு பாகத்திலுமே கோயில்கள் உள் ளன. இங்கே உச்சி என்று நன்ருகக் காணத்தக்க இடத்தில் எளிதில் அமைக்க இயலாத கற்பாறை அடுக்கரில் பெரிதும் வியக்கும்படியாகவும், ''கழுக்குன்றதனில் வழுக்காதிருந்தும்'' என்று ஆளுடைய அடி களும் ''கழுக்குன்றத்துச்சியாய்!கடவுளே!'' என்று ஆளுடைய அரசுகளும் போற்றி யுள்ள படியும், திருக்கோயில் அமைந் துள்ளது.

கழுகுகள் வருவதும், குன்றின் அமைப்பும் இன்றும் சிறப்பாக இருத்தலின், இத்தலத் துக்குத் திருக்கழுக்குன்றம் என்னும் பெயர் வழங்கி வருகின்றது. இதனை அனைவரும் தவறின்றி வழங்கும்படி செய்தல் வேண் டும். பாமர மக்கள் பல படியாக இப் பெயரை வழங்குகின்றனர். அவர்களைத் திருத்த வேண்டுவது தெரிந்தவர்கள் கடமை.

இங்குள்ள மலைப்படிகள் உச்சிக்கோயி லைச் சுற்றி வருகிற முறையில் அமைந் துள்ளன. இம்முறை எல்லா மலைத் தலங்களிலும் அமைவதில்லை. மலையின் மேல் மட்டுமன்று, மலையின் கீழும் மலை வலம் வர வாய்ப்புள்ளது. திருச்சிராப் பள்ளியில் மலையை மட்டும் சுற்றமுடியாது. தெருவைச் சுற்ற வேண்டும். திருவண்ணு மலை பழநி முதலிய தலங்களில் அன்ருடம் மலைவலம் வருவது எளிதன்று; இங்குள் ளதுபோல் எளிதாக வலம் வருவதற்குத் திருக்காளத்தி முதலிய மலைகளுக்குச் சாலை வாய்ப்பில்லை. திருத்தணிகையில் மலைவலத் துக்கு வழி அமைக்கப்படுகிறது. மாணிக்க வாசகர் கால முதலாகவும், அதற்குமுன்னி ருந்தும், இங்கு மலை வலம் வரும்வழக்கமும் பாட்டையும் அமைந்திருக்கின்றன. மலை வலமே வழிபாடு என்றும் கொள்ளப்பட்டு, இன்றுவரை வழக்கத்திலும் இருக்கிறது.

வேத மலை :

வேதம் என்பது, பொது மக்களைச் சிறப்பு மக்களாக உயர்த்துவது-மாற்றுவது; (வேதித்தல்-மாற்றுதல்). இது, செம்பு பச் சிலை முதலியவற்றைப் பொன்னுக்குதல் போன்றது. இச்செயலை இரசவேதி என்பர். வேதிப்பது 'வேதம்' என்று வழங்கப்படு கின்றது.

பொது மக்களைச் சிறப்பு மக்களாக உயர்த்தும் நூல் எதுவாயினும் அதை 'வேதம்' என்று கூறலாம். நம்முன்னேர், மக்கள் வாழ்வின் உறுதிப் பொருள்களாகக் கண்ட அறம் பொருள் இன்பம் வீடு என் னும் நான்கு உண்மைகள் பற்றிக்கூறும் நூல்களை வேதம் என்று வழங்கினர். ஆகவே வேதம் என்பது, நான்கு கூருய் வாழ்வின் மறை பொருள் உண்மைகளை விளக்கும் என்று தெளியலாம்.

தொல்காப்பிய உரையில், நச்சினர்க்கினியர், நான்கு கூறுமாய் மறைந்த பொருளுமாய்த் திகழ்வது நான்மறை, என்று விளக்கிக் கூறியிருக்கிருர்.

இந்த மலை, வேதமலை என்று வழங்கப் படுகிறது. தன் பெயருக்கேற்ப நான்கு பிரிவாய், வலம் வரும்போது சில இடங் களில் தெரிந்தும், சில இடங்களில் மறைந் தும் காணப்படும் உச்சிக் கோயிலை உடைய தாய் விளங்குகிறது.

புனிதப் பெருந்தலம் :

இனிப் பெயரில் இல்லாத சில சிறப்புக் களைக் காண்போம். முதன் முதல் பள்ளிக் குச் செல்லும் எழுத்தறியாச் சிறுவன், ஆசிரியர் கரும்பலகையில் முதலில் எழுதும் ஓர் எழுத்தைக் கோடு என்றுதான் சொல் லுவான். சில காலம் சென்ற பின்னரே குறுக்கும் நெடுக்குமாக வளைந்தும் நெளிந் தும் செல்லும் கோடுகளை அ, ஆ, இ, ஈ, க, ங, ச என்றெல்லாம் எழுத்துக்களாகக் காண்பான். 'கோடு' என்று முதலிற் சொன்னதும், 'எழுத்து' என்று பின்னர் அறிந்ததும் பொய்யல்ல; இரண்டும் மெய் யே. ஆனல் வெறும் கோடுகளாகக் காண் கிற நிலையைவிட எழுத்துக்களாகக் காண் கிற நிலை உயர்ந்த நிலை என்றும், அறிந்த நிலையென்றும் கொள்ளுகிருேம்.

குழந்தை தன்னைப் பெற்றவளைத் 'தாய்' 'அம்மா' என்று காணும், அழைக்கும். ஆனல் மற்றவர்கள் பெண்பாலாகக் காண் பர், அழைப்பர். மற்றவர்கள் கண்டு ஒதுங் கும் அளவுக்கு எலும்புந் தோலுமாய்ப் புண்ணும் அழுக்குமாய்த் தாய் கிடந்தா லும், குழந்தை அம்மா என்றே அன்புடன்

அழைத்துக்கொண்டு, தன் தாயிடமே தாவிச்செல்லும். வேருேர் அழகிய பெண் பக்கத்திலிருந்து அழைத்தாலும் போகாது. குழந்தையின் உள்ளமும் கண்ணும் உணர்கிற நிலேயும், காண்கிற நிலேயும் வேறு, மற்றவர்கள் நிலே வேறு.

இவை போலவே திருக்கழுக்குன்றத்தை வெறும் மலே, குளம், தெருவாகக் கண்டு ஓர் ஊர் என்று கொள்வது வேறு; அதனேயே வேதமலே என்றும், கடவுள் இடம் என்றும் உணர்ந்து, ஓர் ஒப்பற்ற புனிதப் பெருந் தலமாகக் கருதி உருகுவது வேறு. முன்னேய நிலேயைவிடப் பின்னேய நிலேயே உயர்ந்தது, அறிவறிந்தது!

ஒரு பொருளின் உயர்வு அதனிடம் மட்டுமே இல்லே. அதைக் காண்பார் நிலே, தேவை முதலியவைகளேயும் பொறுத்தே இருக்கிறது. இப்படி ஓர் ஊரைத் தலமாகக் காணும் பரிபக்குவம்ஒரு பிறப்பிலும் நேரும். அல்லது அதற்குப் பல பிறப்புக்களும் தேவைப்படலாம்.

திருக்கழுக்குன்றம் என்கிற இத்தலத்தின் நினேவு மாணிக்கவாசகர், திருஞான சம்பந்தர் முதலிய பெரியோர்களுக்குப் பாலாய்,கரும்பின்சாருய்,தேனய்த்தெய்வச் சிறப்பில் இனித்தது.

தொண்ட நாட்டில் உள்ள சிவ தலங்களில், பாடல் பெற்றுச்சிறந்தவை வடக்கே திருக்காளத்தி முதல், தெற்கே அரசிலி வரை முப்பத்திரண்டு உள்ளன. ஆனுல் அவற்றுள் சிறந்த மலேக்கோயில், திருக்கழுக்குன்றம் ஒன்றுதான். திருக்காளத்தியில் கோயில் கீழேயே இருக்கிறது. மலேமேல் இவ்வளவு பெரிய கோயில் இல்லே.

தனிச்சிறப்புக்கள் :

திருக்கழுக்குன்றத்தில் உள்ள தாழக் கோயில் எனும் ஊர்க்கோயிலின் நான்கு மதில்களிலும் நான்கு கோபுரங்கள் இருக்கின்றன. தொண்ட நாட்டுத் தலங்களில் இப்படி வேறு எங்கும் இல்லே. மற்ற தலங்களில் இருக்கின்றபடி தனியே ஒரு மதிற் கோபுரமும் உள்ளே இருக்கிறது. மொத்தம் திருவைந்தெழுத்துப் போல (பஞ்சாட்சரம் போல) ஐந்துகோபுரம். திருக்கோயிலுக்குள்ளே பெருவிழாக் கொள்ளும் மாதொருபாகர் என்னும் சோமாஸ்கந்த மூர்த்திக்கு என்று, எடுப்பான தனித்திரு முன்னிலேயும் (சந்நிதானம்), அப்படியே பிள்ளேயாருக்கும், ஆறுமுகப் பெருமானுக்கும், அம்பல வாணருக்கும், மாணிக்க வாசகருக்கும், திருப்பெருந்துறைக்கும், பஞ்ச பூத லிங்கங்களுக்கும் என்று தனித்தனித் திருக்கோயில்களும் உள்ளன. இப்படியெல்லாம் வரலாறு, இயற்கை, கலே, திருவருட்பேறு முதலிய அடிப்படைகளில் பல இடங்களிற் காண முடிவதில்லே.

திருவண்ணுமலேக்கோயில் மிகப்பெரியது ஆயினும், அங்கே அம்பலவாணருக்கு மா மண்டபங்களோடு கூடிய பெரிய சந்நிதி கிடையாது. மதுரைத் திருவாலவாயார் (மீனுகூஷி)கோயில், மிகப்பெரிய கோயில். அங்கே அம்பலவாணர் கால்மாறி ஆடிய வெள்ளியம்பலம் சிறப்புடையது. ஆயினும் அதுவும் பெரியதொரு சந்நிதியாக இல்லே; திருக்கழுக்குன்றத்தின் அம்பலவாணர் திருமுன்னிலே, மூல மண்டபம், கலேயழகு, சிறந்த மாமண்டபம் முதலிய பல அமைப்புகளோடு கூடியது. எல்லாத்திருமுன்னிலேகளும் பரந்த முன்றில்கள் அமைந்தவை! மலேயடிவாரத் திருமுகப்பும் அத்தகையது.

தொண்ட நாட்டில் காஞ்சிபுரம் சமய குரவர் மூவர் பதிகம் பெற்றது; அது, தேவாரத்தலம்; ஆனுல், திருக்கழுக்குன்றம் நால்வர் பதிகமும் பெற்றது; தேவாரத்தோடு தனிப் பதிகங்கொண்ட திருவாசகமும் பெற்ற தலம்! அந்தச் சிறப்பு காஞ்சிக்கு இல்லே. இப்படித் தமிழகம் முழுவதிலும் பல்வேறு தனிச்சிறப்புகள் கொண்டு திகழ்வது திருக்கழுக்குன்றம் என்னும் தலே சிறந்த மலேத்தலம்!

சுந்தரர் :

இனி, பாவங்களில் பெரியது கொலே. 'ஒன்ருக நல்லது கொல்லாமை' என்பார் திருவள்ளுவர். அதுகொண்டு 'ஒன்ருகத் தீயது கொலே' என்பதும் பெறப்படும். கொடுமையில் உச்சமானதாகிய கொலேப் பாவத்தைச் செய்திருந்தாலும், உணர்ந்து வருந்திஞேர்க்கு அதனேப் போக்குவது திருக்கழுக்குன்றத் தலம். இத் தல புராணம், 'சுரகுரு' என்பவனுடைய வரலாற்றின் மூலம் இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றது.

''கொன்று செய்த கொடுமையாற் பல
சொல்லவே,
நின்றபாவ வினேகள் தாம் பல நீங்கவே,
சென்று சென்று தொழுமின், தேவர் பிரானிடம்
கன்றி னேடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே''

என்று போற்றுகின்றார் ஆளுடை நம்பி களாகிய சுந்தரர்.

சம்பந்தர் :

திருஞானசம்பந்தர் தம் பதிகத்தில் இத் திருப்பதியைக் 'காதல் செய் கோயில்' 'காதல் செய் கோயில்' என்றே பாடல் தோறும் குறிப்பிடுகின்றார்.

சிவநெறியாளர், 'கோயில்' என்றால் தில்லைத் திருச்சிற்றம்பலத்தையே எண்ணு வர். இத்தலம் அதனினும் சிறந்தது என்று கருதும்படி ஆளுடைய பிள்ளையாரின் அருள்வாக்கு மிளிர்கின்றது. திருமுறைப் பாடல்கள் வைக்கப்பட்டிருந்த தலம் தில்லைக் கோயில்; திருக்கழுக்குன்றமோ அப்பாடல்களை நாவார ஓதிப் பயன் கொள் ளும் தலமாய் விளங்குகிறது. இதனை இறை வன் காதலிக்கின்றான். அடியார் பலரும் காதலிக்கின்றனர்.

திருஞானசம்பந்தர் தாம் முதன் முதல் அருள் பெற்ற சீர்காழியில் 'தோடுடைய செவியன்' என்று எடுத்துப் பாடியது போலவே, இங்கு வந்தபோதும் 'தோடு டையான்' என்று தொடுத்துப் பாடியுள் ளமை கருதத் தக்கதாகும்.

திருநாவுக்கரசர் :

ஆளுடைய அரசுகளாகிய திருநாவுக் கரசரோ இங்கு வந்து மறைமலை யுறையும் இறையவனைத் தாம் கண்டதுபற்றிக் 'கண் ணாரக் கண்டேன் நானே' என்று பெரு மகிழ்ச்சி தெரிவித்துப் பாடியிருப்பதோடு, தாம் கடைசியாகத் திருப்பூம்புகலூரில்திரு வருளிற் கலக்கின்றபோதும், அங்கிருந்து அந்நிலையிலும் இத்தலத்தை நினைவு கூர்ந்து "கழுக்குன்றத்துச்சியாய்! கடவுளே! நின் பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின் றேன்" என்று விண்ணப்பிக்கின்றார். திருக் கழுக்குன்றத்தை நினைத்தபடியே அப்பர் திருவருளிற் கலந்தது பெரிதும் வியத்தற் குரியது!

மணிவாசகர் :

சைவ சமய குரவர்களாகிய நால்வர் களுள், 'ஞானத்தில் ஞானம்' என்னும் உயர்வற உயர்ந்த பெருநிலை எய்திய ஆளுடைய அடிகளாகிய மாணிக்கவாச கருக்கு, இங்கே மட்டும் சோதி வடிவிற் குரு தரிசனம் கிட்டியது. "கணக்கிலாத் திருக்கோலம் காட்டியதாக" அவரே அதனைக் குறிப்பிடுகிறார். தம் 'வினையொத் தது' என்றும், அதன் பயனாகக் காட்சி கிடைத்தது என்றும் தெரிவிக்கிறார். தாம் திருப் பெருந்துறையில் இறைவனிடம் பெற்ற 'அருளியல்' (பர) 'உலகியல்' (அபர) ஞானங்களாகிய இரு திருவடிகளை யும் வைக்குமிடம் தெரியாது கலங்கிய போது, அவைகளை இங்கே வைத்து விடும் படி குறிப்புக் கிடைத்தாகவும் அறிவிக் கிறார். இங்கே வந்து அருட்காட்சி பெற்ற பின், அடிகளார் வேறு திருவூர்ப்பயணம் (தலயாத்திரை) மேற்கொள்ளவில்லை.

நேரே தில்லைக்குச் சென்று, 'அறிவாற் சிவனே' என்று பின் வந்த சான்றோர்கள் போற்றும் நிலையில், 'சீவன் முத்தர்' என வைகி, ஆண்டவனே தம் திருக்கரத்தால் எழுதத்தாம்பாடியதிருவாசகப்பாடல்களைச் சொல்லி வந்து, 'பாவை பாடிய வாயால் ஒரு கோவையும் பாடுக' என்று இறைவன் கேட்டுக் கொள்ளத் 'திருச்சிற்றம்பலக் கோவையார்' என்னும் திருக்கோவை யாரையும் பாடித், திருச்சிற்றம்பலப் பெரு வெளியிற் கலந்தார்.

இவ் வரலாற்றால், 'திருக்கழுக்குன்றம் வினைக்கு எல்லை, தலங்களுக்கு எல்லை, எல்லா ஞானங்களுக்கும் எல்லை, அல்லது ஞான பீடம்' என்பனவெல்லாம் புலப்படு கின்றன. அதனாலேயே இங்குள்ள மலை கள் வேத வடிவாகப் போற்றப்படுகின்றன போலும்!

அடிகளார் பெருந்துறையிற் பெற்ற திரு வடி ஞானம், அவருடைய திருப்பயணத் திறற் பன்மடங்காக வளர்ந்து, இங்கே வந்த பின் கணக்கிலடங்காத நிலையிற் பெருகி நிறைவடைந்தது. உலத்தார்க்கும் பயன்படும்படி அது திருவருட் குறிப்பினால் இங்கேயே வைக்கப் பெற்றது.

ஞானபீடம் :

உலகியல் அடைவு (அநுபவம்) என்பது, குறைகளாகிய அலைகள் மிக்க கடல் போன் றது! பெருந்துறை என்பது தோணி. திருக் கழுக்குன்றம் அக்கடலின் கரை; அதாவது நிறைவினை அளிக்கும் அமைதியிடம்.

"பூணொ ணாததொர் அன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாணம் எய்தி
நடுக்கடலுள் அழுந்தி நான்,

பேணெ ணுதை பெருந்துறைப் பெருந்
தோணி பற்றி உகைத்தலும்
காணெ ணுத்திருக் கோலம் நீவந்து
காட்டினுய் கழுக் குன்றிலே''

என்ற பாடலில் இக் குறிப்புகள் வருகின்றன. அல்லற்கடலைக் கடந்து அமைதியாகிய கரையை அடையப் 'பெருந்துறை' என்னும் தோணியில் ஏறிப் பூணெணுதோர் அன்பு பூண்டு,பொருந்தி'நாள்தோறும்போற்றுத' லாகிய துடுப்பைக்கொண்டு உகைக்க வேண்டும் என்பது குறிப்பு.

'துறை' என்னும் பெயர் வாய்ந்த திருப்பெருந்துறையே,இப்பாடலில்மணிவாசகப் பெருமானுரால், தோணியாக உருவகப் படுத்தப்பட்டு, அது சென்று சேரும் மா பெருந் துறையாகத் திருக்கழுக்குன்றம் காட்சி தருமாதலால், திருக்கழுக்குன்றத்தின் தல மாட்சியை என்னென்பது! சிறந்த 'சீவன் முத்தித்' தலமாகவன்றோ அது காட்சியளிக்கின்றது. அதுவும், நிறை ஞானப்பெருமானுகிய மாணிக்கவாசகர்க்கே ஞான நிறைவில், சீவன்முத்தித் தலமாகத் திகழ்கின்றதென்றால், உலகத்தார்க்குத் திருக்கழுக்குன்றம் எத்துணைச் சிறந்த 'ஞான பீடம்' என்பதைக் கருதிப்பார்மின்! கயிலைத்தாழ்வரையிற் கல்லால் நீழலில் ஆண்டவன் அன்று நால்வர்க்கு அறம் உரைத்த ஞான பீடம், இன்று நம்மாற் காண்பதற்கு அரிதாயிருக்கிறது! ஆனால், மணிவாசகர்க்கு ஞான நிறைவு நல்கிய திருக்கழுக்குன்றத்தின் ஞானத் திருவடிப் பீடம் நாம் அனைவரும் கண்ணாரக் காணும் பேரருட் காட்சியாய் இன்றும் துலங்குகின்றது! காண்மின்! காண்மின்! 'சேரவாரும் செகத்தீரே' என்று தாயுமானுரும், 'சென்று சென்று தொழுமின்கள்' என்று சுந்தரரும் அருளியபடி, உலக ரனைவரும் இந்த ஞான பீடத்தோடு நாளுந் தொடர்பு கொண்டு நலங்காணல் வேண்டும்.

திருக்கழுக்குன்றப் பதிகம் :

பக்குவமிக்க உயிர்த் தன்மையிலிருந்து பின்னும் உயர்ந்து,கடவுள்(சீவன்முத்தர்) நிலையை எய்தி நிறைவடைந்த மணிவாசகர், திருக்குழுக்குன்றத்தில் அருளியுள்ள பதிகத்தில்7-பாடல்களே கிடைத்துள்ளன. 3 பாடல்கள் கிடைக்கவில்லை. காலத்தின் வாயில் விழுந்து விட்டன. கிடைத்தபாடல்களில் வருகின்ற ஒரு சில கருத்துக்களைக் காண்போம்,

நமக்குத் 'துன்பம்' அறவே நீங்கவேண்டும்; இன்பம் உண்டாக வேண்டும்; அதற்கு நாம் வினைகளே செய்யக்கூடாது. செய்த வினைகளின் விளைவுகளும் நம்மைத் தாக்கக் கூடாது. பெருந்துறைப் பெருமானின் நாமங்களைப் பேசினுல் இந்த நிலைமை உண்டாகும். வினை விளைவு அற்றுப்போகும் நிலையில், இருவினை ஒப்புணர்வு உண்டாகும். உண்டானுல் திருக்கழுக்குன்றப் பெருமானின் திருக்காட்சி கிடைக்கும். அதற்குப் பிறகு கலக்கம் என்பதே இல்லை. என்றும் பெருகும் இன்பமே நிலவும்.

வினை ஒத்தலாவது என்ன? உலகியல் நோக்குப்படி நல்லதோ தீயதோ எது நடப்பினும் கலங்காத, உணர்ச்சி வயப்படாத, சமநிலையில் இருத்தல்.

வடலூர்வள்ளலார், இளமையிற்சென்னையில் இருந்தபோது அடிக்கடி அமைதி நாடித் திருவொற்றியூருக்குச்செல்வாராம். அப்போது ஒருமுறை யாரோ அவர் மீது கல் எறிந்ததை உணர்ந்தார். அடுத்து வேறு ஒருவர் அவருக்கு வாழைப்பழங்கள் கொடுத்தாராம். அது பற்றிக் கேட்டவர்களுக்கு அடிகளார் ''கல்லெறிந்தவரே வாழைப்பழம் தந்தார்; வாழைப்பழம் தந்தவரே கல்லெறிந்தார்'' என்றாராம்.

அதுபோல, எது நடந்தாலும் 'எல்லாம் அவன் செயல்' என அமைதியாக இருந்து வருகிற நிலையே, இருவினை ஒப்பு என்னும் நிலை.

அதுவே 'மலம்' என்னும் பாசங்கள், வாழைப்பழத்தின் தோல் எளிதாக உரித்து விடும்படி இருப்பது போல், இலேசாக ஒட்டிக்கொண்டிருக்கிற 'பரிபாக நிலை'. அப்போது இறைவன் குருவடிவாகக்காட்சி தந்து எளிதில் மலத்தைப் போக்கி ஞான ஒளியாக ஆக்கி ஆட்கொள்ளுவான்.

அத்தகைய உயர்நிலையை உதவும் ஞானத்தலம் இத்திருக்கழுக்குன்றம்! வினை தீர்த்துப் பிறவி நீக்கி, உயிர்கள், தாம் அடையவேண்டிய நிலையை அடையச்செய்யும் ஒப்பற்ற ஞானபீடம்!

திருப் பெருந்துறை, மாணிக்கவாசகருக்கு 'உபதேசம்' கிடைத்த இடம்; திருக்கழுக்குன்றம் உலகுக்கே உண்மை உணர்த்தும் இடம்; அதற்காகவே அவரால் திருவடி வைக்கப்பட்ட மறைத் தலம்!

திரிபுர சுந்தரி :

இனி, இங்குள்ள மலைக் கோயிலில் அம்மை திருமுன் (சந்நிதி) இல்லை; அம்மையும் நந்தியும்கூடக் கீழேயே இருக்கின்றனர்.

மணிவாசகர், 'திருப்பெருந்துறை' 'மதுரை' 'தில்லை' 'உத்தரகோசமங்கை' 'திருவண்ணாமலை' 'திருக்கழுக்குன்றம்'முதலிய சில தலங்களையே பாடியுள்ளார். அவை அனைத்தும் 'சக்தி'த்தலங்கள். அதாவது, அங்குள்ள அம்மையின் திருமுன்னிலைகள் புகழும் ஆற்றலும் மிக்கவைகள். திருக்கழுக்குன்றம் அவ் வகையில் 'பெண்ணினல்லாள்' என்னும் திரிபுரசுந்தரியம்மையின் திருமுன்னிலையுடன் திகழ்வதைக் காண்கின்றோம்.

தாய் எப்போதும் குழந்தைகளிடம் இருப்பாள். குழந்தைகள் இருக்கும் இடத்துக்குச் சென்று உதவுவாள். தந்தையிடம் குழந்தைகள் போகவேண்டும். உலகியலில் நாம் இந்நிலையைக் காண்கிறோம். அது போலவேஇங்கு அம்பிகை ஊர்க்கோயிலில் வீறுடன் நின்று குழந்தைகளாகிய நம்முடைய மலங்களைக் கழுவித் தூய்மைப்படுத்தி மேலேயுள்ள அப்பனிடம் சேர்ப்பிக்கின்றாள். அம்மையின் இவ்வருட்செயலுக்கு உதவியாக, நந்தியும் (குரு) கீழேயே இருக்கிறார்.

மலைவலம் :

அதனால் நாம் சங்கு குளத்தில் மூழ்கிச் சமய குரவர்களை (மூவர்பேட்டை நால்வர் கோயிலில்) வழிபட்டு, பின் ஊர்க்கோயிலில் உள்ள அம்மையையும்,மலையை நோக்கியுள்ள நந்தியையும் வணங்கி, அங்கிருந்தே மலைக் கொழுந்தையும் போற்றிக்கொண்டு மலைவலம் வருதல் வேண்டும். அதுவே முறை.

மலை வலத்தை முடிக்கும்போது நால்வர் கோயிலுக்கும் மலைக்கோயிலுக்கும்குறுக்கே போகாமல், நால்வர் கோயிலைச் சுற்றினாற் போல் வந்து,அக்கோயில் எதிரில் மலையை நோக்கியுள்ள சிறிய நந்தியின் அருகில், கீழே எட்டுறுப்பும் படிய விழுந்து வணங்கி முடிக்க வேண்டும்.

மலைமேல் ஏறும் முன்பும், ஏறிய பிறகும் மலையை வலம் வருதல் வேண்டும். மலை ஏறுவதை விட அதனை வலம் வருதலே சிறந்தது. வேதங்களை ஆராய்ந்துகொண்டு காலங் கழிப்பதைவிட அதன் நெறியில் ஒழுக முற்படுவதே மிக்க பயன் விளைக்கும். ஏதோ ஓரளவு ஆராயலாம். 'மிக்குச் சோதிக்க வேண்டா' என்றார், ஆளுடைய பிள்ளையார்.

இனி, தலத்துக்கு மட்டும் என்ன அவ்வளவு மதிப்பு என்று கருதி விடக் கூடாது. வீட்டிலேயே கூட வசதியுடையவர்கள் வரவேற்பறை படிப்பறை, படுக்கையறை, பூசையறை, சமயலறை, குளியலறை என்று தனித்தனி அமைத்துக் கொள்கின்றனர். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகை மதிப்பு. இப்படித் தனித் தனியே இருப்பதால் அந்தந்த இடத்தில் நடைபெறும் வேலைகள் நன்றாகவும் ஒழுங்காகவும் நிறைவாகவும் பயன்மிகும்படியும் நடக்க வாய்ப்பிருக்கிறது. அதனால் அங்கங்கே நடக்கும் வேலைகளில் ஒருமையுடன் ஈடுபடவும், ஆற்றலாகச் செய்யவும் முடியும். அதுபோலவே மற்ற இடங்களை விட, அருளாளர்கள் வந்து சென்ற, அவர்கள் பாடல் பெற்று அருட்பதிவுடன் விளங்குகின்ற, இடங்களுக்கு அந்த உணர்வுடன் செல்லுகின்ற போது நமக்கு மிக்க ஈடுபாடும் அருளுணர்வும் பெருகிவர வாய்ப்பிருக்கிறது. ஆகவே தலங்களை உரிய முறையில் அவற்றின் வரலாறு இயற்கைச் சூழல்களுக்கு ஏற்ப, நாம் ஓம்பிக்கொள்ள வேண்டும்.

நிற்க, நம் சமயாசிரியர்களுக் கென்று தனிக்கோயில் வேறெங்கும் இல்லை. திருக்கழுக்குன்றத்தில் மூவர் பேட்டையில் மட்டுமே இக்கோயில் இருக்கிறது. அது தகுதி மிக்க ஒரு திரு முன்னிலை. அந்த இடத்தைப் பெருங் கூட்டங்களும் இசைநிகழ்ச்சிகளும் நடத்தக் கூடிய நல்ல பூங்காவாகத் திகழச் செய்ய வேண்டும்.

மலை மருந்து :

இங்கே மருந்து மலைச் (சஞ்சீவி)சாரலில் உள்ள மண்ணும், மருந்தாகப் பயன்படுகின்றது. 'மலை மருந்து' எனப்படும் அதனை,

> ''செய்ய கமலத் திருவாழ்வு அளிக்கும்;
> தியங்கும் மனத்து
> ஐயம் அகற்றும்; அறிவே கொடுக்கும்;
> அகந்தை பிணி
> நைய அறுக்கும்; நமனை உதைக்கும்;
> நளிர்கடல் சூழ்
> வையம் துதிக்கும் வேத கிரீசர்
> மலைமருந்தே''

என்று பெரியோர் போற்றியுள்ளனர். ஆகவே உரிய முறையில் அதனைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

குககோட்டம் :

இனி, இத் தலத்தை அருணகிரிநாதரும் திருப்புகழ் பாடிப் போற்றியிருக்கின்றார். தொண்ட நாட்டு முருகன் தலங்களில் முருக கோட்டம் என்பது மதுராந்தகத்தை யடுத்த வட திருச்சிற்றம்பலம் என்பதும், குமரகோட்டம் காஞ்சிபுரம் என்பதும், திருக்கழுக்குன்றம் குககோட்டம் என்பதும் அவர் வாக்கால் தெரிகின்றது.

''முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல் தந்து உணர்வென்று
அருள்வாய்''

என்பது, அவர்தம் கந்தரநுபூதிப் பாடல். முருகன் என்னும் பெயர் இயற்கை அழகு களில் (உயிர்களின் குழந்தை நிலையில்) திகழ்பவன் என்பதையும்; குமரன் என்னும் பெயர் உயிர்களின் பருவகால அழகுகளில் மிளிர்பவன் என்பதையும், குகன் என்னும் பெயர் உயிர்களின் பழுத்த பக்குவ நிலை யில் உள்ளத்தே விளங்குபவன் என்பதை யும் உணர்த்தும் தெய்வப்பெயர்கள். திருக் கழுக்குன்றம் அத்தகைய நுகர்வு முதிர்ச் சித் தலமாக இருத்தலின் 'குககோட்டம்' ஆயிற்று; அருணகிரியார் இத்தலத்துத் திருப்புகழில், 'குகா' 'குகா' என வகை வராதோ என்று அருள்வர்!

கதலிவனம் :

மேற் கூறிய மூன்று கோட்டத் தலங் களும் முறையே பலா, மா, வாழை என் னும் முக்கனித் தருக்கள் (தலவிருக்ஷங்கள்) உடையன.

''கடல்ஒலிய தான தமிழ்மறைகள் ஓதும்
கதலிவனம் மேவு பெருமாளே''

என்று அருணகிரியாரும் குறித்துள்ளார். திருக்கழுக்குன்றத்தை அதனால் கதலி (வாழை) வனம் என்று தலபுராணங்கூறும். பழ வகைகளில் முக்கனிகளுள் வாழையே சிறந்தது. கனிந்த நிலையில் மிக எளிதாகக் கொட்டையோ கோதோ எதுவுமின்றி நுக ரக் கூடியதும், மலிவு விலையில் கிட்டுவதும் எப்போதும் கிடைக்கக் கூடியதும் உடல் நலத்துக்கு ஊறு செய்யாது நலம் விளைப் பதும் வாழை ஒன்றே. அதன் நலங்களை விரிக்கில், அளவு படாமல் விரியும்.

திருக்கூட்ட மரபுக்கு வள்ளலார் 'வாழை யடி வாழை' என அதனையே எடுத்துக் காட்டுகிறார். அத்தகைய வாழைக்குரிய தலமாகத் திருக்கழுக்குன்றம் திகழ்வதும் பெரிது மகிழத் தக்கதாகும்.

தலச்சிறப்பு :

பட்டினத்தார் போன்ற பெரியோர்களும் பின் வந்த அடியார் பலரும் இத்தலத் தைப் போற்றிப் பல நூல்களும் பாடல் களும் இயற்றியுள்ளனர். அந்தகக் கவி வீரராகவ முதலியார் என்னும் அருட்புலவர் இயற்றிய புராணமும் இத் தலத்துக்கு இருக்கிறது!

நினைக்க முத்தி (திருவண்ணாமலை), தரி சிக்க முத்தி (தில்லை), பிறக்க முத்தி (திரு வாரூர்), இருக்க முத்தி (காஞ்சி), இறக்க முத்தி (காசி) என்பன போல உள்ள தலங் களின் வரிசையில், ''எத்துணைத் தூரத்துக் கழுக்குன்றச் சிகரம் இனிது உறக்கையால் தொழ''; முத்திதரும் தலம் இது என்றும் குறிப்புள்ளது.

இத்தலத்தின் மாட்சிகள் விரிப்பிற் பெரு கித் தொகுப்பின் எஞ்சி, எண்ண எண்ண எண்ணுவார்க்குத் தலப்பெருமைகள் மேன் மேலும் சுரந்துகொண்டு வளருவனவாக உள்ளன.

முடிவுரை :

எனவே இத் தலத்தைப் பொதுவாக எல்லோரும், குறிப்பாகத்தொண்ட நாட்டி லுள்ள அன்பர்களும், தக்க முறையில் போற்றிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டு வது கடமையாக இருக்கின்றது. அதனு லேயே சென்னைச் சிவனடியார் திருக் கூட் டத்தினர் இத்தலத்தைத் தேர்ந்தெடுத்து இங்கே வந்து ஆண்டுதோறும் மணிவாச கர் நாளாகிய ஆனிமகத் திருநாளில் திரு முறை விழாச் செய்து வருகின்றனர். அவ் விழாவைப் பெரிய அளவில் தமிழகம் முழு வதும் உள்ள, ஏன்? இந்திய உலகப் பேரறிஞர்களும் கலந்து கொள்ளுகிற முறையில் செய்ய உதவ வேண்டுவது, இத் தலத்திலுள்ள பெருமக்களுக்கும், செந் தமிழ்ச் சிவநெறியன்பர்களுக்கும் சிறந்த கடமையாகும்.

''சென்று சென்று தொழுமின் தேவர்பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே''

—சுந்தரர்.

# கோயில்கள்

(திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, B.A., B.L., அண்ணாமலை நகர்)

உலகிற்கு ஞான ஒளி பரப்பிய முதுபெரும் நாடு நம் புண்ணிய நாடே. அறிவியல் வளர்ச்சியைவிட ஆன்மீக வளர்ச்சியையே போற்றிய புனிதநாடு. சமயமும் சமுதாயமும் பின்னிப் பிணைந்த இந்த தார்மீக வாழ்விற்குக் கட்டியம் கூறுவன நம் கோயில்கள்.

இந்து சமயத்தைப் போலவே இந்தியக் கோயில்களின் வரலாறும் தொன்மையானது. அவற்றின் தோற்றத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உண்டு. இறந்தவர்களின் நினைவாக அவர்களை வழிபடுவதும், வீரக்கல், மகா ஸதிக்கல் போன்றவற்றை வழிபடுவதும் உண்டு. இவையே கோயில் வழிபாடாயிற்று என்பாரும் உளர். ஆனால், மிகப் பழங்காலத்தில், திறந்த வெளியில், மரத்தில் நடப்பட்ட உருவங்களை வழிபட்டதே பிற்காலக் கோயில்களுக்கு முன்னோடி என்பதில் ஐயமில்லை. சிந்துநதி தீரத்து மக்களிடம் உருவ வழிபாடு பரவலாக இருந்தது. கட்டிடக் கலையிலும் அவர்கள்குறிப்பிடத்தக்கமுன்னேற்றம்உடையவர்களாகவே இருந்தனர். ஆயினும் அவர்கள் கோயில்கள் அமைத்து வழிபட்டார்கள் என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை. சக்தி வணக்கமும், யோகநிலையில் அமர்ந்துள்ள ஒரு கடவுளின் வடிவமும் பெருவழக்கமாக இருந்திருக்கிறது. ஆனால் அவை அகழ்ந்தெடுக்கப் பட்ட இட அமைப்பு, அவை கோயிலுக்குள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன என்று சொல்லக் கூடியதாக இல்லை.

வேத காலத்திலும் கோயில்கள் இருந்ததாகத் தெரியவில்லை. கோயில்களில் வழிபட்டதாக வேதங்களில் அகச்சான்று இல்லை. இயற்கை வழிபாடும், இயற்கையின் வடிவமாகக் கருதப்படும் சில மூலப் பொருட்களின் வழிபாடுமே வேதத்தில் குறிக்கப்படுகிறது. இந்த முறையிலேயே இவற்றிற்குப் பலியிட்டோ இடாமலோ திறந்த வெளியில் வழிபடுதலே நெடுநாட்கள்வரை பழக்கத்தில் இருந்திருக்கிறது. இன்றும் கூட மரத்தடியில் கல்லை நட்டு வழிபடுதலைக் கிராமங்களில் காண்கிறோம். மந்திரங்களும், புராணங்களும் தோன்றி, மக்களும் ஓரளவு நிலையாக வாழத் தலைப்பட்டு, கலை கைத்தொழில் ஆகியவற்றிலும் ஈடுபட்டு வளர்ச்சியுற்ற பிறகே கோயில்கள் தோன்றியிருத்தல் வேண்டும்.

ஆனாலும் லிங்க வழிபாடு வேதகாலத்திற்கு முற்பட்ட சிந்துவெளி மக்களிடம் இருந்தது. வேத காலத்தில் பழங்குடிகளிடம் இருந்தது. இதிகாச காலத்தில் எல்லோரிடமும் பரவியது. தென் இந்தியாவில் வேத காலத்திற்கு முற்பட்ட கற்காலத்திலேயே லிங்கங்கள் இருந்தன. இதிகாச காலத்தில் இராமனால் இராமேசுவரத்தில் லிங்கம் வழிபடப்பட்டது என்று இராமாயணம் கூறுகிறது. இராமன் கோயில் அமைக்கவில்லை. கடற்கரையில் லிங்கத்தை மட்டுமே அமைத்து வழிபட்டான் என்பது நினைக்கத்தக்கது. இதுபோலவே காஞ்சியில் நதிக்கரையில் லிங்கம் அமைத்து அம்பிகை வழிபட்டதும், கோகர்ணத்தில் கடற்கரையில் திறந்த வெளியில் லிங்கம் அமைத்து இராவணன் வழிபட்டதும், காளத்தி மலைமீது இறைவன் தனியாக இருந்ததாகக் கண்ணப்பர் வருந்திய செய்தியும் ஆகியவை, கோயில் இல்லா வழிபாட்டின் தொன்மைக்குச் சான்றுகள். பிற்காலத்தில் இவற்றைச் சுற்றிக் கோயில்கள் எழுப்பப்பட்டிருத்தல் வேண்டும். குடிமல்லம், களத்தூர், குடுமியான்மலை எனும் இடங்களில் உள்ள பழைய கோவில்களில் உள்ள லிங்கங்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின என்பர்.

கி.மு. நான்காம் நூற்றாண்டு வாக்கில் சிவ விஷ்ணு வழிபாடு குறிப்பாக, கண்ணன் வடிவம் நிலையான வழக்குப் பெற்றது. மதுரா நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அனேக கோயில்கள் இருந்ததாகத் தெரிகிறது. உதயபூருக்கு அருகே கிடைத்த கி.மு. 150ஐச் சேர்ந்த ஒரு கல்வெட்டு வாசுதேவன் கோயிலைப் பற்றிக் கூறுகிறது, கிறித்துவ ஆண்

டின் தொடக்கத்தில் மகாயான பௌத்தர்களின் செல்வாக்கால் கோயில் அமைப்பு மேலும் உறுதி பெற்றது. கி.மு. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளில் எழுந்த குடைவரைச் சைத்தியங்கள் இந்தியக் கோயில்களுக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்தன. கி.பி. முதல் நூற்றாண்டிலேயே கோயில்கள் நிலையான வடிவம் பெற்றுவிட்டன என்பதற்கான குறிப்புகள் தெளிவாக உள்ளன. கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்ட ஹாலன் என்னும் சாதவாகன மன்னன் தொகுப்பித்த சப்த சதியிலேயே கௌரி கோயில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிறிஸ்த்துவ ஊழியின் தொடக்கத்தை ஒட்டியதான சங்ககாலத்திலேயே தென்னிந்தியாவில் கோவில்கள் இருந்தன. தொல்காப்பியம் நானிலங்கட்கு உரிய தெய்வங்களைக் குறிப்பிடுகிறது. தெய்வங்கட்குரிய பழமைகளைக் காக்கப் பிரிவு கூறப்பட்டுள்ளது. தெய்வங்கட்குப்பூசையும் விழாக்களும்நடைபெற்றன என்று தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் கூறுவதால் தொல்காப்பியர் காலத்தில் கோயில்கள், விக்கிரகங்கள், அவற்றிற்குப்பூசை விழாக்கள் என்பன இருந்தன எனலாம். கடைச் சங்க நூல்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவும் பல்வேறு கோயில்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகின்றன.

'பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்

—சில. காதை. 5. வரி. 109-172

எனும் சிலப்பதிகார அடிகள், பல்வேறு கோயில்களையும் குறிப்பிடுகிறது. கோயில்களில் அமைக்கப்பட்டிருந்த சிற்பங்கள் பற்றியும், கோயிலின் உட்புறத்தில் தீட்டப்பெற்றிருந்த ஓவியங்கள் பற்றியும் மணிமேகலையும் பரிபாடலும் குறிப்பிடுவதிலிருந்து அக்கோயில்கள் எத்தகை வளர்ச்சியுற்ற நாகரிக நிலையில் இருந்தன என்பது புலனாகும். கோயில்கள் சுற்று மதில்களையும் உயர்ந்த வாயில்களையும் உடையவை. வாயில்களின்மீது உயர்ந்த கோபுரங்கள் இருந்தன. வாயில்கட்குத் துருப்பிடியாத படி செந்நிறம் பூசப்பட்ட இரும்புக் கதவுகள் பொருத்தப் பட்டிருந்தன. கோயில்களின் மேற்கூரை சாந்து வேயப் பட்டிருந்தது. சில கோயில்கள் தாமிரம், வெள்ளி முதலிய உலோகங்களாலான கூரைகளைப் பெற்றிருந்தன.

மதுரையில் இருந்த சிவன் கோயிலில் வெள்ளியம்பலம் இருந்தது என்றெல்லாம் சங்க நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

'நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்:

—சில : காதை 14, வரி. 7-10.

என்பதில் கோயிலைக் குறிக்கப் பல சொற்கள் ஆளப்பட்டுள்ளன. தமிழ் மொழியில் கோயில்; நியமம், கோட்டம், நகரம், பள்ளி, ஆலயம், எனப் பல சொற்கள் ஒரு பொருள் குறித்து வழங்குவதிலிருந்தே கோயிலின் செல்வாக்கும் மேம்பாடும் புலனாகின்றன. அந்த மிகப் பழங்காலத்திலேயேநானிலங்களிலும் கோயில்கள் இருந்திருக்கின்றன. நால்வகைத் தெய்வங்கட்கும் கோயில்கள் இருந்திருக்கின்றன. நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாகப் பதிவாழ் சதுக்கத்துப் பூதம் ஈறாக எத்தனை கோயில்கள்! சிற்றூர்களிலும் பேரூர்களிலுமாகத் தென்னாடு முழுதும் கோயில்கள் இருந்திருக்கின்றன. சோழன் செங்கணான் எழுபது கோயில்கள் எடுத்த பெருமைக்கு உரியன். 'எண்டோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்து உலகாண்டவன்' என்று திருமங்கை ஆழ்வாராலும்பாராட்டப் பெற்ற திருப்பணிச் செல்வன். கி.பி. 300க்கு முன் தமிழகத்தில் நிலவிய கோயில்களைப் பற்றி வடமொழி இராமாயண மகாபாரதமும் விண்டர்நிட்ஸ், மாக்ஸ் முல்லர், மாக்டொனல் ஆகியோரது வடமொழி ஆராய்ச்சிக் குறிப்புக்களும் கூறுகின்றன.

வட இந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் ஆரம்ப காலக் கோயில்கள் குடைவரைக் கோயில்களாகவோ அல்லது மரத்தினால் கட்டப்பட்டவைகளாகவோ இருந்தன. தென்னிந்தியாவிலும் நெடுங்காலம் வரை மரத்தினாலும், செங்கல் சுண்ணாம்பு ஆகியவற்றாலுமே கோயில்கள் கட்டப்பட்டு வந்தன. 'சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம், சுதைவெண் மாடம், சுதை நெடுமாடம்' என்பன போன்ற தொடர்கள் இக்கருத்திற்குத் துணையாவன. சிதம்பரம் போன்ற சில கோயில்களின் விமானம் மரத்தால் ஆயதுதான். சேர நாட்டில்இன்னும்கூடக்கோயில்கள்மரம், செங்கல் ஓடு ஆகியவைகளைக் கொண்டே கட்டப்பட்டுள்ளன. தென்னிந்தியக் கோயில்களின் தேர் பழைய மரக் கோயிலின் வடிவமே யாகும்.

அழியக்கூடிய இத்தகைய பொருட்களால் அமைத்ததாலேயே இலக்கியம் போற்றும் அப் பெருங்கோயில்கள் அனைத்தும் கால வெள்ளத்தில் மறைந்து போயின. கருங்கல்லைக் கொண்டு கோயில் அமைக்கும் முறையை முதன்முதலாகக் கண்டவர் மேலைச் சளுக்கியரே. ஆனாலும், தென்னாட்டில் முறையான கற்றளி அமைப்பு விசித்திர சித்தனாகிய முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில்தான் தோன்றியது. செங்கல், சுண்ணாம்பு மரம், உலோகம் எதுவுமில்லாமல் கோயில் கட்டியதாக அவனே கூறுகிறான். அழியாத பரம் பொருளுக்கு, அழியாத நிலையம் அமைத்துவிட்டதில் அவனுக்கு அளவற்ற பெருமை.

ஆனால் முழுப் பெருமையும்கூட அவனுக்கே உரியது அல்ல. மகேந்திரவர்மன் மலைகளைக் குடைந்து கோயில் அமைத்தான். வல்லம், தளவானூர், சீயமங்கலம், பல்லவபுரம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள குடைவரைக் கோயில்கள் இவன் உருவாக்கியவை. மண்டகப்பட்டில் திரிமூர்த்தி கோயிலும் எடுத்தான். இவை ஏறத்தாழ சமண பௌத்த குகைக்கோயில்களைப் போன்றவை. சித்தன்னவாசல், அஜந்தா, எல்லோரா, எலிபெண்டா ஆகியவை இவற்றோடு ஒத்தவைதான்

மகேந்திரனின் மகனான முதலாம் நரசிம்மவர்மன் இன்னும் ஒருபடி மேலே சென்றான். பாறைகளைச் செதுக்கிக் கோயில் வடிவாக அமைத்தான். மாமல்லபுரத்துக் கோயில்கள் இத்தகையன.

அவனுக்குப் பின் வந்த இராஜசிம்மன்தான் உண்மையிலேயே இன்றைய கற்றளிகட்கு அடிக்கல் நாட்டியவன் எனலாம். மலையை இருந்த இடத்திலேயே செதுக்காமல், பாறைகளைப் பெயர்த்து எடுத்துவந்து, கற்களை அடுக்கிக் கட்டும் முறையைப் புகுத்திய பெருமை இவனையே சாரும். இவன் கட்டிய காஞ்சி கைலாசநாதர் கோயிலே தமிழ் நாட்டில் எழுந்த முதற் கற்றளி எனலாம். ஆனால் இவனுக்கு இந்த எண்ணத்தை உண்டாக்கியது இவன் தந்தையோ என்றுகூடத் தோன்றுகிறது. இராஜசிம்மனின் தந்தையான பரமேச்சுரவர்மன் கட்டிய கூரம் கோயிலில் கருங்கல்கள் அடித்தளமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவன் காலத்தில் கற்கள் பெரிய கற்பலகைகள் போலச் செய்யப்பட்டுக் கோயிலின் அடிப்பகுதிக்கு மட்டும் பயன்படுத்தப் பட்டன. இராஜசிம்மன் அந்த அளவோடு அமையாமல் கல் துண்டங்களையே முழுதும் அடுக்கிக் கோவில் கட்ட முற்பட்டு வெற்றியும் கண்டான்!

கோயில் மலிந்த சங்க காலத்திற்குப் பிறகு, களப்பிரர், சமண பௌத்தர் ஆதிக்கத்தில் பழந்தமிழ்ச் சமயமும் பண்டைக் கோயில்களும் நலிவுற்றன. கி.பி. ஏழு எட்டாம் நூற்றாண்டுகட்குப் பிறகுதான்-பக்தி இயக்கத்தின் மறுமலர்ச்சியை ஒட்டியே கோயில்களும் புதுவாழ்வு பெற்றன. மன்னர்களும் செல்வர்களும் கோயில்கள் கட்டுவதிலும் அவற்றிற்கு மானியங்கள் அளிப்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டனர். இராஜசிம்மனும் பூசலாரும் ஒருங்கே போட்டி போட்டுக் கொண்டு அல்லவா கோயில் கட்டினார்கள்! ஏழாம் நூற்றாண்டினரான அப்பர், சம்பந்தர் காலத்திற்கு முன்பே தமிழ் நாட்டில் வானளாவிய மதில்களும் இதனுள் அமைந்த திருச்சுற்றாலைகளும் மண்டபங்களும் அமைந்த கோயில்கள் பல இருந்தன என்பதைப் பல தேவாரப் பதிகங்களால் அறிகிறோம். ஐயடிகள் காடவர்கோன், அப்பர், சம்பந்தர், க்ஷேத்திரக் கோவைப் பாடல்களால், நாடெங்கிலும் கோயில்கள் பரவி இருந்ததை அறியலாம். கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில் தமிழ் நாட்டில் 325 கோயில்கள் இருந்ததைத் தேவாரப் பதிகங்கள் காட்டுகின்றன.

(தொடரும்)

# நன்றி மறவேல்

அருண்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

பீஷ்மர் சரதல்பத்தில் படுத்திருந்த போது, யுதிஷ்டிரர் முதலியவர்கள் கண்ண பிரானுடன் இருந்து, அவரிடம் அநேக தர்மங்களைக் கேட்டார்கள். அப்பகுதி மகா பாரதத்தில் சாந்திபர்வம் எனப்படும். அது மனதுக்குச் சாந்தியைத் தருவது.

பீஷ்மர் ராஜதர்மம், ஆபத் தர்மம், மோக்ஷ தர்மம் முதலிய அறம் பல இனிமை யாக இயம்பினர். அவற்றுள் ஒன்று இது!

நன்றி மறந்தவன் அடையுங் கதியை இது நவில்கின்றது.

"பிதாமகரே! பெருந்தகவினரே! நன்றி மறந்தவன், நண்பரை வஞ்சிப்பவன் என்ன கதியடைவான்? அதனை எனக்குக் கூறவேண்டும்" என்று யுதிஷ்டிரர் வினவினர். பீஷ்மர் கூறுகின்றார்.

வடக்குத் திக்கில் மத்திய தேசத்தில் கௌமதன் என்ற பிராம்மணன் இருந்தான். அவன் கரிய உடம்பையுடையவன். வேதம் ஓதாதவன். பேராசையுடையவன். நல்லொழுக்கமில்லாதவன். திருடர்களின் கூட்டம் நிரம்பிய ஒரு கிராமத்திற்குச்சென்றான். அங்கு ஒரு திருடன் தன்னிடம் உள்ள பொருளைப் பலருக்குந் தானஞ்செய்தான். கௌதமன் என்ற அந்தப் பிராமணன், அவன் வீட்டிற்குச் சென்று யாசித்தான். அத்திருடன் அவனுக்கு ஓராண்டுக்கு வேண்டிய பொன்னும், ஒரு வீடும், இளம் பெண் ஒருத்தியையுந் தந்தான்.

பிராம்மணன் அவளுடன் கூடி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான். வேடர்களுக்கு இருப்பிடமான அவ்வூரில் வசிக்கும்பொழுது அடிக்கடி அருகில் உள்ள காட்டிற்குச் சென்று, கொக்கு, அன்னம், குருவி முதலிய பட்சிகளைக் கொன்று அவைகளைத் தின்று மகிழ்ந்தான். பாவம் என்றால் அவனுக்குப் பாயசமாக இருந்தது. கொலை புலை நிரம்பிய அவன் மனம் இரும்பாக—கல்லாக—கெட்டியாக இருந்தது.

ஒரு நாள் அந்தவூருக்கு ஒரு தூய வேதியர் வந்தார். அவர் மரவுரி உடுத்தவர். கருணை நிரம்பியவர். வேதாத்யயனஞ் செய்தவர். அவர் அந்த வேடச் சேரியில் உணவு கிடைக்காதவராகிக் கௌதமன் வீட்டிற்குச் சென்றார். கௌதமன் தோளில் இறந்த அன்னப் பட்சிகளை வைத்துக் கொண்டு நின்றான். அவன் உடம்பு உதிரத்தால் நனைந்திருந்தது. குரூரமான பார்வையும், கொடிய செயலும், கடிய மனமும் படைத்த அவனைக் கண்டு, வந்த அந்தணர் நாணமுற்றார்.

"கௌதமா! நீ என்ன மூடனாக இருக்கின்றனையே? அந்தணர் குலத்தில் பிறந்த நீ, இப்படி சீர்குலைந்து நிற்கின்றனையே! உன் முன்னோர்கள் எல்லாம் சிறந்த வேத விற்பன்னர்கள் ஆயிற்றே. நல்ல குலத்தில் பிறந்த நீ குலத்தைக் கெடுத்தனையே! நலத்தை விடுத்தனையே. பாவத்தை அடுத்தனையே. நீ நரகத்துக்குப் போக முயல்கின்றாய். ஆ! ஆ! உன்னைப் பார்ப்பதும் பாவம்" என்று கூறி விட்டுச் சென்றார்.

கௌதமன் நாணமுற்றான். பின்னரும் அவன் மனம் பாவத்திலேயே சஞ்சரித்தது. பொருளில் விருப்பமுள்ளவனாகிப் புறப்பட்டான். பலப்பல இடங்களுக்குப் போனான். கடல்யாத்திரை செய்யும் வியாபாரிகளைக் கண்டான். அவர்களுடன் கூடிச் சென்றான். ஒருநாள் வழியில் மதம் பிடித்த யானை வந்து, அவ் வியாபாரிகளில் பலரைக் கொன்றுவிட்டது. பிராம்மணன்

எப்படியோ தப்பித்துக் கொண்டான். வட திசையை நோக்கி ஓடினுன். ஒருவித உதவியுமின்றி பசிதாகத்தால் களைப்புற்று வாடினுன்.

சிறந்த வனத்தை யடைந்தான். அவ் வனததில் எல்லா மரங்களும் எல்லாக் காலங்களிலும் பூத்திருந்தன. இந்திர னுடைய நந்தவனம் போல் அது காட்சி யளித்தது. அரசு, ஆச்சா, அகில், மா, பனே, பலா, ஆல் முதலிய மரங்களும், சந்தன மரங்களும் நெருங்கி யிருந்தன. அழகான அந்த வனத்தில் யட்சர்களும் கின்னரர்களும், இனிய கானம் புரிந்தார் கள். அங்கு நறுமணம் வீசிக் கொண்டி ருந்தது. அழகிய பறவைகள் ஒலித்துக் கொண்டிருந்தன. மனிதனுடைய முகம் போன்ற முகத்தையுடைய பாருண்டம் என்ற புகழ் பெற்ற பறவைகள் மேலே பறந்து கொண்டிருந்தன. பொன்னிற மான மணல்கள் நிரம்பியுள்ளதும் அதிசய மானதுமான அவ்வனத்தைக் கண்டுசுவர்க் கத்தை யடைந்தவனேப் போல் அவன் மகிழ்ச்சியடைந்தான். மேடு பள்ளமில்லாத ஒரு பகுதியில் லட்சுமி தேவி வாசம் பண் ணுவதும், வானளாவி நிற்பதும், அமுதம் போன்ற நிழல் தருவதுமான், ஒரு ஆல மரத்தைக் கண்டான். அம்மரம குடை போல் கவிழ்ந்திருந்தது. சந்தனத்தால் நனேந்தது போனற குளிர்ந்த இலைகளும், கண்ணேக கவரக்கூடிய அழகிய மலர்களும், தேவர்களுடைய வீடுகள் போன்றதுமான பல மரங்கள் அதைச் சூழ்ந்திருநதன. உத்தமமான அம்மரத்தினடியில் கௌத மன் அமர்ந்தான். இனிய மணமுள்ள காற்று வீசியதனுல், அவனுடைய களைப்பு நீங்கியது. அவன் அப்படியே படுத்து உறங்கிவிட்டான்.

கதிரவன் மேற்கடலில் முழுகினுன். காசி பருடைய பிள்ளையும், அறிவுள்ளதும், பிரம்மதேவரிடம் தோழமை பூண்டதும், கொக்குகளுக்கு அரசும் ஆகிய ராஜதர்மன் என்ற உததமமான பறவை பிரமலோகஞ் சென்று, பிரம்மதேவரிடம் அளவளாவிப் பேசிவிட்டுத் தன் இருப்பிடமாகிய அந்த ஆலமரத்திற்கு வந்தது. தேவகன்னிகை யிடம் பிறநததும், நல்ல காந்தியுள்ளதும், அறிவு நிறைந்ததும், புகழ்படைத்ததும் ஆகிய அப்பறவை, சூரியனுடைய ஒலி போன்ற உயர்ந்த அணிகலன்களே அணிந் திருந்தது. அப்பட்சியைக் கண்டு கௌத மன் அதிசயம் அடைந்தான். அதனேக் கொல்ல வேண்டும் என்று கருதினுன்.

பட்சி, "ஓ பிராம்மணரே! உமக்கு நல் வரவுஎன்னுடையவீட்டையடைந்தஉம்மை நான் உபசரிக்கும் கடமை பூண்டிருக்கின் றேன். நீர் எனது அதிதி. உனக்கு வேண் டியவற்றையெல்லாம நான் தருவேன். பசியாலும் தாகத்தாலும் நீர் களைப்புற்றி ருக்கின்றீர்" என்றது. அதனுடைய அழ கையும், இனிய குரலேயும், கனியமுதம் போன்ற குணத்தையும் பார்த்து, அவன் ஆச்சரியம் அடைந்தான்.

ராஜதர்மன், "ஐயா! நான் காசிப ருடைய புத்தின். தாட்சாயணி என்ற மகா பதிவிரதை என் தாய். பிறருக்கு உதவி செய்வதே என்னுடைய வேலே. உம்மைப் பார்ததால் இரககம் ஏறபடுகினறது. நல்ல குணஙகளே யுடையவராக நீர் காணப்படு கினறீர்" எனறு கூறியது. பின்னும சால மரதநின் நறுமலர்களேக கொணடுவநது மெததைபோல பரப்பி அதில அவனே அமரச் செய்தது. கங்கா நதியில் வசிக்கும் மீன்களேக் கொணர்ந்து அவனுக்கு முன் குவித்தது. நெருபபை அதிகப்படுத்தியது. 'ஐயா! உணவு எசய்யும்' எனறு அனபுடன் கூறியது.

பிராமணன் மீன்களே நெருப்பில் சுட்டு நிரம்ப உண்டு பசியாறினுன். அவனுடைய களைப்பை மாற்றும்பொருட்டு ராஜதாமன் தனது சிறகுகளே வீசியது; மலர்களே நிரம் பக கொணாந்து பரப்பிப்படுக்கை யமைத்து 'ஐயனே! இதில் சுகமாகப் படுததுக் கொள்ளும்' என்றது. அவன் அதில் ஆனந்தமாகப் படுத்துக் கொண்டான்.

அவன் அருகில் பறவை யமர்ந்து, உற வினரைப் போல் உபசரித்து, தாங்கள் யார்? தங்கள் உறவினர் யார்? எங்கு வந்தீர்! என்று கேடடது.

"நான் கௌதம கோத்திரத்திற் பிறந்த வன். பிராம்மணன். என்பேர் கௌதமன். மிகுந்த ஏழை. கப்பலில் சென்று பொருள் தேடலாம் என்று நினைத்து வந்தேன்" என்ருன்.

ராஜதர்மன் என்ற பட்சி, "ஐயா! நீர் வருந்த வேண்டாம். நல்ல நண்பனேயுடை யவனுக்குத் துன்பம் வராது; உனக்கு நான் தக்க உதவிகளேச் செய்வேன். நிரம்

பிய தனத்தை நீர் அடைவதற்குரிய உபாயத்தை உரைப்பேன். கவலையை விட்டுவிடும். பொருளை அடையத் தக்க வழி நான்கு என்று வியாழ பகவான் கூறியிருக்கிறார்.

அவை கல்வி, பொன், அறிவு, நண்பன் இந்த நான்கும் என அறிக. அன்பரே! நான் உமக்கு நிரம்பவும் பொருள் வரும் வழியைக்கூறுகின்றேன். கவலையைவிடும்'' என்று இனிய மொழி கூறியது.

அன்றிரவு சுகமே கழிந்தது. மறுநாள் காலை கொக்கரசன், ''பிரம்மணரே! இரவு சுகமே கழிந்ததா? உடம்பு நலமாக இருக்கின்றதா? மனம் சாந்தியாக உளதா? இனி உமக்குப் பொன் வரும் வழியைச் சொல்லுவேன். இதோ இந்த வழியாகச் செல்லும்; இங்கிருந்து மூன்று யோசனை தூரம் சென்றால் மனுவிரஜம் என்ற நகரை அடைவாய். அசுரர்களுக்கு அதிபதியும் மகானுபாவனும் ஆன விருபாட்சன் என்ற புகழ்பெற்றவன் இருக்கின்றான். அவன் என்னுடைய நண்பன்; அவன் பரம உபகாரி; நீர் அவனிடம் செல்லும்; இதோ இந்த என் உடம்பிலுள்ள பொன் போன்ற இறகைக் கொண்டு கொடுத்து, என்னுடைய நண்பன் என்று கூறும்; அவன் உமக்கு நிரம்பவும் பொன்னும் மணியும் வழங்குவான; சந்தேகமில்லை; உமக்கு நன்மையே வரும்; போய் வாரும்'' என்று கூறியது.

''நல்லது'' என்று கூறிக்கௌதமன் அமுதத்துக்கு ஒப்பான பழங்களைத் திருப்தியாக உண்டுவிட்டு, ராஜதர்மாவிடம் விடை பெற்றுப் புறப்பட்டான்.

சந்தன மரங்களும், அகில் ஆச்சா முதலிய மரங்களும், நிரம்பிய வனத்தின் வழியே சுகமே நடந்தான். பின்னர் மனுவிரஜம் என்ற பட்டினத்தை யடைந்தான். கடைக் காவலர்கள் சென்று அவன்வரவை விருபாட்சனிடம் தெரிவித்தார்கள். அவனை அவன் முறைப்படி மரியாதை செய்து வரவேற்றான். கௌதமன் அந்நகரின் சிறப்பைக் கண்டு வியந்தான்.

விருபாட்சன் வேதியனை நல்ல பீடத்தின் மீது இருக்கச் செய்தான். பாத நீர் கொடுத்துப் பூசித்தான். ''நீர் என்ன கோத்திரம்? வேதங்களையெல்லாம் நன்கு அத்யயனம் செய்திருக்கின்றீரா? நீர் எங்கிருந்து வருகின்றீர்? உமக்கு நல்வரவு'' என்று கூறினன்.

பிராமணன், ''அன்பா! நான் மத்திய தேசத்தவன். வேடர்கள் வாழும் சேரியில் வாழ்கின்றேன். ஒரு வேடுவச்சி இரண்டாவது முறையாக என்னை மணந்து கொண்டாள். நான் வேதம் படிக்கவில்லை வறுமையால் வாடி வந்தேன். உமது நண்பனாகிய ராஜதர்மன் என்ற கொக்கு என்னை உன்பால் அனுப்பியது ''என்றான்.

விருபாட்சன் இதைக்கேட்டு உள்ளத்தில் ஆலோசிக்கின்றான். 'இவன் வேதம் படியாத பதிதன். இழிகுலத்தாளை மணந்தவன். இவன் எப்படி ராஜதர்மாவுக்கு நண்பனானன். அப் பட்சி உத்தம குணமுடையது. எனக்கு உடன் பிறந்தானைப் போன்ற நட்புடையது. அதன் விருப்பத்துக்காவது இவனுக்கு நான் உதவி செய்ய வேண்டும். நாளை கார்த்திகை மாதம் பவுர்ணமி. ஆயிரம் வேதியர்கள் நாளை என் அரண்மனையில் போஜனஞ் செய்வார்கள். அவர்களுடன் இவனும் உபசாரம் பெறட்டும்' என்று தனக்குள் சிந்தித்தான்.

மறுநாள் ஆயிரம் பிராமணர்கள் வந்தார்கள். அவர்களுடன் கௌதமனும் சேர்ந்து கொண்டான். எல்லோரும் சந்தனம் பூசிக் கொண்டார்கள். மாலை சூட்டி அவர்களை நன்கு உபசரித்தான் விருபாட்சன். அவர்களைச் சிறந்த அதிதிகள் என்று கருதித் தங்கப் பாத்திரங்களில் பாலும் தேனும் நெய்யும் நிறைத்துத் தானம் பண்ணினன். அவன் இவ்வாறு ஆஷாட மாதப் பூரணையிலும், மாகமாதப் பூரணையிலும், பிராம்மண அதிதிகளை வரவழைத்து, மிக்க பய பக்தியுடன் வழிபட்டுத் தான தருமங்களைச் செய்வான்.

அத்தனை அந்தணர்களுக்கும் பொன்னும் நவரத்தினங்களும் தட்சணைகளாகத் தந்தான். கம்பளங்கள், பொன்னுடைகள், வைர வைடூரியங்கள் இழைத்த தங்கப் பாத்திரங்களை வழங்கினன்.

''உங்களுக்கு வந்தனம். நீங்கள் சுகமே போய் வாருங்கள்'' என்று விடைகொடுத்தான். பிராம்மணர்கள் தங்கள் தங்களுக்குத் தந்த தங்கபாத்திரங்களையும் நவமணிகளையும் ஆடை அணிகலன்களையும் சுமந்து கொண்டு, அவனை வாழ்த்திவிட்டுச் சென்றார்கள்

கௌதமனும் மிக்க மகிழ்ச்சியுடன் தனக்குத் தந்த தங்கப் பாத்திரங்கள், பொன், ஆடைகள், நவரத்தினங்கள் ஆகியவற்றைச் சுமந்து கொண்டு புறப் பட்டான். விரைவாக ஆலமரத்தை யடைந் தான். ராஜதர்மா பசிதாகத்துடன்களைத்து வந்த அவனை அன்புடன் வரவேற்றது. சிறகால் வீசிக் காற்றையுண்டாக்கி அவனு டைய இளைப்பை மாற்றியது.

''அன்பரே நீர் சுகமே சென்று விருபாட் சனைக் கண்டீரா? என் நண்பனாகிய அவன் உம்மைத் தக்கபடி உபசரித்தானா? போது மான பொன் தந்தானா?'' என்றுவினவியது.

கௌதமன், ''ஆம் நன்கு அன்புடன் பேணி உபசரித்தான். நிரம்பப் பொன் னும் மணியுந் தந்தான். உன் நண்பன் என்ற வகையினால், நல்ல மாதிரி என்னை வரவேற்று அன்பு செய்தான். ஒரு குறை யுமில்லை'' என்றான்.

கொக்கு நல்ல இனிய கனிகளைக் கொணர்ந்து தந்து பசியாறச் செய்தது. மலர்களைப் பரப்பியது. கௌதமன் அதன் மீது படுத்தான். ராஜதர்மா என்ற அந்த கொக்கு மிக்க அன்புடன் அவன் அருகில் படுத்து உறங்கியது.

''நான் நாளைக்காலை இந்தப் பொன் முதலியவைகளைச்சுமந்துகொண்டு நடந்து போகவேண்டும். நெடுந்தூரம் உளது. வழியில் உணவு கிடைப்பது அரிது. ஆத லால் நிரம்பவும் பருத்திருக்கின்ற இந்தக் கொக்கைக் கொன்று எடுத்துக்கொண் டால் வழிக்கு உணவாக உதவும்'' என்று நன்றிகெட்ட அப்பாதகன் ஆலோ சித்தாள்.

தன் அருகில் நம்பி உறங்கிக் கொண்டி ருந்த அந்த அன்புள்ள பட்சியை, அருகில் எரிந்துகொண்டிருந்த ஒரு கொள்ளிக் கட்டையை எடுத்துக் கொன்றுவிட்டான். அவன் மனதில் சிறிதாவது கருணையில்லை. அப்பறவையைத் தீயினால் சுட்டுப் பக்குவம் பண்ணினான். அதை ஒரு தோளில் வைத் துக் கொண்டு, பொன் குவியலை எடுத்துக் கொண்டு, வேகமாகப் புறப்பட்டான்.

விரூபாட்சன் என்ற அசுர மன்னன் வழக்கம்போல் தனது நண்பனாகிய தாட்சா யணியின் பிள்ளை ராஜதர்மன் வராமல் இருப்பதுபற்றி வருந்தினான். அதற்கு ஏதாவது வந்துவிட்டதோ என்று துக்கப் பட்டான். தன் புதல்வனைப் பார்த்து ''மகனே! எனது நண்பனாகியராஜதர்மனைக் காணேன். அது எப்பொழுதும் முதல் சந் தியில் பிரமதேவரை வணங்கச் செல்லும். சென்று திரும்பும்போது என்னைப் பார்த்து விட்டுத்தான் போகும். அது வாராமையால் என் மனம் வருந்துகின்றது. புத்தி கலங்கு கின்றது. ஒருவேளை அதமனான பிராம்மணா னால் அதற்கு ஆபத்து வந்திருக்கக்கூடும். நீ சென்று அதன் நலத்தை யறிந்து வா'' என்றான்.

அம்மைந்தன் பல அசுரர்கள் சூழப் புறப் பட்டான். ஆலமரத்தினிடம் வந்தான். ராஜதர்மாவின் இறகுகள் சிதறுண்டு கிடப் பதையும், அதன் உதிரத்தால் பூமி நனைந் திருப்பதையும் கண்டான். அந்தோ! என்று கூவியழுதான். அந்தப் பாவியை விடக் கூடாது என்று எண்ணி, அசுரர்களுடன் வேகமாக ஓடினான். வழியில் கௌதமனைப் பிடித்து ''சண்டாளா? நன்றி மறந்த நாயே? உனக்கு நற்கதி கிடைக்குமா? நீ பிராம்மணனா? உண்ட வீட்டிற்கு இரண்ட கஞ்செய்தவனே! அறிவில்லாதஅதமனே'' என்று வைது, அவனைப் பிடித்துக்கொண்டு தந்தையிடம் காட்டினான்.

விரூபாட்சன் இப்பாதகனைக் கொல்லுங் கள்! இவனுக்கு என் நண்பன் எந்த எந்த வகையில் உதவி செய்தான்!

''ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை,
கடைமுறை
தான்சாந் துயரந் தரும்''

என்றபடி கொடியவர்களுடைய கூட்டுற வால் என் நண்பன் மடிய நேர்ந்தது. இவ னைக் கண்டம் கண்டமாக வெட்டுங்கள் என்றான்.

உடனே அசுரர்கள் கத்தியெடுத்துத் துண்டித்தார்கள். விரூபாட்சன் ''நன்றி கெட்ட இப்பாதகனை நான், தின்ன மாட் டேன். இவன் உடம்பை வேலைக்காரர் களிடம் கொடுங்கள்'' என்றான்.

வேலைக்காரர்களும் பிற அசுரர்களும் நன்றி மறந்த அவனைத் தின்ன மறுத்து விட்டார்கள். நாய் நரிகள் முதலிய கொடிய விலங்குகளும் மோந்து பார்த்து விட்டு அருந்தாமல் ஓடிவிட்டன.

உலகில் குருதாரகமனம் களவு கொலை புலை முதலிய பாவங்களைச் செய்தவர்கட்குக் கழுவாயுண்டு. நன்றி மறந்தவருக்கும் நண்பரை ஏமாற்றியவருக்கும் கழுவாய் கிடையாது.

விரூபாட்சன் ராஜதர்மா என்ற கொக்கைச் சந்தனக் கட்டைகளின் மீது தகனஞ் செய்தான். அப்போது இந்திரன் வந்து அமிர்தத்தால் நனைத்தான். கொக்கு உயிர் பெற்று எழுந்தது. எழுந்து இந்திரனைக் கண்டு வணங்கி "என் அன்புள்ள நண்பன் கௌதமன் எங்கே?" அவன் இன்றி நான் வாழமாட்டேன் என்று நவின்றது.

அதனுடைய இனிய சொல்லுக்காக இந்திரன் கௌதமனைப் பிழைப்பித்தான். கௌதமன் மிக்க நாணத்துடன் தன மூட்டையைச் சுமந்து வேடச்சேரிக்குச் சென்று சிலகாலம் வாழ்ந்து, நரகத்தையடைந்தான்.

ஆதலால் நண்பர்களுக்குத் தீங்கு செய்யக்கூடாது. நன்றி மறக்கக் கூடாது. நன்றி மறந்தவனும், நட்புக் கெட்டவனும் கொடிய நரகினை யடைவான்.

ஒருவனுக்குத் தன லாபம், மித்திர லாபம் இந்த இரண்டிலும், மித்திரலாபமே சிறந்தது என்று பீஷ்மர் தருமருக்குக் கூறினார்.

## செய்திச் சுருக்கம்

**சைவ சித்தாந்த வகுப்பு:**

1. காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீன குரு மடாலயத்தில், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் என்னும் இரு நூல்களும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம்அவர்களால் பாடமாகத் தொடங்கித் தொடர்ந்து நடத்தப் பெறும். வெள்ளிக் கிழமை மாலைகளில், பெரியபுராணச் சொற்பொழிவுகள் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களால் தொடர்ந்து நிகழ்த்தப்படும்.

2. சிதம்பரம் ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியா சாலையில், தேவகோட்டை சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களால் 'உண்மை விளக்கம்' என்னும் சைவசித்தாந்த நூற் பாடம், ஒவ்வொரு ஆங்கில மாதமும், முதல் சனி-ஞாயிறு ஆகிய இருநாட்களில் தொடர்ந்து நடைபெற்று வரும்.

**அருணகிரிநாதர் திருவிழா:**

திருவண்ணாமலையில் ஆகஸ்டு 14. 15, 16 தேதிகளில் வழக்கம் போல் சிறப்பாக நடைபெறும். சென்னைத் துணை ஆணையர் திரு. எ. சிதம்பரம் அவர்களும், சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்களும், தமிழ்க்கடல் திரு. இராய. சொ அவர்களும், வாகீச கலாநிதி திரு கி. வா. ஜ. அவர்களும் போன்ற பெருமக்கள் பலரும் கலந்து கொள்ளுகின்றனர்.

**தமிழகத்து ஜினர் மலைகள் சுற்றுலா:**

'ஜீவபந்து' திரு. டி. எஸ். ஸ்ரீபால், திரு. கே. ஜே. அகஸ்தியப்பர், திரு. எஸ். ஏ. அப்பாண்டை முதலிய பெருமக்களின் முயற்சியால் 23-7-67 முதல் 30-7-67 முடிய ஒருவாரம், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலுமுள்ள ஜினர்மலைகளை (34) ஜைனப் பெருமக்கள் பலர் சென்று தரிசித்து வந்தனர்.

# எதிரில்லாத உறவு

["பாலகவி" வயிநாகரம். வே. இராமநாதன் செட்டியார்.
(தத்புருஷ தேசிகர்) தேவகோட்டை.]

நம்முடைய இன்ப துன்பங்களிற் பங்கு கொண்டு, அவற்றைத் தம்முடையனவாகவும் கருதி, நம்மோடு உடனுறைபவர்களே உறவினர்கள் ஆவார்கள். இன்பக் காலத்தில் உடனிருந்து துன்பக் காலத்தில் பிரிந்து செல்லுபவர்கள் உறவினர்களாக மாட்டார்கள். அன்றியும் தந்நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தமக்கு ஏதேனும் உதவி கிடைத்துக் கொண்டிருக்கிறவரை நம்மோடு தொடர்புடையவர்களாயிருந்து அவ்வுதவி நின்று போகும் வேளையில் பிரிந்து செல்லும் தீக்குணம் படைத்தவர்களும் இந்நிலவுலகத்தில் இல்லாமலில்லை.

உறவினர் எப்படிப் பட்டவர்களா யிருத்தல் வேண்டுமென்பதை ஔவைப் பிராட்டியார் தமது மூதுரைச் செய்யுளொன்றில் தெளிவுபடுத்துகின்றார்.

"அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—
அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்
போலவே
ஒட்டி யுறுவார் உறவு"

என்பது அச்செய்யுள். குளத்தில் நீர் இருக்கிறவரையில், அங்கே வாழுகின்ற நீர் வாழ் பிராணிகளை இரைகொள்ளும் இச்சையால், அக்குளத்தோடு உறவுகொண்டிருந்து நீர் வற்றிய பின்னர் அதனை நாடாதிருப்பது நாரை முதலிய பறவைகளின் இயல்பு. கொட்டி, ஆம்பல் நெய்தல் முதலிய நீர்ப்பூக்கள் குளத்தில் நீர் வற்றிய போதும் அதனைவிட்டு நீங்குவதில்லை. குளத்தோடு பறவைகள் கொள்ளுகின்ற உறவு, உறவு போலக் காணப்படுமாயினும், அது உண்மையுறவாக மாட்டாது. கொட்டியாதியவற்றின் உறவே உண்மையுறவாகும் என்பது முதலியன, இச்செய்யுளால் அறியப்பெறுவனவாகும்.

தம்பயன் ஒன்றே கருதி நம்முடன் போலியுறவு கொள்வாரிடத்து நாம் மிகமிக எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். அங்ஙனமின்றி உண்மையாகவே நமது நல்வாழ்வில் குறிக்கோளுடையவர்களாயிருக்கும் நல்லுறவினர்கள் நமக்குக் கிடைத்தார்களாயின், அது நமதுபுண்ணியத்தின் பயனாகப் பொருந்தியதென்று கொள்ளத் தக்கதாகும். இத்தகைய நல்லுறவினர்களும் கூட நமது உடல் பற்றிய நிலையில் நின்று ஒரு பிறப்புக்கு மட்டுந்தான் உடன் பொருந்துபவர்களாயிருப்பார்கள். உயிருறவுகள் அனைத்தும் உடல் காரணமாகவே உண்டாவனவாதலின் உடல் நீங்குகிற பொழுது, அது காரணமாகவே வந்த அவ்வுறவும் நீங்கி விடுகிறது.

நிலையில்லாத உடல் பற்றி நிகழும் உறவுகள் மட்டுந்தான் போலியாகவும், உண்மையாகவும் அமைந்திருக்கும். நிலையுள்ளதாகிய உயிர் பற்றி நிகழும் உண்மை உறவொன்று, எல்லா வுயிர்களுக்கும் எந்தக் காலத்திலும் உண்டென்பது உணர வேண்டியதாகும். இந்த உறவே இறைவன் உறவு. அவன் நம்மிடத்தில் நீங்காத உறவுகொண்டு நமது

நன்மைப் பேற்றில் திருவுள்ளம் பற்றிய வனாய், அதற்கான அறிவிச்சை செயல் களை யுடையவனாய் எழுந்தருளியிருக்கின் றான். ஆனால் அவனது இப் பேருதவியை யுணர்ந்து அவனுடன் நாமும் உறவு கொண்டு பயன்பெற வேண்டுமென்று நம் மிற் பெரும்பாலோர் கருதுகின்றார் களில்லை.

திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக் கின்ற மாசிலாமணி யீசரை ஆளுடைய அரசரும், ஆளுடைய நம்பியும் உறவாகக் கொண்டு ஓதிய திருப்பதிகக் குறிப்புக்கள் இங்கே சிந்திததறகுரியன. அப்பர் சுவாமி கள் தமது திருததாண்டகத்தில் "திருவே யென செலவமே தேனே வானோர், செழுஞ் சுடரே செழுஞ் சுடர் நற் சோதிமிகக, உருவேயென் உறவே" என்று இறைவனை அழைத்தருளுகின்றார். நம்பியாரூரர் தக் கேசிப் பண்ணிலமைதத தமது திருப்பதி கத்தில் பாடல்கள் தோறும் "ஆரெனக்கு உறவு? அமரர்கள் ஏறே" என்ற சொற் றொடரை அமைத்துச் சிவபெருமானை யன்றித் தமக்கு வேறோர் உறவில்லை என் பதைத் தெளிபடுத்துகின்றார்.

உயிர்களின் உறவு ஓரோர்கால் துன்பத் தையும் தரும். இறைவன் உறவு எந்த வேளையிலும் துன்பத்தைத் தராது, எப் போதும் இன்பத்தையே தரும். உயிர் களின் உறவு உடலோடு நீங்கும். இறை வன் உறவு என்றும் நீங்காது. உயிர் களின் உறவு ஓரோர்கால் கைம்மாறு கருதி நிற்கும். இறைவன் உறவு எந்தக் காலத்திலும் எதையும் விரும்பாது பயன் தரும். உயிர்களின் உறவால் நிலையில் லாத பயன்கள் கிடைக்கக்கூடும். இறை வன் உறவால் என்றும் அழியாத உயர்ந்த பயன் கிடைத்து விடும். இவற்றையெல் லாம் திருவுள்ளத்திற் கொண்டு திருமூல தேவ நாயனார் தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்துப் பதினேழாவது செய் யுளை நமக்கு வழங்கியருளுகின்றார். அத் திருப்பாடல்,

"காயம் இரண்டும் கலந்து கொதிக்கினும்
ஆயம் கத்தூரி யதுமிகும்; அவ்வழி
தேசம் கலந்தொரு தேவனென்
றெண்ணினும்
ஈசன் உறவுக்கு எதிரில்லை தானே"

என்பதாகும்.

உயிர்கள் பெறுகின்ற உடம்புகள் இரண்டு வகையின. ஒன்று தூலம்; மற் றொன்று சூக்குமம். புறத்தே காணப் பெறும் நமது தூல சரீரத்திற்குள் ஒன்றி னுள் ஒன்றாக இன்னும் நான்கு சரீரங்கள் உள்ளன. அவை முறையே ஒன்றுக் கொன்று சூக்குமமாயிருப்பன. இவ்வைந்து சரீரங்களையும் அன்ன மய கோசம், பிராண மய கோசம், மனோ மய கோசம், விஞ்ஞான மய கோசம், ஆனந்த மய கோச மென்று நூல்கள் கூறும். இவற் றைத் தூல சரீரம், சூக்கும சரீரம், குண சரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரம் என் றும் சொல்லுவதுண்டு.

கேவல நிலையில் அறிவிச்சை செயல்கள் விளங்கப் பெறாது ஆணவத்தில் அத்து விதமாய் நின்ற உயிர், அசுத்த மாயா தத்துவத்தைப் பொருந்திப் பொது வகை யால் அறிவிச்சை செயல்கள் விளங்கும் படி நிற்கும் நிலையில் அமைவது ஆனந்த மய கோசமாகிய காரண சரீரம். பின்னர்க் கலை, வித்தை, அராகம், ஆதிய தத்து வங்களைப் பொருந்தி அறிவிச்சை செயல் கள் சிறப்பு வகையால் விளங்கப் பெற்று

நிற்கும் நிலையில் அமைவது விஞ்ஞான மய கோசமாகிய கஞ்சுக சரீரம். இதன்பின் அந்தக் கரணங்களின் தன்மை விளங்கப் பெற்று நிற்கும் நிலையில் அமைவது, மனோ மய கோசமாகிய குண சரீரம்.

அதன்பின் பிராணவாயு சம்பந்தம் பெற்று அதன் மயமாய் நிற்கும் நிலையில் அமைவது பிராண மய கோசமாகிய சூக்கும சரீரம். இறுதியில் வருகின்ற தூல சரீரம் அதனை வளர்ப்பதற்குரிய அன்ன மயமாய் நின்று அன்னமய கோசமெனப் பெயர் பெறுகின்றது. இவ்வைந்து சரீரங் களிலும் உயிர், வேற்றுமையின்றி நின்று அவற்றைச் செலுத்துவதுடன், அச்சரீரங் களிற் கட்டுண்டு அதுவதுவாய், ஏகதேசி யாய் அவற்றிற் போக்கு வரவும் செய்யும். இதனை,

மருவா னந்தம் விஞ்ஞானம்
மனோ பிராணன் அன்னமயம்
உருவாம் தன்மை யுண்டாய், முன்
ஒன்றுக் கொன்று சூக்குமமாய்,
வருமாம்; அன்ன மயம்பற்றி
மாயை முதற்கா ரணம் ஆகும்.
அருவாய் ஆன்மா ஐங்கோசத்து
ஆர்ப்புண் டவற்றின் அகம்புறமாம்.

என்று சிவஞான சித்தியார் செய்யுள் உணர்த்துகின்றது.

சூக்குமம் - தூலமென்றும், பரம் - அபர மென்றும் சொல்லப் பெறுகிற இருவகை உடம்புகளிலும் உயிர் கலந்துகூடி அநு பவிக்கின்ற பொழுது அதற்கு ஒருவகை இன்பமும் ஒளியும் உண்டாகும். இதனை "காயம் இரண்டும் கலந்து கொதிக்கினும் ஆயம் கத்தூரியது மிகும்'' என்று ஆசிரியர் உணர்த்தினார். இங்கே "கத் தூரி" என்பது, அதன் மணத்தையும் மதத்தையும் அறிவுறுத்தி,உயிர்கள் பெறும் இன்பத்தையும் ஒளியையும் உணர்த்திக் கொண்டிருக்கின்றது.

இங்ஙனம் மாயா மலத் தொடர்பால் வந்த சிற்றின்பத்தையும், சிற்றறிவையும் உடைய உயிர்கள் முன்னமேயே உள்ள ஆணவ மலச் சேர்க்கையால் தம்மையே கடவுளென்று எண்ணி விடுகின்றன. அங் ஙனம் அவைகள் எண்ணிக் கொள்ளுவ தால் கடவுளாகி விடமுடியுமா? வேண்டு மானால் "நாங்களே கடவுள் என்றிடும் பாதகத்தவர்'' என்பதில் தாயுமான அடி கள் சூட்டும் சிறப்புப் பெயரை, அவைகள் பெற்றுக் கொள்ளலாம்.

பெத்தக் காலத்திலும் முத்திக் காலத்தி லும் இடையீடில்லாத உறவு பூண்டு இன்பம் நல்கும் இறைவனுக்கு இணை யான உறவு உயிர்களுக்கு எப்போதும் இல்லை என்பதை உணர்ந்து ஒழுகுவது அறிவுடைமையாகும். இதனைத் "தேசம் கலந்தொரு தேவனென்றெண்ணினும், ஈசன் உறவுக் கெதிரில்லை தானே'' என்ற இறுதிப் பகுதியில் ஆசிரியர் திருமூல தேவ நாயனார்அழகுற அறிய வைத் தருளு கின்றார்.



CONNEMARA PUBLIC LIBRARY
14 SEP 19
MADRAS

புதிய அறநிலைய ஆணையாளராகிய திரு. ஆ. இராதா கிருஷ்ணன், M.A.,B.L., அவர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு உரைஞராக இருந்து வந்தார். 1944-ஆம் ஆண்டில் மாவட்ட நடுவராக நேரடி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார். வாடகைக் கட்டுப்பாட்டுத் தலைமை அலுவலகராகப் பணியாற்றினார். தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில், சட்டத் துறையில், நேர் உதவிச் செயலாளராகப் பணிபுரிந்து, 1959-ஆம் ஆண்டில் துணைச் செயலாளராக உயர்த்தப்பெற்றார். 1966-ஆம் ஆண்டில், சென்னையில் தமிழக அரசின் போக்கு வரத்துத் துறையைச் சார்ந்த மேல்முறையீட்டு ஆய்வு நீதிபதியாக அமர்ந்தார். 23—8—1967 முதல் இந்து சமய அறநிலைய ஆணையாளராக நியமிக்கப் பெற்றுள்ளார்.

நமது புதிய அறநிலைய ஆணையர் அவர்கள், இறை யுணர்வும் சமயப் பண்பாடும் நிறைய உடையவர்கள். இவர்தம் அருமைத் துணைவியார், பெண்கள் பள்ளியின் ஆய்வாளராக இருந்து வருகின்றார். தமிழ்ப் புலமை உலகில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய திரு. பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மாள் அவர்களின் நெருங்கிய உறவினர், நமது ஆணையர் அவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது!

இத்தகைய சிறந்த நமது புதிய அறநிலைய ஆணையர் அவர்களின் பதவிக் காலத்தில், மேலும் பல சிறந்த நற்பணிகள் தொடர்ந்து வளர்ந்து நடைபெற, இறையருள் துணைபுரிவதாக!